
www.padippakam.com

16 - 31 மார்ச் 98 ☐ ரூ. 4.00

கோவை குண்டு வெடிப்பும் தீவிரவாதப் பீதியூட்டலும்

# புதிய ஜனநாயகம்



www.padippakam.com

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

## கரசேவகர்களுக்கு கல்யாண் சிங்கின் பரிசு

மகாராஷ்டிராவில் இந்துவெறியர்களின் கூட்டணி ஆட்சியில் அமர்ந்தவுடன், மராத்தா சாதி வெறியர்கள் மீது போடப்பட்டிருந்த 1000-க்கும் மேற்பட்ட தீண்டாமை வழக்குகளைத் திரும்பப் பெற்றனர். இப்பொழுது அதே பாணியில், உ.பி. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ள கல்யாண் சிங், 1990-ஆம் ஆண்டு அயோத்தியில் வெறியாட்டம் போட்ட கரசேவகர்கள் மீது அப்பொழுது ஆட்சியில் இருந்த முலயம் சிங் அரசு தொடுத்திருந்த வழக்குகளை எல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார். இவர்கள் மத்தியில் ஆட்சியைப் பிடித்தால், பாபர் மசூதியை இடித்ததற்காக பா.ஜ.க. தலைவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளின் மீதும் தண்ணீர் தெளித்துவிடத் தயங்க மாட்டார்கள்!

## டன்லப் ஆலைகளை ஏகாதிபத்தியங்களுக்குத் தாரை வார்க்கச் சதி

கல்கத்தாவிலும், அம்பத்தூரிலும் இயங்கி வந்த டன்லப் டயர் தொழிற்சாலைகள் பிப்ரவரி முதல் வாரத்தில் அடுத்தடுத்து மூடப்பட்டு விட்டன. கிட்டத்தட்ட 10,000 தொழிலாளர் குடும்பங்களின் எதிர்காலமே இன்று கேள்விக் குறியாகிவிட்டது. தொழிலாளர்களின் வாழ்க்கையைவிட 'மார்க்சிஸ்டு'களுக்கும், கருணாநிதிக்கும் தேர்தல் சூதாட்டம்தான் பெரிதாய்ப் போனது. தேர்தல் முடிந்த பின்பு அரசின் நிர்பந்தத்தால் இந்த இரு தொழிற்சாலைகளும் திறக்கப்பட்டாலும், அரசின் சம்மதத்துடனேயே சரிபாதி தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, ஜெர்மனி மற்றும் ஜப்பானைச் சேர்ந்த இரு நிறுவனங்களிடம் இத்தொழிற்சாலைகளை விற்றுவிடத் திட்டம் தயாராக உள்ளதாம்!

## போலீசின் குரூரப் புத்தி

மத்தியப் பிரதேச மாநிலத் தலைநகர் போபாலில் சிறிய தேநீர் விடுதி நடத்தி வந்த ஒருவரை, அம்மாநிலப் போலீசார், ஐந்து மாதங்களுக்கு முன்பு அடித்தே கொன்று விட்டனர். தனது கடையில் தேநீர் வாங்கிக் குடித்த போலீசாரிடம், குடித்த டீக்கு காசு கேட்டதுதான், அவர் செய்த 'குற்றமாம்'! அவரை அடித்துப் புரட்டிய அவ்வெறிபிடித்த கும்பல், அவர் மீது பொய் வழக்குப் பதிவு செய்து, சிறையிலும் தள்ளியது. சிறையில் அடைக்கப்பட்ட மூன்றாவது நாளே அந்த அப்பாவி மரணமடைந்து விட்டார். இந்த அத்துமீறலை விசாரித்து வரும் அம்மாநில உயர்நீதி மன்றம், அவரின் மனைவிக்கு இடைக்கால நிவாரணமாக 30,000 ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளது.

## பட்டினிச் சாவின் பிடியில் கேரளப் பழங்குடியினர்

கேரளா மாநிலத்திலுள்ள வயனாடு, காராப்புழா பகுதிகளில் வாழ்ந்து வரும் பழங்குடியினர் பட்டினியால் மாண்டு போகும் அபாயத்தில் சிக்கியுள்ளனர். பல மாதங்களாகவே உணவிற்கு வழியேதுமின்றி, அரைகுறைப் பட்டினியால், பலர் எலும்பும் தோலுமாகச் சாகக் கிடக்கின்றனர். சாந்தா என்ற 24 வயதுப் பெண்ணின் உடல் எடை இருபது கிலோவுக்கும் கீழே குறைந்து போய், இன்று உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார். பல்லாண்டு காலமாக இவர்கள் செய்து வந்த நெற்பயிர் விவசாயம் அறவே பொய்த்துப் போனதால் தான் இந்தப் பட்டினிச் சாவு அபாயம் எழுந்துள்ளது. ஒரிஸ்ஸாவைப் போல பலரும் செத்து மடிந்த பின்தான் கேரளாவை ஆளும் 'மார்க்சிஸ்டு'களுக்குக் கண் திறக்கும் போலும்!

## கலகம் பிறந்தால்தான் நியாயம் கிடைக்கும்

மரணப் படுக்கையில் வீழ்ந்து கிடக்கும் இந்தோனேஷியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த ஐ.எம்.எஃப் விதித்த கட்டளைக்கு இணங்க, அரிசி, சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்குக் கொடுத்து வந்த மானியங்களை நிறுத்தி விட்டது, அந்நாட்டு அரசாங்கம். உணவுப் பொருட்களின் தாறுமாறான விலையேற்றம், நாணய மதிப்பு வீழ்ச்சி, வேலையின்மை என அடுத்தடுத்து தொடுக்கப்பட்ட பொருளாதாரத் தாக்குதலால் பட்டினிப் படுகுழிக்குள் தள்ளப்பட்டுள்ள அந்நாட்டு ஏழைகள், ஆளும் கும்பலை எதிர்த்துக் கலகத்தில் இறங்கி விட்டனர். அந்நாட்டுப் பொருளாதாரத்தையே தங்கள் பிடியில் வைத்திருக்கும் சிறுபான்மையினரான சீனர்களின் வர்த்தக நிறுவனங்கள் பட்டினிப் பட்டாளத்தால் நாடெங்கும் சூறையாடப்பட்டு வருகின்றன. அரை வயிறு கஞ்சி ஊத்த வக்கற்ற ஆளும் கும்பலோ, போராடும் மக்களைச் சுட்டுக் கொன்றும், சிறையில் அடைத்தும் ஏகாதிபத்தியங்களுக்குச் சேவை செய்கிறது.

## ஐரோப்பாவில் மீண்டும் "கம்யூனிச பூதம்"

ஜெர்மன் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த தியாகத் தோழர்கள் வில்ஹெல்ம் லீப்னெக்ட், ரோசா லுக்சம்பர்க் - இருவரையும் நினைவு கூர்ந்து, ஜெர்மன் தலைநகர் பெர்லினில் சனவரி 11-ஆம் தேதி நடந்த ஊர்வலத்தில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ஜெர்மன் தொழிலாளர்கள் கலந்து கொண்டு அப்புரட்சியாளர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். கடந்த நான்கு ஆண்டுகளாகவே இத்தோழர்களை நினைவு கூர்ந்து ஜெர்மனியில் ஊர்வலம் நடந்துவந்த போதிலும், இந்த ஆண்டு கூடிய மக்கள் வெள்ளத்தைப் பார்த்து ஜெர்மன் போலீசும் திகைத்துப் போனது. ஏகாதிபத்தியங்கள் தலைகீழாக நின்றால் கூட, கம்யூனிசப் புரட்சியாளர்களின் நினைவை மக்கள் மனதில் இருந்து அகற்றிவிடவே முடியாது என்பதற்கு இந்த ஊர்வலமே சாட்சி!

## அமெரிக்க சமூகத்தின் அவலட்சணம்

அமெரிக்காவில், 30 ஜூன் '96 தொடங்கி ஜூலை '97-க்குள் - அதாவது அந்த ஒரு வருடத்திற்குள் அந்நாட்டில் 96,000 பேருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 1990 தொடங்கி, கடந்த ஏழு ஆண்டுகளுக்குள் அந்நாட்டுச் சிறைக் கைதிகளின் எண்ணிக்கை 5,77,100 அதிகரித்துள்ளது. இன்று கிட்டத்தட்ட 17 இலட்சம் அமெரிக்கர்கள் குற்றவாளிகளாக, அமெரிக்கச் சிறைகளில் வாடுகின்றனர். அதாவது, 155 அமெரிக்கர்களில் ஒருவர் தண்டனைக் கைதி. சிறையில் வாடும் சிறுவர்களின் எண்ணிக்கை 9,100. இப்படி குற்றவாளிகளை உருவாக்கித் தள்ளும் அமெரிக்க சமூகத்திற்கு என்ன தண்டனை கொடுப்பது?

## பங்குபத்திர பரிமாற்று வாரியத்தின் தலைவலி!

தாராளமயமாக்கலின் பின், ஆடு வளர்க்கிறோம், பன்றி வளர்க்கிறோம், தேக்கு மரம் வளர்க்கிறோம் எனக் கூறிக் கொண்டு புற்றீசல் போல் முளைத்த "பிளேடு கம்பெனி"களின் எண்ணிக்கை இன்று 1,000-ஐத் தொட்டுவிட்டது. இம்மோசடி நிறுவனங்கள் கிட்டத்தட்ட 10,000 கோடி ரூபாய் வரை சுருட்டிக் கொண்டிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆயிரம் நிறுவனங்களுள் 315 நிறுவனங்கள் தான் அரசு உத்தரவின் படி பங்கு பத்திர பரிமாற்று வாரியத்திடம் தங்களின் திட்டங்களைப் பற்றி அறிக்கை கொடுத்துள்ளன. எனினும், இந்த நிறுவனங்கள் வளர்ந்து வருவதாகக் கூறியுள்ள ஆட்டையும், பன்றியையும் எப்படிக் கண்காணிப்பது என்பதுதான் இவ்வாரியத்தின் தலைவலியாம்!

சென்னை "டன்லப்" ஆலைத் தொழிலாளர்களின் போராட்டம்



www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 13

இதழ்: 7-9

16 பிப்.'98 - 31 மார்ச்'98

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# இந்து பாசிச ஆட்சி
# ஐ.மு. - இடதுகளின் கையாலாகாத்தனம்

பன்னிரெண்டாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் முடிவுகள் எந்தவொரு அரசியல் கட்சிக்கோ, எந்தவொரு கூட்டணிக்கோ, ஆட்சி நடத்தும் உரிமை வழங்கும் அறுதிப் பெரும்பான்மை பலத்தைத் தரவில்லை. தேர்தல் முடிவுகள் தாம் கூறி வருவதைப் போல இருக்காது என்று அறிந்தும், ஓட்டுப் பொறுக்கும் அரசியல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகவே பாரதீய ஜனதாவும், காங்கிரசும் தாமே தனித்த பெரும்பான்மை பெற்றுவிடப் போவதாகப் புளுகி வந்தனர். கடும் சரிவைச் சந்தித்த ஐக்கிய முன்னணி - இடது சாரி அணிகூட அப்படி ஒரு மாயையை உருவாக்க முயன்றது. தனிக் கட்சியை விடுங்கள்; எந்தவொரு கூட்டணிக்கும் அப்படி வாய்ப்புக் கிட்டவில்லை. இப்போது தொங்குநிலை நாடாளுமன்றம் அமைந்திருப்பது அனைவரும் எதிர்பார்த்த முடிவுதான் என்றாலும், இதிலும் ஆச்சரியங்கள் இல்லாமல் இல்லை. குறிப்பாக, தமிழ்நாட்டில் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா அணியின் வெற்றி அக்கும்பலே எதிர்பாராத ஆச்சரியம்தான்.

பரந்து விரிந்த இந்திய நாடு மொழி, இனம், சாதி, மதம், பண்பாடு, பிராந்திய ரீதியாக வேறுபட்டிருப்பதால், தொங்குநிலை நாடாளுமன்றம் தவிர்க்க முடியாது; இவற்றையெல்லாம் கடந்த அல்லது இவை அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய, நாடுதழுவிய ஓர் அரசியல் கட்சியோ, தலைமையோ கிடையாது. இந்த ஒரு காரணம் மட்டுமல்லாமல், கடந்த சில பொதுத் தேர்தல்கள் பெரும்பாலும் வேறு ஒரு பொதுப் போக்கை பொது நியதியாகவே கொண்டிருப்பதையும் காண முடிகிறது. ''வாக்குப் பதிவு நாளன்று மத்தியிலோ, மாநிலத்திலோ எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறதோ, அதைத் தோற்கடிப்பது, அதை எதிர்த்து நிற்கும் கட்சிகள் எவ்வளவு மோசமானவையாக இருந்தாலும் அதை வெற்றி பெறச் செய்வது'' என்று கங்கணங்கட்டிக் கொண்டு மக்கள் வாக்களிக்கிறார்கள்.

''ஆளுவோர் மீதான வெறுப்பு - எதிர்ப்பு'' என்கிற அடிப்படையிலேயே மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், ஒரிசா, கோவா, மேகாலயா ஆகிய மாநிலங்களில் ஆளும் காங்கிரசையும், குஜராத்தில் ராஷ்ட்ரிய ஜனதா கட்சி, அதை ஆதரித்த காங்கிரசையும், மராட்டியம், இராஜஸ்தான், அரியானாவில் பா.ஜ.க. மற்றும் சிவசேனா உட்பட அதன் கூட்டணிக் கட்சிகளையும், தமிழ்நாட்டில் தி.மு.க., ஆந்திராவில் தெலுங்கு தேசம், அசாமில் அசாம் கண பரிசத், கர்நாடகாவில் ஜனதா தளம், பீகாரில் லல்லுவின் கட்சி ஆகியவற்றை மக்கள் தோற்கடித்திருக்கிறார்கள். கேரளா, மேற்கு வங்கத்தில் ஆளும் இடது சாரி அணி கணிசமான பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. உத்திரப் பிரதேசத்தில் நடந்த சமீபத்திய அரசியல் கூத்துகள் காரணமாக அங்கும், பீகாரிலும் கலவையான முடிவுகளே வந்துள்ளன. பா.ஜ.க. அவ்விரு மாநிலங்களிலும் எதிர்பார்த்த அளவு பெரும் வெற்றியைச் சாதிக்க முடியவில்லை.

சில மாநிலங்களில் காங்கிரசும், சில மாநிலங்களில் பாரதீய ஜனதாக் கட்சியும் திரட்டியுள்ள பார்ப்பன - மேல் சாதி ஓட்டு வங்கி, கான்சிராம் திரட்டியுள்ள தாழ்த்தப்பட்டோர் ஓட்டு வங்கி, முலயம் சிங்கும் லல்லு பிரசாத்தும் திரட்டியுள்ள யாதவர் - இசுலாமியர் ஓட்டு வங்கி ஆகியவை மாறாமல் அக்கட்சிகளையே ஆதரித்துள்ளன. இப்படிபட்ட ஓட்டு வங்கியைத் தவிர மிதக்கும் வாக்காளர்கள் அனைவரும், ''ஆளுவோருக்கு எதிராக வாக்களிப்பது'' என்பதே பொது நியதியாக உள்ளது. இந்த நியதிதான் இப்போதுள்ள அரசியல் கட்சிகள் எல்லாவற்றின் வயிற்றைக் கலக்குவது; ''நாடாளுமன்ற தொங்கு நிலை'' மீண்டும் மீண்டும் ஏற்படுவதற்கான இன்னொரு முக்கியக் காரணமாகவும் இருக்கிறது.

ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலும் தங்கள் உடனடி எதிரியாக அந்தந்த மாநில ஆட்சியாளர்களையே காண்கிறார்கள். அதைத் தாண்டிய ''தேசியக் கண்ணோட்டம்'', ''முழுமையான பார்வை'' என்பதெல்லாம் கிடையாது. தாங்கள் வெற்றிபெறச் செய்பவர்களின் யோக்கியதை பற்றியெல்லாம்கூடப் பரிசீலிப்பதில்லை. எனவேதான் ஜெயலலிதாவின் அதிமுக, தேவிலாலின் அரியானா லோக்தளம் போன்ற கேடுகெட்டவர்களையும், மம்தா பானர்ஜி, நவீன் பட்நாயக், சிவபார்வதி போன்ற அரசியல் அனாமதேயங்கள்கூட மக்கள் ஆதரவைப் பெற்று விடுகின்றனர். இன்னும் சமூக விரோத - கிரிமினல் குற்றவாளிகள் என்று அப்பட்டமாகத் தெரிந்தவர்களைக்கூடத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

''நிலையான ஆட்சி, நல்ல நிர்வாகம், இலஞ்ச ஊழல் எதிர்ப்பு, கிரிமினல் மய ஒழிப்பு'' போன்ற நாடு முழுமைக்குமான முழக்கங்களை விட, தங்களை நேரடியாகப் பாதிக்கும் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற உடனடிப் பிரச்சினைகளை வைத்தே தீர்மானிக்கிறார்கள்.

''ஆளுவோருக்கு எதிராக வாக்களிப்பது'' என்கிற நியதி உண்மையில் அரசியல் கட்சிகள் அனைத்திற்குமே வயிற்றில் புளி கரைப்பது, அரசியல் அமைப்பையே ஆட்டங்காணச் செய்வது; இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று விட்டோம் என்பதற்காக யாருமே குதூகளிக்க முடியாது; விரைவிலேயே அடுத்த தேர்தலில் கவிழ்க்கப்படுவார்கள் என்பதும் நிச்சயமாகி விட்டது. ஆகவே, கிடைத்த இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, முடிந்தவரை கொள்ளையடிப்பது என்ற வெறி அதிகமாகி, நாடாளுமன்ற அராஜகம் தீவிரமாகிவிட்டது.

நடந்து முடிந்த தேர்தல்களில் கடும் சரிவை சந்தித்தவை ஐக்கிய முன்னணிக் கட்சிகள். அதிலும் குறிப்பாக, ஜனதாதளம் ஏறக்குறைய முற்றாக நிராகரிக்கப்பட்டது; அதற்கு முன்பாகவே அடுத்தடுத்த பிளவுகளால் அது நொறுங்கிப் போய்விட்டது. இந்த இழப்புகளால் நாட்டின் இரண்டு பெரிய கட்சிகளான பா.ஜ.க.வோ, காங்கிரசோ பலனடைந்து விடவில்லை

படிப்பகம்

www.padippakam.com

ன்பதுதான் உண்மை. ஹெக்டே, மம்தா, தவிலால், நவீன் பட்நாயக், பா.ம.க., மதி க, ஜெயலலிதா, வாழப்பாடி, சு. சாமி - ப்படிபட்ட துண்டு துக்காணிகள்தான் பலன டந்துள்ளனர்.

சோனியா வருகையால் வலுவடைந்தி ப்பதாகப் பீற்றிக் கொள்ளும் காங்கிரசும், பரும் வெற்றி பெற்று ஆளும் உரிமை டைந்து விட்டதாகக் கூச்சலிடும் பா.ஜ.க. ம் அற்ப அளவுக்கே தமது எண்ணிக்கை யக் கூட்டிக் கொண்டுள்ளன. ஆனால், கூட் ணிக் கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு ந்தத் தேர்தலில் மக்கள் தமக்கே ஆளும் ரிமை வழங்கிவிட்டதாக உரிமை பாராட்டு ன்றனர். குறிப்பாக, 37 சதவீத வாக்குகளை ம், நாடாளுமன்ற எண்ணிக்கையில் மூன் ல் ஒரு பங்கு இடங்களையும் மட்டுமே ா.ஜ.க. பெற்றுள்ளது. பதினோராவது நாடா நமன்றத்தில் இருந்ததை விட 17 இடங்களே திகம் பெற்றுள்ளது. அதுவும் பிற சிறு சிறு ட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்ததால்தான்.

கூட்டணி ஆட்சியே கூடாது; நிலை ற்ற ஆட்சிக்கு அதுவே காரணம். தங்க நக்கு தனிப் பெரும்பான்மை வேண்டும் ன்கிற பா.ஜ.க. மற்றும் காங்கிரசு கட்சிக ின் கோரிக்கையை மக்கள் தீர்மானமாக ாகரித்து விட்டார்கள். இரண்டுமே )-க்கும் மேற்பட்ட சிறு சிறு கட்சிகளின் தய வயே நம்பி இருக்கின்றன. எனவே தேர் ல் முடிவுகளின் போக்குத் தெரிந்தவுடனே, திரை வியாபாரம் துவங்கிவிட்டது. ஒரே ரு எம்.பி.யைப் பெற்றுள்ள கட்சிகூட முக்கி மானதாகிவிட்டது. கோடிக்கணக்கில் ரொக் மும், மந்திரி பதவியும், இன்னும் பிற சலு கைகளும் தருவதாகப் பேரங்கள் நடக்கின் ன.

ஒரு புறம் இந்துஜா, விஜய்மல்லையா ான்ற தரகுப் பெரு முதலாளிகள் பாரதீய னதா ஆட்சியைப் பிடிப்பதற்கு, தமது "கல் ாப் பெட்டி - கஜானா"வைத் திறந்து வைத் க் கொண்டனர். மறுபுறம் அம்பானி, ாடியா, லலித் சூரி ஆகிய தரகுப் பெருமுத ாளிகள் காங்கிரசுக்காக கத்தை கத்தையா ் பணத்தை வாரி இறைக்கிறார்கள். அங்கே சகாவத்தும், இங்கே சரத் பவாரும் முன் ின்று பேரங்கள் நடத்துகின்றனர். எவ்வ வு கோடி கொட்டிக் கொடுத்தாலும், யார் ரசு அமைத்தாலும் அதற்கு நித்திய கண்டம் ரண ஆயுசுதான்!

"மதவாத சக்திகள் ஆட்சிக்கு வருவ தத் தடுக்க வேண்டும். ஆகவே காங்கிரசு ஐ.மு. ஆட்சி அமைத்தே தீருவோம்" என க்கிய முன்னணி - இடதுசாரிக் கூட்டணி ம், காங்கிரசில் சரத் பவார் தலைமையில் ஓர் ணியும் விடாப்பிடியாக முயற்சிக்கின்ற ர். இதில் காங்கிரசு மற்றும் ஐக்கிய முன்ன ிக் கட்சிகளின் பிரதான நோக்கம் பா.ஜ.க. ட்சிக்கு வருவதைத் தடுப்பதல்ல. பதவி வறி, கிடைத்தவரை அதிகாரத்தைப் பயன் டுத்திக் கொள்வது என்பதுதான்.

இதைவிட அதிக வெறியுடன் இந்துத் வ பாசிஸ்டுகளும், அவர்களுடைய கூட் ாளிகளும் ஆட்சியைப் பிடிப்பதற்குத் துடிக் ன்றனர். போதிய ஆதரவு - அறுதிப் பெரும் ான்மை கிட்டவில்லை. மீண்டும் சில காலம் சரியாகச் செயல்பட்டு மக்கள் ஆதரவைப் பெறுவோம்; அதுவரை எதிர்க் கட்சியில் இருப்போம் என்கிற எண்ணமே பா.ஜ.க. கும்பலிடம் கிடையாது; ஆட்சியைப் பிடிப்ப தற்கு எந்தவிதமான முறைகேடுகளைச் செய் யவும், எந்த வேடம் போடவும் தயாராக உள் ளது.

தும்பை விட்டு வாலைப் பிடித்த கதை யாக, இந்துத்துவ பாசிஸ்டுகள் ஆட்சியைப் பிடிக்குமளவுக்கு வளர்வதைத் தடுக்காது, இப்போது போய், "எப்பாடுபட்டாவது, என்ன தியாகம் செய்தவாது, யாருடன் வேண்டுமானாலும் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைப்பதைத் தடுப்போம்" என்று வீராவே சத்துடன் அலறுகிறார்கள் போலி இடது சாரி கள். "காங்கிரசு, பா.ஜ.க. இரண்டுமே தங்கள் எதிரிகள்; பா.ஜ.க.வை எதிர்ப்பதற்காக காங் கிரசுடன் கூட்டுச் சேரவே மாட்டோம்" என்று நேற்றுவரை பேசி வந்தவர்கள் தாம் இவர் கள். அப்படியானால் இன்றைய நிலை எப் போதும் ஏற்படாது என்று அதிபுத்திசாலி ஆய்வாளர்களான போலி இடதுகள் எதிர் பார்த்தார்களா? "இரண்டு கட்சிகளையும் எப்போதும் எதிர்க்கப் போவதாக போலி இடதுகள் பேசி வருவதெல்லாம் புரட்டுத் தான். காங்கிரசுடன் கூட்டு வைத்துக் கொள் வதை நோக்கியே இவர்கள் போகிறார்கள்" என்பதை கம்யூனிசப் புரட்சியாளர்கள் பல முறை அம்பலப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

காங்கிரசு - பா.ஜ.க. இரண்டுக்குமே எதிராகச் சமதூர நிலையைக் கடைப்பிடிப்ப தாக இதுவரை பேசி வந்த போலி இடதுசாரி கூட்டணி, அவற்றை, குறிப்பாக இப்போது பிரதான எதிரியாகக் கருதும் பா.ஜ.க.வை என்ன காரணத்தை முன் வைத்து வீழ்த்த முயன்றது? இலஞ்ச - ஊழல், மண்டல் அம லாக்கம், கிரிமினல்மயமாக்கம் ஆகியவை போலி இடதுகளைப் பொறுத்தவரை எப் போதும் முக்கியப் பிரச்சினையாக இருந்த தில்லை.

உலக மயமாக்கம் - தாராளமயமாக்கம் - தனியார்மயமாக்கம் என்கிற புதிய பொரு ளாதாரக் கொள்கை எதிர்ப்பு, வகுப்புவாத எதிர்ப்பும் தமது தனிச் சிறப்பான அரசியல் என்று ஐ.மு.வுடன் சேர்ந்து போலி இடதுகள் நாடகமாடினர். புதிய பொருளாதாரக் கொள் கையை எதிர்த்து மூன்று "பாரத் பந்த்"கள் நடத்தி, 1992 ஆக-15-இல் இரண்டாவது சுதந்திரப் போர் தொடுக்கப் போவதாகப் பிர கடனம் செய்தனர். ஆனால் போர்க் களத்தில் கால் வைத்த மறுகணமே அட்டைக் கத்தி ஏந் திய நடிகனைப் போல ஓடி ஒளிந்து கொண்ட னர். அதன் பிறகு பு.பொ. கொள்கையைக் கள்ளத்தனமாகப் புகுத்துவதையே நடைமு றையாகக் கொண்டதால், காங்கிரசு எதிர்ப்பு முனை மழுங்கிப் போனது. காங்கிரசை வகுப் புவாத எதிர்ப்பு சக்திகளின் தலைமையாக ஏற்குமளவுக்குப் போய்விட்டார்கள்.

சி.பி.ஐ., காங்கிரசை முற்போக்கு, ஜன நாயக சக்தியாக மதிப்பீடு செய்து அதன் தலைமையை ஏற்றதுதான் சி.பி.ஐ.க்கும் சி.பி.எம்.க்கும் இடையிலான வேறுபாடு - பிளவுக்கும் சி.பி.ஐ.யைத் திரிபுவாதிகள், தாம் புரட்சியாளர்கள் என்று பீற்றிக் கொள்வ தற்கும் காரணமாகச் சொல்கிறது, சி.பி.எம். இன்று அதே நிலைக்கு எல்லா போலி இடது சாரிகளும் சரிந்து விட்டனர்.

வகுப்புவாதத்தையே பிரதான எதிரி யாக வைத்து அணிசேர்க்கும் இந்தப் போலி இடது சாரிகள் அதற்கு எதிராக இதுவரை நாடாளுமன்ற சவடால்களும், வானொளி விவாதங்களும் தவிர வேறு எதையும் செய் தது கிடையாது. இரத யாத்திரைகள், விநாய கர் ஊர்வலங்கள், செங்கற் பூசைகள், மதவெ றிப் படுகொலைகள் ஆகியவற்றின் மூலமாக இந்துத்துவ மதவெறி பரப்பப்பட்ட போது கண்டன அறிக்கைகளுக்கு மேல் போலி இட துகளின் மதச்சார்பற்ற அணி எதையுமே செய்யவில்லை. இப்போதும் வகுப்புவாத முறியடிப்பு முயற்சிகளை தேர்தல் அரசிய லுக்குள் முடக்குவதுதான் இவர்களின் திட்ட மாக உள்ளது. இதற்கு மாறாக தேர்தல் அரசி யலுக்கு வெளியே இந்துத்துவ பாசிசத்தின் எல்லாப் போக்குகளையும் எதிர்த்து, மக்க ளைத் திரட்டிப் போராடுவதுதான் அதை முறி யடிப்பதற்கான துவக்கமாக அமையும்.

## பயபீதியூட்டிய போலீசுக்குப் பொது மக்களின் பதிலடி

நெய்வேலி பகுதியில் தொழிலாளர் பிரச்சாரக் குழுவில் இயங்கி வரும் தோழர் பகத் சிங், போலீசாரால் பொய் வழக்குகள் போடப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட் டுள்ள கணேசன் என்பவரை பிணையில் எடுக்க முயற்சி செய்து வந்தார். இதனால் ஆத்திரமாகிப் போன போலீசு, 20.02.98 அன்று நள்ளிரவில் பெரும் பட்டாளத் தோடு - கிட்டதட்ட 20 போலீசார் - தோழ ரின் வீட்டினுள் அத்துமீறி நுழைந்தது. பகத் சிங்கின் சட்டையைப் பிடித்து வெளியே இழுத்து வந்து, "கோவைக்கு வெடிகுண்டு வைக்கப் போனியா? இதயம் நல்லெண் ணெய் கம்பெனிக்காரனைத் துப்பாக்கி யால் சுட்டு பணத்தைக் கொள்ளையடிக்கப் போனியா? வீட்டில் வெடிகுண்டு, துப் பாக்கி இருக்கா? என மிரட்டியதோடு, அக் கம் பக்கத்து வீட்டுக்காரர்களிடம், "இவன் திருடன், இவன் கூட்டமே திருட்டுக் கூட் டம்; இவனை இங்கு வைக்காதீர்கள்" என அவதூறுகளை அள்ளி வீசி பீதியூட்டவும் முனைந்தது.

போலீசின் இப்பீதியூட்டலுக்கு அஞ் சாமல், அப்பகுதியைச் சேர்ந்த மூதாட்டி, "இவனைப் பத்தியும் தெரியும், இவன் கூட் டத்தைப் பத்தியும் தெரியும். இவங்க மக்க ளுக்காகப் பாடுபடுபவர்கள்" எனப் பதிலடி கொடுத்து, போலீசின் முகத்தில் கரியைப் பூசினார். கூடி நின்ற மக்களின் முன் அம்ப லப்பட்டுப் போன போலீசு கும்பல், "ஏய் கிழவி, நீயும் இவனுக்கு உடந்தையா?" எனக் குரைத்தது. தோழர், பகத் சிங்கைத் துப்பாக்கி மட்டையால் தாக்கவும் துணிந் தது. போலீசின் இந்த அடாவடித்தனத்தை அம்பலப்படுத்தி, நெய்வேலி நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

தகவல்:
தொழிலாளர் பிரச்சாரக் குழு,
நெய்வேலி

www.padippakam.com

# ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகள்: மோசடிக்கு ஒரு முகவுரை

ஒரு வழியாக தேர்தல் நடந்து முடிந்து விட்டது. வானத்தை வில்லாக வளைப்போம்; மணலைக் கயிறாகத் திரிப்போம் என்று வெளிப்படையாக காதில் பூச்சுற்றவில்லையே தவிர, எல்லா ஓட்டுக் கட்சிகளும் வண்டி வண்டியாக வாக்குறுதிகளைத் தமது தேர்தல் அறிக்கைகளில் வாரியிறைத்துள்ளன. தேர்தல் வந்து விட்டால் நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள மையமான பிரச்சினைகளை முன்வைத்து, தமது லட்சியம் - கொள்கையின் படி அவற்றுக்கான தீர்வுகளை வாக்குறுதிகளாக ஓர் அறிக்கை மூலம் வெளியிடுவதென்பது ஓட்டுக் கட்சிகளின் வழமையான மரபு. ஆனால் தேர்தல் அறிக்கைகளைப் படித்துப் பார்த்து, சரியான கொள்கையைக் கொண்டுள்ள கட்சியைத் தேர்வு செய்து வாக்களிப்பது என்பது இந்திய போலி ஜனநாயக வரலாற்றிலேயே கிடையாது. கவர்ச்சி வாதம், சாதிய வாதம், கிரிமனல் - குண்டர் பலம், பணபலம் முதலானவைதான் தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பவைகளாக மாறிவிட்ட பிறகு, தேர்தல் அறிக்கைகள் வெறும் காகிதக் குப்பைகளாகி விட்டன. கழுதைகள் கூட அவற்றைச் சீண்டுவதில்லை. இருப்பினும் இக்கட்சிகள் நாட்டை எந்தத் திசையில் இழுத்துச் செல்ல முயற்சிக்கின்றன என்பதை இவற்றின் தேர்தல் அறிக்கைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இக்கட்சிகள் மோசடியானவை, துரோகத்தனமானவை என்பதை அம்பலப்படுத்திக் காட்டுவதற்கு அவற்றின் தேர்தல் அறிக்கைகள் பயன்படுகின்றன.

★☆★

வறுமையும் வேலையின்மையும் நாட்டைக் கவ்வியுள்ள பெரு நோய்கள். இவற்றைக் களைந்தெறிய ஓட்டுக் கட்சிகள் உருப்படியாக எந்தவொரு திட்டத்தையும் முன்வைக்கவில்லை. அதே சமயம் ஆண்டுக்கு ஒரு கோடிப் பேருக்கு வேலை வாய்ப்பளிப்போம் என்று பாரதீய ஜனதா வாக்குறுதியை அள்ளி வீசுகிறது. அனைவருக்கும் உணவளிப்போம் என்று ஐக்கிய முன்னணி சவடால் அடிக்கிறது.

நாடு முழுவதும் 20 கோடி விவசாயத் தொழிலாளர்கள் அரைப்பட்டினி நிலையில் உள்ளனர். ஓராண்டில் அதிகபட்சம் 200 நாட்களுக்குத்தான் இவர்களுக்கு வேலை கிடைக்கிறது. நாடு பெயரளவில் சுதந்திரமடைந்து 50 ஆண்டுகளாகியும் இந்த அவலம் தொடர்கிறது. அவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி மற்றும் இதர சமூக நலன்களை உறுதி செய்யும் சட்டம் இதுவரை கிடையாது. இதற்கு இறுதி வடிவம் கொடுத்து விவசாயத் தொழிலாளர் சட்ட மசோதவைக் கொண்டு வர ஐ.மு. அரசு திட்டமிட்ட நேரத்தில் ஆட்சி கலைக்கப்பட்டது. நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இதைச் சட்டமாக்குவோம் என்கிறது ஐக்கிய முன்னணியின் தேர்தல் அறிக்கை. காங்கிரசும் இந்த மசோதாவை நிறைவேற்றுவோம் என்கிறது.

பாரதீய ஜனதாவின் தேர்தல் அறிக்கையில் இதுபற்றி ஏதுமில்லை. அதே சமயம் பயிர், கால்நடை காப்பீட்டு திட்டத்தை நாடு தழுவிய அளவில் செயல்படுத்துவோம் என்கிறது. இதனால் நிலப்பிரபுக்களும் பணக்கார விவசாயிகளுமே ஆதாயமடைய முடியும். ஏழை, நடுத்தர, மற்றும் கூலி விவசாயிகளுக்கு இதனால் எந்தப் பலனுமில்லை.

கடந்த ஐந்தாண்டுகளுக்கும் மேலாக, தீவிரமாகப் பின்பற்றப்படும் தாராளமயக் கொள்கையால் நெருக்கடியில் சிக்கியுள்ள விவசாயத் துறையை சீரமைப்பது பற்றி எந்த ஓட்டுக் கட்சியும் குறிப்பாக எதையும் சொல்லவில்லை. விவசாயத் துறையிலும் தாராளமயக் கொள்கையைக் கடைப்பிடிப்போம் என்று மூப்பனார் கட்சி வெளிப்படையாக அறிவித்துள்ளது. மற்ற கட்சிகள் இப்படி பகிரங்கமாக அறிவிக்கவில்லையே தவிர, தாராளமயக் கொள்கையை எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லை. விவசாயத்தைப் போண்டியாக்கும் கொள்கையைப் பின்பற்றும் அதே

சமயம், ஓட்டுக்கா
கவர்ச்சித் திட்டங்கை
அவை முன்வைக்க
தவறவில்லை.

திட்ட ஒதுக்கீட்டி
60% நிதி வேளாண்மை
மற்றும் கிராமப்புற மே
பாட்டுக்கு ஒதுக்கப்
டும்; உர மானியம் நீடி
கும் என்கிறது பா.ஐ.க
காங்கிரசும் ஐக்கிய மு
ணணியும் உர மானிய
தொடரும் என்கின்றன. போலி கம்யூனிஸ்
களோ முழுமையான நிலச் சீர்திருத்த
வலியுறுத்துகின்றனர். இன்றைய அரசிய
மைப்பு முறையை மாற்றியமைக்காமல் இ
எப்படி சாத்தியமாகும் என்பது அவர்
ளுக்கே வெளிச்சம். ஊரை அடித்து உலை
யில் போட்ட பாசிச ஜெயா கும்பலே
அடுத்த பத்தாண்டில் உணவு உற்பத்தியை
இரட்டிப்பாக்குவோம் என்று சவடால் அடி
கிறது.

ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் குடித்
கும்மாளமிட்டு ஆடம்பர - வக்கிர வாழ்
நடத்தும் ஓட்டுப் பொறுக்கிகள், தமது தே
தல் அறிக்கையில் வறுமை பற்றி நீலிக்கண்
ணீர் வடிக்கத் தவறவில்லை. வறுமை பற்
அதிகம் கவலைப் படுவதாக காட்டிக் கொ
ளும் தி.மு.க. வறுமை ஒழிப்புத் திட்டங்களு
கும் வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கு
முன்னுரிமை தருவோம் என்பதோடு நிறு
திக் கொள்கிறது. வேலையில்லாத் திண்டா
டம் பெரும் சவால் என்று நீட்டி முழக்கு
அ.தி.மு.க. அதற்கு மேல் ஒன்றும் சொல்
வில்லை.

'இடது' கம்யூனிஸ்டுகளோ, வேலை
வாய்ப்பைப் பெருக்க வேலைக்கான உண
வுத் திட்டங்களை உருவாக்குவோம் என்கி
றனர். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கு
30 கோடி மக்களை உயர்த்துவதற்கு உய
பொருளாதார வளர்ச்சி தவிர வேறு வழி
யில்லை என்பதை நாட்டு மக்களுக்கு உணர்
துவோம் என்கிறது மூப்பனார் கட்சி. உய
பொருளாதார வளர்ச்சி என்றால் அதன் அ
ராதியில் நாட்டை அ
னிய ஏகாதிபத்தியங்
ளிடம் மறு அடகு வை
பதுதான்! ஐக்கிய முன்
னணியோ, 2010-க்குள்
அனைவருக்கும்
உணவு, ஆரோக்கி
யத்தை அளிப்போம்
அறியாமையை முற்
றாக ஒழித்து ஆரம்பக்
கல்வியை அனைத்துக்
குழந்தைகளுக்கும்
அளிப்போம் என்கிறது
காங்கிரசுப் பெருச்சாளி
களோ, ஆண்டுக்கு
8000 மெகாவாட் அள
வுக்கு மின் உற்பத்தித்
திட்டங்களைத்
தொடங்கி தொழிலை
யும், விவசாயத்தையும்
மேம்படுத்தி, வறு

பாரதீய ஜனதாவின் தேர்தல் அறிக்கை: இந்துவெறி பாசிசப் பிரகடனம்



padippakam

www.padippakam.com

மையை ஒழிப்போம் ன்கின்றனர்.

சற்று யோசித்துப் ார்த்தாலே இவை பல்லாம் மிகப்பெரிய மாசடி என்பது தெளி ாகிவிடும். பாரதீய னதா கூற்றுப்படி, ண்டுக்கு ஒரு கோடிப் பருக்கு வேலை ாய்ப்பளிக்க, ஓராண் க்கு 7,750 கோடி பாய் தேவை. இது ட அரசு நிர்ணயித் ள்ள குறைந்த பட்சக் லியான ரூ. 31-ஐ வத்து 250 வேலை ட்களுக்குக் கணக்கி ப்பட்டுள்ளது. அடுத்த த்தாண்டுகளில் முற் க வேலையின் மையை ஒழிப்பதாக ரதீய ஜனதா கூறுகிறது. இதன்படி 77,500 காடி ரூபாய் தேவை. இவ்வளவு நிதி மூலா ரத்தை எப்படித் திரட்டப் போகிறது என்ப தப் பற்றி பாரதீய ஜனதா ஒரு வார்த்தை ட கூறவில்லை.

இதேபோல, காங்கிரசின் வாக்குறுதிப் டி, ஆண்டுக்கு 8000 மெகாவாட் மின் உற் த்தி திட்டங்களைத் தொடங்க குறைந்த பட் ம் 30,000 கோடி ரூபாய் தேவை. ஐந்தாண்டு ளுக்கு 1,50,000 கோடி ரூபாய் தேவை. ன்னிய முதலீடுகளை நம்பினாலும் இந்த ளவுக்கு முதலீடு பெருக அடிப்படையே ல்லை.

ஐக்கிய முன்னணியின் தேர்தல் அறிக் கயின்படி, நாட்டிலுள்ள 6 கோடி ஏழைக் ழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வியளிக்க றைந்த பட்சம் ஆண்டுக்கு ரூ. 14,000 காடி வேண்டும். இத்தொகையை எந்த ட்ட ஒதுக்கீட்டிலிருந்து பெறுவது என்பது ற்றி ஐ.மு.வின் தேர்தல் அறிக்கை வாயே றக்கவில்லை. இந்த லட்சணத்தில் அனை ருக்கும் உணவு, ஆரோக்கியம் பற்றி நீட்டி ழக்குவதெல்லாம் கேழ்வரகில் நெய் டிந்த கதைதான்!

1991 தேர்தல் அறிக்கை ல் 100 நாட்களில் விலைவாசி யக் குறைப்போம் என்று கூசா ல் புளுகிய காங்கிரசு, 000-வது ஆண்டுக்குள் னைத்து கிராமங்களுக்கும் ாலை வசதியும் தொலைபேசி சதியும் செய்து தருவோம் என் றது. 2005-க்குள் ஒவ்வொரு டும்பத்துக்கும் ஒரு வீடு தரு வாம் என்கிறது ஐக்கிய முன் ணி. பாரதீய ஜனதாவோ 010-க்குள் தருவோம் என்கி து. பஞ்சாபின் ஐக்கிய அகாலித க் கட்சி விவசாயிகளுக்கு இல ச மின்சாரம் தருவோம் என்கி து. இப்படி கவர்ச்சிகரமான ாக்குறுதிகளை எல்லா கட்சிக ரும் வாரியிறைத்துள்ளன.



காங்கிரசின் தேர்தல் அறிக்கை: மோசடியே சரக்கு

இப்படித்தான் ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் ஊழல் ஒழிப்பு, விலைவாசி குறைப்பு, அடிப்படை வசதிகள், மகளிர் நலம் முதலான பல்வேறு பிரச்சினைகள் பற்றி தேர்தல் அறிக்கைகளில் கதையளக்கின்றன. அதே சமயம், தேசியப் பிரச்சினையாக வளர்ந்துள்ள தமிழகத்தின் உயிராதாரமான காவிரி நதிநீர் பிரச்சினை பற்றி பாரதீய ஜனதா, காங்கிரசு, ஐக்கிய முன்னணி, 'இடது'சாரி முன்னணி, ஜனதா தளம் ஆகிய தேசியக் கட்சிகள் தமது தேர்தல் அறிக்கைகளில் ஒரு வார்த்தைகூட கூறவில்லை. தமிழக மக்கள் மீது இக்கட்சிகள் கொண்டுள்ள அக்கறை இவ்வளவுதான்!

காவிரிப் பிரச்சனைக்குத் தீர்வாக, நதிகள் அனைத்தும் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்கிறது, அ.தி.மு.க.. தமிழகத்தின் நியாய உரிமையைக் கைவிட்டு, எட்டாத பழத்துக்கு கொட்டாவி விடச் சொல்கிறது அக்கட்சி. பாசிஸ்டுகளுக்கே உரித்தான அதிகார வெறியில், மக்களே நேரடியாக பிரதமரைத் தேர்ந்தெடுத்து அதிகாரத்தை ஒரே இடத்தில் குவிக்க வேண்டும் என்று பாசிச ஜெயா கும்பல் கூறுகிறது.

இந்துத்துவ பாசிச கும்பலுடன் கூட்டணி கட்டிக் கொண்டுள்ள பா.ம.க.வும், ம.தி.மு.க.வும் காவிரி பிரச்சினை, ஈழத் தமிழர் - அகதிகள் பிரச்சினை, மாநில சுயாட்சி, சாதிய மோதல்கள், இட ஒதுக்கீடு முதலான பல பிரச்சனைகளை அக்கறையுடன் கூறியுள்ளன. ஆனால் இந்து வெறி பாசிஸ்டுகளுடன் சேர்ந்து கொண்டு இப்பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பதுதான் கேள்வி. இவற்றைத் தீர்க்க அடிப்படையே இல்லாதபோது, இவை வெறும் பிழைப்புவாத சவடால்களாக பிசுபிசுத்துப் போய்விட்டன.

நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு பலவண்ணத் தீர்வுகளை ஓட்டுக் கட்சிகள் முன்வைக்கும் அதே சமயம், இந்துத்துவ பாசிசம்தான் ஒரே தீர்வு என்று பாரதீய ஜனதா பகிரங்கமாக அறிவித்துள்ளது. தேசியம், தேச ஒற்றுமை, பண்பாடு, மதச்சார்பின்மை முதலானவற்றுக்கு புதுப் புது அர்த்தங்களுடன் அது புது அகராதியை எழுதுகிறது.

''சிறுபான்மை மதத்தினரை - குறிப்பாக முஸ்லிம்களைத் திருப்திப்படுத்தும் பல சிறப்பு உரிமைகளும் சலுகைகளும் வழங்குவதுதான் நாட்டின் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம். சிறுபான்மைவாதம் தான் காஷ்மீர், பஞ்சாப் போன்ற பிரிவினைவாத - பயங்கரவாத இயக்கங்கள் தோன்ற அடிப்படையாக உள்ளது. போலியான மதச் சார்பின்மையால் பெரும்பான்மை இந்துக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுவதோடு பறிக்கப்படுகின்றன. எனவே காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து தரும் 370-வது பிரிவு அரசியல் சட்டத்தை ரத்து செய்வது; தனி - குடும்பச் சட்டங்களை ஒழிப்பது; சிறுபான்மையினரது கமிஷனைக் கலைப்பது; அனைவருக்குமான பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருவது'' என்பதை பாரதீய ஜனதா தனது நிலையான ஆட்சியின் நோக்கங்களாக அறிவித்துள்ளது.

ஐக்கிய முன்னணியின் தேர்தல் அறிக்கை: செல்லாத நோட்டு



இந்து வெறியர்களின் இலட்சியக் கனவை நிறைவேற்றும் வகையில், ''அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்டுவோம்; காசி, மதுரா பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்போம்'' என்று வெளிப்படையாக உறுதி அளித்துள்ளது.

இது தவிர தனது அகண்ட பாரதக் கொள்கையின்படி, ''இந்தியாவை வலிமை மிக்க வல்லரசு நாடாக்குவோம்; அணு ஆயு

படிப்பகம்

www.padippakam.com

தம் தயாரிப்போம்; ஏவுகணைகளை மேம்படுத்துவோம்'' என்று போர்வெறி - தேசிய வெறி பிடித்து அலைகிறது. இந்து வெறி பாசிசத்துக்கு எதிரான புரட்சிகர - ஜனநாயக சக்திகளை ஒடுக்க, ''போலீசுக்கு கூடுதல் அதிகாரமும் நவீன ஆயுதங்களையும் வழங்குவோம்; பிரிவினைவாத - பிளவுவாத சக்திகளை கடுமையாக ஒடுக்குவோம்; சட்ட விரோத அமைப்புகள், ரகசியமாக ஆயுதம் தயாரிப்போரை முற்றாக ஒழித்து, தேச ஒற்றுமையைக் கட்டிக் காப்போம்'' என்று பாசிச நாக்கைக் காட்டுகிறது பாரதீய ஜனதா. என்ரான் விவகாரத்தில் அதன் ''சுதேசி'' முகத்திரை கிழிந்த போதிலும், தேசிய வெறியூட்டும் நோக்கங்களுக்காக அது மீண்டும் ''சுதேசி'' நாடகமாடுகிறது.

வகுப்புவாத பாரதீய ஜனதாவுக்கு எதிரான மதச்சார்பற்ற சக்திகளாக கூறிக் கொள்ளும் காங்கிரசு, ஐக்கிய முன்னணி, 'இடது' சாரி முன்னணி ஆகியன படர்ந்து வரும் இந்து வெறி பாசிசத்துக்கு எதிராக கையாலாகாத தீர்வுகளையே முன்வைத்துள்ளன. ''காஷ்மீருக்கு சிறப்பு உரிமை தரும் 370-வது அரசியல் சட்டப் பிரிவை நீக்கக் கூடாது; அதே சமயம் தீவிர வாதத்தை முறியடிப்பது. பொது சிவில் சட்டம் கூடாது; சிறுபான்மையினர் நலன்களைப் பாதுகாப்பது; அயோத்தி விவகாரத்தை உச்ச நீதி மன்றத் தீர்ப்புக்கு விடுவது; நாட்டின் பாதுகாப்பை மேம்படுத்துவது; பிரிவினைவாதத்தை முறியடிப்பது'' என்று பாரதீய ஜனதாவின் கொள்கையையே வேறு அணுகுமுறை கொண்ட தீர்வாக முன்வைக்கின்றன.

★☆★

பன்னிரண்டாவது நாடாளுமன்றத் தேர்தல் முடிந்துள்ள நிலையில், தொடர்ந்து தரகுப் பெருமுதலாளிகள், நிலப்பிரபுக்கள், ஏகாதிபத்தியங்களின் கொள்ளைக்கு கதவுகள் அகலமாகத் திறக்கப்பட்டு நாடு மறுகாலனியாகி வருகிறது. அதன் விளைவாக வேலையின்மையும் வறுமையும் தீவிரமாகி வருகிறது. இந்து வெறி பாசிசம் பேரபாயமாக நாட்டைச் சூழ்ந்துள்ளது. சாதி -, மத மோதல்களால் உழைக்கும் மக்கள் பிளவுபட்டு படுகொலைக்கு ஆளாகிறார்கள். பாரதீய ஜனதா, காங்கிரசு, ஐக்கிய முன்னணி, 'இடது'சாரி முன்னணி ஆகிய கூட்டணிகளுக்கிடையே வேறுபாடுகள் நிலவினாலும், நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு மறு அடகு வைக்கும் தாராளமயக் கொள்கையில் இவை அனைத்தும் ஒன்றுபட்டு நிற்கின்றன. காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்கள், ஆந்திரா, பீகாரில் அரசு பயங்கரவாதத்தை ஏவி போராளிகளை ஒடுக்குவதில் ஓரணியில் நிற்கின்றன.

இவற்றில் எந்தக் கூட்டணி ஆட்சிக்கு வந்தாலும் நாடு எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளை ஒருக்காலும் தீர்க்கவே முடியாது என்பதை இவற்றின் ஆட்சிகள் ஏற்கனவே நிரூபித்துக் காட்டி விட்டன. எனவே, நாடு மறுகாலனியாவதை முறியடிப்போம்! இந்து வெறி பாசிச அபாயத்தைத் தகர்த்தெறிவோம்! என்று போலி ஜனநாயகத் தேர்தல் - நாடாளுமன்ற அரசியலமைப்பு முறையைப் புறக்கணித்து, புரட்சிப் பாதையில் முன்னேறுவதுதான் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரே வழி.

• குமார்

# நாடெங்கும் வாரிசு அரசியல்

''சோனியாவைக் கொண்டு வா! தேசத்தைக் காப்பாற்று!!'' —இது இந்தத் தேர்தலின் பொழுது காங்கிரசு கட்சியின் முக்கிய முழக்கமாக இருந்தது. ராஜீவ் விசுவாசிகளின் விருப்பப்படியே காங்கிரசின் நட்சத்திர பிரச்சாரகராக உருவெடுத்து வந்தார், சோனியா. காங்கிரசின் முதல் கட்டப் பிரச்சாரத்தின் பொழுது சோனியாவோடு, அவரது அருமை மகள் பிரியங்காவும் ஒட்டிக் கொண்டார். நேரு குடும்பத்தின் பரம்பரைத் தொகுதியான அமேதியில் சோனியா பிரச்சாரம் செய்ய வந்த பொழுதோ, மகன் ராகுல், மருமகன் வதேராவோடு குடும்ப சகிதமாக மக்களுக்கு காட்சியளித்தார்; இரண்டாம் கட்டப் பிரச்சாரத்தின் பொழுது பிரியங்காவுக்குப் பதிலாக ராகுலோடு சுற்றி வந்தார்.

சோனியா வெளிப்படையாக அரசியலில் குதித்தவுடன், மீண்டும் பரம்பரை ஆட்சியைக் கொண்டு வர காங்கிரசு முயலுவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சுமத்தின. இத்தேர்தலே பரம்பரை ஆட்சிக்கும், ஜனநாயகத்திற்கும் இடையில் நடக்கும் போராட்டமாகவும் சித்தரிக்கப்பட்டது. எதிர்க்கட்சிகளின் இக்குற்றச்சாட்டில் நியாயம் உண்டு. நேரு - இந்திரா மட்டுமல்ல, காங்கிரசு கட்சியின் இரண்டாம் மட்ட, மூன்றாம் மட்டத் தலைவர்கள் கூட தங்களின் வாரிசுகளைக் கட்சியிலும், காங்கிரசு அரசாங்கங்களிலும் திணித்தனர் என்பதும் உண்மை.

ஓர் ஓட்டுக்கட்சி எத்துணை தூரம் அதிகாரத்தை நெருங்கி வருகிறதோ, கைப்பற்றிய அதிகாரத்தை விடாமல் பிடித்துக் கொள்கிறதோ, அதைப் பொறுத்தே அக்கட்சியில் வாரிசுகளின் எண்ணிக்கை இருக்கிறது. காங்கிரசுக் கட்சி நீண்ட காலமாகவே அதிகாரத்தில் இருந்து வருவதால் தான், அக்கட்சியில் இந்தப் பரம்பரை ஆட்சியுரிமை - வாரிசுரிமைப் பண்பாடு இறுகிப் போயிருப்பது பளிச்செனத் தெரிகிறது.

அதே பொழுதில் தங்களின் வாரிசுகளின் கரங்களில் கட்சியை ஒப்படைப்பதும், ஆட்சி அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பதும், அவர்களை எம்.பி.க்களாக, எம்.எல்.ஏ.க்களாக, மந்திரிகளாக ஆக்குவதுமான இந்த மன்னர் காலத்திய பரம்பரை ஆட்சியுரிமை - வாரிசுரிமைப் பண்பாடு காங்கிரசில் மட்டும் தான் காணக் கிடக்கிறதா? பிற கட்சிகள் எல்லாம் இந்த நிலப்பிரபுத்துவ பண்பாட்டைத் தூக்கியெறிந்து விட்டு ஜனநாயக முறைப்படி தான் நடந்து கொள்கிறார்களா? இந்தக் கேள்விகளுக்கு விடை என்னவென்றால், இந்தப் பரம்பரை ஆட்சியுரிமை - வாரிசுரிமைப் பண்பாட்டைப் பேணுவதில், வளர்த்துச் செல்வதில் காங்கிரசுக் கட்சிக்கு, எந்தவொரு கட்சியும் சளைத்தது அல்ல என்பதுதான்.

தி.மு.க.வில் கலைஞரின் மகன்கள் மு.க. ஸ்டாலின், மு.க. அழகிரி, அவரது மருமகன் முரசொலி மாறன் - இவர்கள்தான் அக்கட்சியிலும் ஆட்சியிலும் அதிகாரம் செலுத்தும் மையங்கள். ஆந்திராவில் என்.டி. ராமாராவ், தனது மருமகன் சந்திரபாபு நாயுடுவை தெலுங்கு தேசக் கட்சியின் பொதுச் செயலாளர் ஆக்கினார்; மற்றொரு மருமகன் வெங்கடேஸ்வர ராவை தனது ஆட்சியில் அமைச்சராக்கினார். என்.டி.ஆர். சிவபார்வதியைத் திருமணம் செய்து கொண்ட பின் வெடித்த வாரிசுரிமைப் போரில் கட்சியே இரண்டாக உடைந்து, மாநில அரசு அதிகாரம் சந்திரபாபு நாயுடுவுக்குக் கிடைத்தது; 'சமூக நீதி'க் காவலராகப் புகழப்படும் லல்லு பிரசாத் சிறைக்குச் செல்லும் முன், முதல்வர் நாற்காலியை தனது மனைவி ரப்ரி தேவியிடம் ஒப்படைத்தார். லல்லுவின் ஆட்சியில் அவரது இரு மைத்துனர்களும் சகல அதிகாரம் பெற்றவர்களாக வளர்ந்தனர். பால் தாக்கரேயின் மகன் உத்தவ்வும், மருமகன் ராஜ் தாக்கரேயும்தான் சிவசேனாவின் வளரும் வருங்காலத் தலைவர்கள்.

இப்படி வாரிசுகளுக்குப் பட்டம் சூட்டி மகிழ்வது கட்சியின் உயர்மட்டத் தலைவர்களோடு மட்டும் நின்றுவிடவில்லை; கட்சியின் வட்டச் செயலர்வரையும் வேர் விட்டுப் பரவி, கட்சிப் பதவிகளை மட்டுமல்லாது, பிரதமர் நாற்காலி தொடங்கி பஞ்சாயத்து உறுப்பினர்

பெரியகுளம் தொகுதி
தி.மு.க. வேட்பாளர் காந்திமதி:
இரத்த பாசம்



www.padippakam.com

வரை அரசு சன்மானங்களையும் தங்களுக்குள்ள செல்வாக்கு - அதிகாரத்தின்படி பகிர்ந்து கொள்ளும் குடும்பச் சொத்தாக்கி விட்டது.

எட்டாவது நாடாளுமன்றத்தின் சேர்க்கை பற்றி டெல்லி நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சி.பி. பாம்பிரியும், பி.எஸ். வர்மாவும் ஆய்வு நடத்தினார்கள். அதன்படி, 40 சதவிகித எம்.பி.கள் பிரபலமான அரசியல் குடும்பங்களின் வாரிசுகளாக அவரவர் தொகுதிகளில் இருந்து வந்துள்ளனர். ''சில மத்திய மந்திரிகள், முதல் மந்திரிகள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள், பழைய நிலப்பிரபுத்துவ குடும்பத்தினர் போன்றவர்களின் இரத்த உறவினர்களே இந்த வாரிசுகள்'' என்ற உண்மையை அவர்கள் புட்டு வைத்தனர்.

இப்பொழுது கூடப்போவது பன்னிரெண்டாவது நாடாளுமன்றம். இதில் இந்த வாரிசுகளின் சதவீத எண்ணிக்கை கூடியிருக்குமே தவிர, குறைந்திருக்க எவ்வகையிலும் வாய்ப்பில்லை. இதை நிரூபிக்க போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை ஆய்வு செய்தாலே போதுமானது.

தமிழ்நாட்டில், பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் காந்திமதி, சேடப்பட்டி தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ.வும் மாவட்டச் செயலருமான தளபதியின் தங்கை. இதுநாள்வரை அக்கட்சியன் உறுப்பினராகக்கூட இருந்திராத காந்திமதி, வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு கட்சியில் செல்வாக்குமிக்க மு.க. அழகிரியின் வலதுகரமாக விளங்கும் தளபதியின் தங்கை என்ற தகுதியைத் தவிர வேறொன்றும் இல்லை. மதுரைத் தொகுதியில் த.மா.கா. சார்பில் போட்டியிடும் ராம்பாபு, சுப்புராமன் என்ற முன்னாள் காங்கிரசு எம்.பி.யின் மகன். ராம்பாபு இதே தொகுதியில் இருந்து ஏற்கனவே மூன்று முறை எம்.பி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தந்தை இறந்து போனதால் மகன் பட்டத்திற்கு வந்துவிட்டார். பழனி தொகுதியில் காங்கிரசு கட்சி நிறுத்தியிருக்கும் வேணுகோபால், அதே தொகுதியில் பலமுறை காங்கிரசு சார்பில் எம்.பி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சேனாபதி கவுண்டரின் மகன். சேலம் தொகுதியில் த.மா.கா. வேட்பாளர் தேவதாஸ், முன்னாள் எம்.பி. ராமசாமி உடையாரின் மகன். கடலூர் தொகுதியில் காங்கிரசு வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கும் ராமதாசு, முன்னாள் எம்.பி. எஸ்.எஸ். ராமசாமி படையாச்சியின் மகன். திருச்சி தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளராகப் போட்டியிடும் ரங்கராஜன் குமாரமங்கலம், முன்னாள் முதல்வர் டாக்டர் சுப்பராயனின் பேரனும் வலது கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து காங்கிரசுக்குத் தாவி, இந்திரா காந்தியின் அமைச்சரவையில் தொழிற்துறை மந்திரியாக இருந்த மோகன் குமாரமங்கலத்தின் மகனும் ஆவார். நீலகிரி தொகுதியில் காங்கிரசின் சார்பில் போட்டியிடும் ஆர். பிரபு,



மதுரை தொகுதி த.மா.கா. வேட்பாளர் ராம்பாபு: தந்தையின் இடத்தில் தனயன்

முன்னாள் காங்கிரசின் பொருளாளரும், எம்.பி.யுமான தொழிலதிபர் ராமகிருஷ்ண நாயுடுவின் மகன். அருப்புக் கோட்டை சட்டமன்ற இடைத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் தங்கம் தென்னரசு, தி.மு.க. அரசில் அமைச்சராக இருந்த தங்க பாண்டியனின் மகன்.

கர்நாடகாவில், கனகபுரா தொகுதியில் ஜனதாதள வேட்பாளராகப் போட்டியிடும் ஹெச்.டி. குமாரசாமி, முன்னாள் பிரதமர் தேவே கவுடாவின் மகன். சென்ற முறையும் இவர் இதே தொகுதியில் இருந்து எம்.பி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேவே கவுடாவின் மற்றொரு மகன் ரேவண்ணா, மாநில ஜனதா தள அரசில் அமைச்சர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தேவே கவுடா போட்டியிடும் ஹசன் தொகுதியில் அவருக்கு எதிராக நிறுத்தப்பட்டிருக்கும் சுசீலா சிவப்பா, பி.பி. சிவப்பா என்ற எம்.எல்.ஏ.வின் மனைவி.

கேரளாவில், அம்மாநிலத்தின் முன்னாள் முதன் மந்திரியும், காங்கிரசின் தலைவருமான கருணாகரனின் மகன் முரளீதரன் திருச்சூர் தொகுதியில் போட்டியிடுகிறார். தனது தந்தையின் செல்வாக்கைக் கொண்டு, கேரள மாநில காங்கிரசு கமிட்டியின் பொதுச் செயலாளர் பதவியையும் வளைத்துப் போட்டுக் கொண்டுள்ளார், முரளீதரன். முரளீதரனை எதிர்த்து வலது கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிடும் வீ.வீ. ராகவன், அம்மாநிலத்தின் முன்னாள் முதல்வர் காலஞ்சென்ற அச்சுத மேனனின் மைத்துனர்.

ஆந்திராவில், முன்னாள் பிரதமர் நரசிம்ம ராவின் மகன் பி.வி. ராஜேஷ்வர் ராவ் செகந்திராபாத் தொகுதியிலும், மற்றொரு மகன் பி.வி. ரெங்கா ராவ் ஹனம்கோண்டா தொகுதியிலும் காங்கிரசு கட்சி சார்பில் போட்டியிடுகின்றனர். சந்திரபாபு நாயுடு அரசில் அமைச்சராக இருக்கும் எஸ்.வி. சுப்பா ரெட்டியின் மருமகன் புமா நாகிரெட்டி நந்தியால் தொகுதியில் இரண்டாம் முறையாகப் போட்டியிடுகிறார். புமா நாகிரெட்டியின் மனைவி ஷோபனா சட்டமன்ற உறுப்பினர்.

அரியானாவில் அம்மாநில முதல்வர் பன்சிலாலின் இளைய மகன் சுரிந்தர் சிங், பிவானி தொகுதியில் இம்முறையும் போட்டியிடுகிறார். அரியானா விகாஸ் கட்சி சார்பில் போட்டியிடும் சுரிந்தரை எதிர்த்து காங்கிரசு சார்பில் பன்சிலாலின் மூத்த மகன் ரன்பீர் மகேந்திரா போட்டியிடுகிறார். அதாவது, பிவானியில் நடப்பது ''சகோதர யுத்தம்''. இதே தொகுதியில், இவர்கள் இருவரையும் எதிர்த்து, அம்மாநில முன்னாள் முதல்வரான ஓம் பிரகாஷ் சௌதாலா, (இவர் முன்னாள் துணை பிரதமரான தேவிலாலின் மகன்) தனது மகன் அஜய் சௌதாலாவை அரியானா லோக்தள் (ஆர்) கட்சி சார்பில் நிறுத்தியுள்ளார். இவர்கள் தவிர, அம்மாநில முன்னாள் முதல்வர் ராவ் பிரேந்திர சிங்கின் மகன் இந்திரஜித்தும், (மகேந்திரகர் தொகுதி) தேவிலாலின் மற்றொரு மகன் ரஞ்ஜித்தும், (ஹிசார் தொகுதி) களத்தில் குதித்துள்ளனர்.

பஞ்சாபில், அம்மாநில முதல்வர் பிரகாஷ் சிங் பாதலின் மகன் சுக்பிர் பாதல், அகாலிதளம் — பா.ஜ.க. கூட்டணி வேட்பாளராக ஃபரீத்கோட் தொகுதியில் போட்டியிடுகிறார். இம்மாநிலத்தின் முன்னாள் முதல்வரான பிரதாப் சிங் கைரானின் மகன் குரிந்தர் கைரான், தரண் தரண் தொகுதியில் காங்கிரசு சார்பில் போட்டியிடுகிறார். குரிந்தர் கைரானின் சகோதரர் சுரிந்தர் கைரான், தனக்குப் போட்டியிட வாய்ப்பு அளிக்காததால், காங்கிரசில் இருந்து விலகி அகாலி தளத்தில் இணைந்து விட்டார். குரிந்தர் கைரானின் மகன் அதேஷ் பிரதாப் சிங் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதோடு, மாநில முதல்வர் பிரகாஷ் சிங் பாதலின் மகளையும் மணந்துள்ளார்.



அமேதி தொகுதி பிரச்சாரத்தின் பொழுது மகன் ராகுல், மகள் பிரியங்கா, மருமகன் வதேராவுடன் சோனியா: பிரச்சாரம் காங்கிரசுக்கா? இல்லை சோனியா குடும்பத்திற்கா?

மத்தியப் பிரதேச மாநிலத்தில், அம் மாநில முதல்வர் திக்விஜய் சிங்கின் சகோதரர் லட்சுமண் சிங், இம்முறையும் ராஜ்கர் தொகுதியில் காங்கிரசு வேட்பாளராகப் போட்டியிடுகிறார். முன்னாள் குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மாவின் மகன் அஷுடோஷ் சர்மா, காங்கிரசின் சார்பில் விதிஷா தொகுதியில் நிற்கிறார். தர் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் சத்தர் சிங் தர்பாரின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட பின், அவரின் மனைவி ஹேம

www.padippakam.com

லதா போட்டியிடுகிறார்.

பா.ஜ.க. கட்சியின் முக்கியத் தலைவர்க ளுள் ஒருவரான விஜயராஜே சிந்தியாவின் மகள் யசோதரா ராஜே சிந்தியா குனா தொகு தியில் பா.ஜ.க. வேட்பாளராக நிறுத்தப்பட் டார். ஆனால் இவர் அமெரிக்கக் குடியுரிமை யும் பெற்றிருப்பதால், இவரின் வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இவரின் மற்றொரு மகள் வசுந்தரா ராஜே சிந்தியா, பா.ஜ.க. வேட்பாளராக ஜலவர் தொகுதியில் நிறுத்தப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

காங்கிரசின் முக்கியத் தலைவரான மாதவ்ராவ் சிந்தியா, விஜயராஜே சிந்தியா வின் மகன் என்பது நாடறிந்த ஒன்று. ஏற்க னவே ஏழுமுறை பாராளுமன்ற உறுப்பினரா கத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், தனது வாரி சாக மகனை வளர்த்து வருகிறார். தாயும், மகனும் அதிகாரச் சுவையை பலமுறை ருசித்த பின்னும் திருப்தி கொள்ளாமல், இம்முறையும் போட்டியிடுகின்றனர். சிந்தி யாக்களின் குடும்பம் நீண்ட நாட்களா கவே அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டிருக் கும் குடும்பம் மட்டுமல்ல; குவாலியர் சமஸ்தானத்தின் அரச பரம்பரையினர் என் பதும் குறிப்பிடத்தக்கது.

பீகார் மாநில அரசில் எரிசக்தித் துறை அமைச்சராக இருக்கும் பிரிஜ் பிகாரி பிரசா தின் மனைவி ரமா தேவி, மோதிஹரி தொகுதியில் ராஷ்ட்ரிய ஜனதாதள வேட் பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். ஜார்கன்ட் முக்தி மோர்சாவின் தலைவர் மகாதோ வின் மனைவி, ஜாம்ஷெட்பூரில் பா.ஜ.க. வேட்பாளராக நிற்கிறார். ஐக்கிய முன் னணி அரசில், தொடர்வண்டித் துறை அமைச்சராக இருக்கும் ராம் விலாஸ் பஸ் வானின் மூன்றாவது சகோதரர் ராம்சந்தர் பஸ்வான், ரோசரா தொகுதியில் போட்டி யிடுகிறார்.


வாரிசுகளை அதிகாரத்தில் திணிப்பதில் ராம்விலாஸ் பஸ்வானும் யாருக்கும் சளைத்த வர் அல்ல. இவரது தம்பி பசுபதி குமார் பராசு, லல்லு அரசில் அமைச்சராக இருக்கி றார்; பஸ்வானின் மைத்துனர்கள் மூவரும், அவரது சம்பந்தியும் சட்டமன்ற உறுப்பினர் கள்; தனது மருமகன் சுனில்குமார் சாதுவை அதிகாரத்தில் திணிக்க முயன்று கொண்டிருக் கிறார்.

காஷ்மீரில், அம்மாநில முதல்வர் பரூக் அப்துல்லாவின் மகன் உமர் பரூக், முதன் முறையாக ஸ்ரீநகர் தொகுதியில் இருந்து போட்டியிடுகிறார். காஷ்மீரில் வாரிசு அரசி யலைப் பேணி, பாதுகாத்து, வளர்த்து வருவ தில் பரூக் அப்துல்லா குடும்பத்திற்கு தனிச் சிறப்பான இடமுண்டு. ''காஷ்மரின் சிங்கம்'' என்றழைக்கப்பட்ட ஷேக் அப்துல்லா, தான் சாகக்கிடந்த தருவாயில், கட்சியன் அனுபவ மிக்க தலைவர்களை எல்லாம் புறக்கணித்து விட்டு, தனது மகன் பரூக் அப்துல்லாவை தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவராக்கி னர். இதற்கு முன்பாகவே, பரூக் அப்துல் லாவை எம்.பி.யாக்கி மகிழ்ந்தார், அவர்.

பரூக் அப்துல்லாவிற்கும், அவரது மைத்துனர் ஜி.எம். ஷாவிற்கும் இடையே அதிகாரப் போட்டி வெடித்த பொழுது, ஜி.எம்.ஷா காங்கிரசின் ஆதரவோடு முதல மைச்சரானார். பரூக் அப்துல்லாவின் தாயார் பேகம் அக்பர் ஜஹான், சகோதரர் தாரிக், சகோதரி கல்தா, மற்றொரு மைத்துனர் ஜி.ஆர். மட்டு - இவர்கள் அனைவருமே வாரிசுரிமை அரசியல் பண்பாட்டால் அதிகா ரத்தைச் சுவைத்தார்கள்; சுவைத்து வருபவர் கள்.

காஷ்மீர் மாநிலத்தின் மற்றொரு தலை வரும், வி.பி.சிங் அமைச்சரவையில் உள் துறை மந்திரியாக இருந்தவருமான முஃப்டி முகம்மது சையது, தனது மகள் மெஹ்பூபா சயீதை, பிஜ்பெஹ்ரா தொகுதியில் நிற்க வைத்து, சட்டமன்ற உறுப்பினராக்கி யுள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில், பராமதி தொகுதியில் போட்டியிடும் காங்கிரசு வேட் பாளர் சரத் பவாரை எதிர்த்து பா.ஜ.க. அம்



காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லாவுடன், அவரது வாரிசு உமர் பரூக்: மூன்றாவது தலைமுறையாகக் கொடி கட்டிப் பறக்கும் வாரிசு அரசியல்.

மாநில முன்னாள் ஜனதாதள தலைவர் சம் போஜிராவ் காகடே குடும்பத்தைச் சேர்ந்த விரஜ் காகடேயை நிறுத்தியுள்ளது. நந்தேட் தொகுதியில் முன்னாள் மைய அமைச்சர் எஸ்.பி. சவானின் மருமகன் பாஸ்கர் ராவ் பாட்டில் காட்கவோன்கர், காங்கிரசு வேட்பா ளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஒரிஸ்ஸா மாநில முதல்வரின் மனைவி ஜெயந்தி பட்நாயக், ஏற்கனவே நாடாளு மன்ற மேலவை உறுப்பினராக இருந்து வருகி றார். இருப்பினும், இவரை பெர்காம்பூர் தொகுதி வேட்பாளராக நிறுத்தியுள்ளது காங் கிரசுக் கட்சி.

இமாசலப் பிரதேச மாநில முதல்வர் வீரபத்திர சிங்கின்-மனைவி பிரதிமா குமாரி, காங்கிரசு கட்சியின் மாநிலத் தலைவராக இருந்து வருவதோடு, மண்டி தொகுதியில் இருந்து பாராளுமன்றத்துக்குப் போட்டியிடு கிறார்.

அஸ்ஸாம் மாநில முதல்வர் மகந்தா வின் மனைவி ஜெயஸ்ரீ, நவ்காங் தொகுதி யில், அஸ்ஸாம் கண பரிசத் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

குஜராத் மாநில முன்னாள் முதல்வர் சிமன்பாய் படேலின் மனைவி ஊர்மிளா பென்னுக்கு இம்முறை போட்டியிட வாய்ப்பு கிட்டவில்லை; எனினும் இவரது மகன் சித் தார்தாவுக்கு ''சீட்டு'' கிடைத்தவிட்டது.

அருணாச்சலப் பிரதேச மாநில முதல்வ ரின் மகன் ஜியாங் அபங்கின் மகன் ஓமக் அபங், அருணாச்சலப் பிரதேச மேற்கு தொகு தியில் போட்டியிடுகிறார்.

முன்னாள் மைய அமைச்சர் கே.சி. பந்த், சமீபத்தில் பா.ஜ.க.வில் சேர்ந்துவிட் டார். கணவருக்கு முன்பாகவே பா.ஜ.க.வில் சேர்ந்துவிட்ட அவரின் மனைவி இலாபந்த், உ.பி. மாநிலத்திலுள்ள நைனிடால் தொகுதி யில் பா.ஜ.க. சார்பில் நிறுத்தப்பட்டுள்ளார்.

சென்ற நாடாளுமன்றத் தேர்தலின் பொழுது, ஹவாலா ஊழல் வழக்கில் சிக் குண்ட கமல் நாத்துக்கும், கிரிமினல் வழக் கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்ட கல்பனாத் ராய்க்கும் காங்கிரசு கட்சி சீட்டு கொடுக்க மறுத்து விட்டது. இதனால் கமல்நாத் தனது மனைவி அல்கா நாத்தை சிந்த்வாரா (ம.பி.) தொகுதியிலும், கல்பனாத் ராய் தனது மனைவி சுதா ராயை கோஸி தொகு தியிலும் சுயேச்சையாக நிற்க வைத்து வெற்றி பெற்றனர். இப்பொழுது இவ்விரு வருமே தங்கள் மனைவிகளை ஒதுங்கச் சொல்லிவிட்டு, அத்தொகுதிகளில் போட் டியிடுகின்றனர்.

இங்கே நாம் தொகுத்துக் கொடுத்தி ருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் போட் டியிடும் அரசியல் வாரிசுகளின் பட்டியல் முழுமையானதன்று. அங்கொன்றும் இங் கொன்றுமாக சில தொகுதிகளில் போட்டி யிடும் அரசியல் வாரிசுகளை மட்டும்தான் சுட்டிக் காட்டியுள்ளோம். அமைச்சர் பதவி கள், எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், வாரியத் தலைவர்கள், அரசுக் கமிட்டிகளின் தலை வர்கள் போன்றவற்றை மட்டுமல்ல, பஞ் சாயத்து - நகர சபை தலைவர்கள், உறுப்பி னர்கள் பதவிகளையும் அரசியல் தலைவர் களின் வாரிசுகள் விட்டு வைப்பதில்லை; கட்சியிலும் கூட இதுதான் நிலைமை.

திருச்சி மாநகராட்சி மேயர் பதவியில் அமர்ந்திருக்கும் புனிதவல்லி, முன்னாள் எம்.எல்.ஏ. பழனியாண்டியின் மனைவி. துணை மேயராக வலம் வரும் எமிலி ரிச்சர்ட் திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் அடைக்கல ராஜின் தங்கை. த.மா.கா.வைச் சேர்ந்த மைய அமைச்சர் அருணாசலத்தின் மனைவி, நெல்லை மாவட்டம் பஞ்சாயத்துத் தலைவ ராக உள்ளார். காரைக்குடி நகர்மன்றத் தலை வியாக இருக்கும் உமையாள் ஆச்சி, காரைக் குடி தொகுதி முன்னாள் தி.மு.க. எம்.எல்.ஏ. சித. சிதம்பரத்தின் மனைவி. காங்கிரசு கட்சித் தலைவர் திண்டிவனம் ராமமூர்த்தியின் தம்பி சம்பத் குமார் (த.மா.கா.) மரக்காணம் பஞ்சா யத்து யூனியன் தலைவர் மாயவரம் தொகுதி த.மா.கா. வேட்பாளரை மூப்பனாரின் தம்பி ரங்கசாமி மூப்பனார்தான் தீர்மானித்தார். ஜெயா ஆட்சியின் பொழுது, அவரது உடன் பிறவா சகோதரி சசிகலாவின் அக்கா மகன் கள் பாஸ்கரன், சுதாகரன், தினகரன் - இம்மூ வரின் செல்வாக்கு கோட்டைவரை பாய்ந் தது. இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

www.padippakam.com

ஓட்டுக்கட்சித் தலைவர்கள் தங்களின் ாரிசுகளை அரசியலில் இறக்கி, வளர்த்து, ருங்காலத் தலைவர்களாக உருவாக்கி விடு தற்கு காரணம் என்ன? உள்ளூரில் தறுத லகளாக சுற்றிக் கொண்டிருந்த வாரிசுகள் ட்டுமல்ல, அமெரிக்காவிலும், பிற மேலை ாடுகளிலும் வாழப் போனவர்களும், மிகப் பரும் நிறுவனங்களில் உயர்ந்த பதவிகளில் ருந்தவர்கள் கூட, அதையெல்லாம் உதறித் ள்ளிவிட்டு, அரசியலில் நுழைந்துவிடுவ ற்கு அடிப்படையென்ன? இந்தத் திடீர் லைவர்களை மக்களும் கூட ஏற்றுக் கொள் றார்களே - அதன் பின்னணி என்ன? வை எல்லாவற்றையும் விட, இந்தத் திடீர் லைவர்கள் அரசியலில் குதிப்பதற்கு முன்பு ப்படி வாழ்க்கை நடத்தினார்கள்? அரசிய ல் நுழைந்த பின்பு எப்படி வாழ்கிறார்கள்? ாட்டை வழி நடத்திச் செல்லக் கூடிய, மக்க க்குத் தலைமை தாங்கக் கூடிய தகுதி, றமை இவர்களுக்கு உண்டா? இக்கேள் கள் பரிசீலனைக்குரியவை.

இன்று ஓட்டுக்சீட்டு அரசியலில் ழையும் எவரும், "தான் இரண்டு காசா து சேர்க்க முடியுமா? தான் வாழும் பகுதி ல் மக்கள் மதிக்கும் தலைவனாக உலா ர முடியுமா?" என்ற சுயநல வெறியை றைத்துக் கொண்டுதான் அரசியல் நடத்தி ருகிறார்கள். கட்சியிலும், அரசிலும் ான் பெற்ற பதவி - அதிகாரத்தைப் பயன் டுத்திக் கொண்டு தரகு வேலை பார்ப்ப ன் மூலமும், இலஞ்சம், ஊழல், அதிகார றைகேடுகள் மூலமும், விபச்சாரம், கடத் ல், கள்ளச் சாராயம் போன்ற சட்ட விரோ த் தொழில்களின் மூலமும் சொத்து சேர்த் க் கொள்கிறார்கள். இப்படி சேர்த்த ணத்தைக் கொண்டு, தனக்கு நிரந்தரமாக ருமானம் ஈட்டித் தரும் சட்டபூர்வத் தாழில்களை - "ரியல் எஸ்டேட்", ஒயின் ஷாப்", "சினிமா தியேட்டர்", பஸ் - லாரி வாங்கி விடுவது", "ஃபை ரான்ஸ்", சுயநிதிக் கல்லூரிகள், பண்ணை ள்... இப்படித் தொடங்கி நடத்துகிறார்கள்; அதை மேலும், மேலும் விரிவாக்கிக் கொள்கி ார்கள்.

இப்படி பல வழிகளிலும் சேர்த்த சொத் தைப் பாதுகாக்க அவர்களுக்கு அரசியலின் ணை எப்பொழுதும் தேவை. இதன் காரண ாகவே, ஓட்டுக் கட்சித் தலைவர்கள் தனக்கு யதாகிவிடும் வேளையில் தங்களது வாரிசு ளை அரசியலில் இறக்கி விடுகிறார்கள். கட் யில் தனக்கு இருக்கும் அதிகாரம், தனது கோஷ்டிபலம், தனது பணபலம், தனது சாதி லம் இதையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு, வாரிசை எம்.எல்.ஏ.வாகவோ, ம்.பி.யாகவோ, மந்திரியாகவோ உரு வாக்கி விடுகிறார்கள்.

அதே பொழுதில் வாரிசுகள் தேர்தலில் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்படுவதைக் காட்டி, மக்களின் அங்கீகாரம் - ஆதரவுடன் தான் இவ்வாரிசுகள் அரசியலில் குதித்திருப் பதாகக் கூறி, வாரிசுகள் திணிக்கப்படுவதற்கு ஜனநாயகம் மூலாம் பூசி விடுகின்றனர். ஆனால், பல நூற்றுக்கணக்கான ஏழை அடி மட்டத் தொண்டர்கள் ஆண்டாண்டு கால மாக ஓட்டுக் கட்சிகளில் உழைத்து வந்தாலும், அவர்களுக்கு எல்லாம் கிடைக்காத வாய்ப்பு, ஊர் மேய்ந்து திரிந்து கொண்டிருந்த இவ்வாரிசுகளுக்குக் கிடைத்து விடுகிறதே. அது எப்படி? கட்சியின் வளர்ச்சிக்காகவும், மக்களின் நல்வாழ்வுக்காகவும் இவ்வாரிசுகள் அப்படியென்ன தியாகம் செய்து விட்டனர்?

ஓட்டுக் கட்சித் தலைவர்கள் கட்சியில் தனது செல்வாக்கு - அதிகாரம், கட்சிப் பணம், தனது சொந்தப் பணம் எல்லாவற்றையும் பயன்படுத்தி பொதுக் கூட்டம், மாநாடு, சுவரொட்டி, சுவரெழுத்து - இப்படி பலவகையான பிரச்சாரங்கள் மூலம், தங்களின் வாரிசுகள்தான் கட்சியின் அடுத்த தலைவர்கள் என்ற தோற்றத்தை உருவாக்குகின்றனர். இவர்கள்தான் - இவர்கள் மட்டும் தான் கட்சிப் பிரமுகர்களாக - தலைவர்களாக மக்கள் முன் நிறுத்தப்படுகின்றனர். பின்னர் தேர்தலிலும் போட்டியிட்டு வென்று, தாங்கள் ஜனநாயக ரீதியாகவே அரசியல் நடத்தி வருவதாகக் காட்டிக் கொள்கின்றனர்.



தேர்தல் பிரச்சாரத்தில் லல்லு தனது மனைவி ரப்ரிதேவியுடன்: 'சமூக நீதி'க் காவலரின் புதிய மனு நீதி

அமேதி தொகுதியில் தனது தாயுடன் திடீர் அரசியல் பிரவேசம் செய்த ராகுல் காந்தி, "இந்த தேசத்தைக் காப்பாற்ற கைக்கு ஓட்டுப் போடுங்கள்" எனப் பிரச்சாரம் செய்தார். அவர் சொல்கிறபடியே இந்த தேசம் ஆபத்தில் சிக்கிக் கொண்டு விட்டதாக வைத்துக் கொள்வோம். இப்படிப்பட்ட இக்கட்டான தருணத்தில், ராகுல் காந்தி இந்த நாட்டிலேயே தங்காமல், தனது இருப்பிடத்தை இங்கிலாந்துக்கு மாற்றிக் கொண்டு, தனது வெளிநாட்டுக் காதலியுடன் ஊர் சுற்றித் திரிந்து வருகிறார்.

இந்திய ஆளும் கும்பல் காஷ்மீர மக்களின் மீது மிகக் கொடூரமான அரசு பயங்கரவாத அடக்குமுறையை ஏவிவிட்டு, கொலை வெறியாட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்லக்கூட வராதவர் பரூக் அப்துல்லாவின் மகன் உமர் பரூக். இதுநாள் வரையிலும் இங்கிலாந்திலும், சிங்கப்பூரிலும் சுகமாக பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தார், அவர்.

ஒரிஸ்ஸா மாநிலம் ஆஸ்கா தொகுதியில் போட்டியிடும் பிஜு பட்நாயக்கின் மகன் நவீன் பட்நாயக், ஒரு வருடத்திற்கு முன்பு வரை, எழுத்தாளர் என்ற போர்வையில் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஊர் சுற்றிக் கொண்டிருந்தார்; ஐந்து நட்சத்திர விடுதிகளில் மேட்டுக்குடி கும்பல் நடத்தும் இரவு நேர மதுபான விருந்துகளில் கலந்து கொள்வது அவரது பொழுது போக்கு. இன்றோ ஒரிஸ்ஸாவில் அரசியல் போக்கைத் தீர்மானிக்கும் முக்கியப் புள்ளி.

பணக்காரக் குடும்பங்களில் தறுதலையாய் ஊர் சுற்றிக் கொண்டிருந்த பிள்ளையை குடும்ப வியாபாரத்தில் உட்கார வைப்பதைப் போல, வாரிசுகள் அரசியலில் திணிக்கப்படுகிறார்கள்; அல்லது அவர்களே விரும்பி வருகிறார்கள். ஓட்டுச் சீட்டு அரசியலில் குதித்துள்ள வாரிசுகள் அனைவருமே, தங்களது தந்தையின் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டும், முறைகேடான வழிகளில் வந்த சொத்தை ஆண்டு அனுபவித்துக் கொண்டும், உல்லாசமாக ஊர் சுற்றித் திரிந்த ஒட்டுண்ணிக் கும்பல்தான். "மக்கள் எப்படி வாழ்கிறார்கள்? அவர்களின் பிரச்சினை என்ன?" என்பது பற்றியெல்லாம் அறியாமல், அதன் மீதெல்லாம் அக்கறை கொள்ளாமல், குடிப்பதும், கும்மாளமிடுவதும், ஊர் மேய்ந்து திரிவதுமாக சுற்றிக் கொண்டிருந்த வாரிசுகள்தான், இனி நமது வருங்காலத் தலைவர்கள். எண்ணிப் பார்க்கவே அருவெறுக்கத்தக்க ஒன்றல்லவா இது!

இவர்கள் மக்கள் மத்தியில் தங்களைப் பிரபலபடுத்திக் கொள்ளவும், மக்களை தங்கள் தலைமையை ஏற்றுக் கொள்ளச் செய்யவும், கொள்கை, கோட்பாடு, மக்களின் பிரச்சினைகளுக்காகப் போராடுவது போன்ற அரசியல் நடைமுறைகளை விட, கவர்ச்சி வாதத்தையும், கோஷ்டிகளையும் தான் நம்பியுள்ளனர். "வலது - இடது என்ற கொள்கை அரசியல் எல்லாம் இனி தேவையில்லாதது" என வெளிப்படையாகவே அறிவித்தார், இந்திராவின் வாரிசான சஞ்சய் காந்தி.

கோயில் திருவிழாக்களை முன்னின்று நடத்துவது, வெள்ளம், தீ விபத்து போன்ற இயற்கையின் சீற்றங்களால் மக்கள் போண்டியாகி நிற்கும் பொழுது அரிசி, பருப்பு, உடைகள் என வாரிவிட்டு, மக்கள் மத்தியில் தங்களை வள்ளல்களாகக் காட்டிக் கொண்டு, அதன் மூலம் அப்பகுதிகளில் துதிபாடிகளை உருவாக்கிக் கொண்டு செல்வாக்கு செலுத்துகின்றனர்.

தமிழக முதல்வர் பதவியை எதிர்பார்த்து நிற்கும் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மகன் ஸ்டாலினுக்கே அமைச்சர் பொன்முடி, துணை சபாநாயகர் பருதி இளம்வழுதி, முன்னாள் அமைச்சரின் வாரிசு பொய்யாமொழி, புதுக்கோட்டை தொகுதி எம்.பி. சிவா எனக் கோஷ்டி தேவைப்படும் பொழுது, பிறரைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அதாவது, எந்தக் கழிசடை அரசியல் பண்பாட்டை ஆதாரமாகக் கொண்டு வாரிசுகள் தலைவர்களாக உருவாக்கப்பட்டார்களோ, அப்பண்பாட்டை இவர்கள் கொள்கைகளாகவே தூக்கிப் பிடிக்கின்றனர்.

• செல்வம்

www.padippakam.com

# பயங்கரவாத பீதியும் பார்ப்பன அரசியலும்

- இராஜீவ் கொலை
- கோவை தொடர் குண்டு வெடிப்புகள்

— இரண்டும் தொடர்பற்ற, தனித்தனியான சம்பவங்கள்தாம். ஆனால் இவை இரண்டுக்குமான காரணங்கள், இவற்றின் அரசியல் வீச்சு - விளைவுகளில் பல பொதுத் தன்மைகள் இருப்பதை அக்கறையுடைய பல அரசியல் விமர்சகர்கள் யாரும் ஒதுக்கிவிட முடியாது.

முதலாவதாக, இந்த இரு சம்பவங்களுமே தமிழ்நாட்டு அரசியலில் முக்கியத் திருப்புமுனைகளாக அமைந்துவிட்டன.

1991 மே மாதம் நடந்த இராஜீவ் கொலையும், 1998 பிப்ரவரி மாதம் நடந்த கோவை தொடர் குண்டு வெடிப்புகளும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களுக்கான உச்சகட்டப் பிரச்சாரத்தின் போது, வாக்குப் பதிவுக்கு ஒரு சில நாட்களே இருக்கும் போது நடைபெற்ற சம்பவங்கள்.

இராஜீவ் கொலைக்கு விடுதலைப் புலிகளும், கோவை குண்டு வெடிப்புகளுக்கு இசுலாமியத் தீவிரவாதிகளும் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு மன்றங்களில் தண்டிக்கப்படுகிறார்கள்.

அதே சமயம் இந்த இரண்டு சம்பவங்களுக்குமே கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசுதான் காரணம் என அரசியல் பழிதூற்றப்படுகிறது. தேர்தல்களில் தோற்கடிக்கப்படுவது, அரசியல் அதிகாரம் பறிக்கப்படுவது போன்றவைகளே அரசியல் குற்றங்களுக்குத் தரப்படும் தண்டனை என்று ஓட்டுக்கட்சி அரசியலில் வரையறுத்திருக்கிறார்கள். அந்த வகையில் தி.மு.க. மீண்டும் மீண்டும் தண்டிக்கப்படுகிறது.

இராஜீவ் கொலை, கோவை தொடர் குண்டு வெடிப்புகள் ஆகிய இரண்டு சம்பவங்களையுமே கிரிமினல் அரசியல் புத்தியுடன் அணுகி, அதிகபட்சம் ஆதாயம் அடைந்தது பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல்தான். இந்தக் கும்பல் 1991 தேர்தலில் காங்கிரசுடன் ஏற்படுத்திக் கொண்டிருந்த அரசியல் கூட்டை வைத்து, இராஜீவ் கொலைக்கான பழியை தி.மு.க. மீது சுமத்தி ஆதாயம் அடைந்தது; எதிர்க்கட்சிகள் அனைத்தையும் முற்றாகத் துடைத்துவிட்டு அந்தத் தேர்தலில் மிருகபலம் பெற்று, பிறகு பாசிசக் காட்டாட்சி நடத்தியது.

1998 தேர்தலில் இந்துத்துவ மதவெறி பாசிச பாரதீய ஜனதாவுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள அரசியல் கூட்டை வைத்து கோவை தொடர் குண்டு வெடிப்புகளுக்கு தி.மு.க. அரசே காரணம் என்று பழிபோட்டு ஆதாயம் தேடுகிறது. 1991 தேர்தல்களில் அடைந்ததைப் போன்று முழு ஆதாயம் அடைய முடியாமல் போனாலும், ஐந்தாண்டு ஊழல் பேயாட்சி நடத்தி அம்பலப்பட்டு, மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டிருந்த ஜெயா கும்பல் தன்னை ஓர் அரசியல் சக்தியாக மீண்டும் நிலைநிறுத்திக் கொள்ளும் அளவுக்காவது ஆதாயம் அடைந்துள்ளது.

இப்போது இருமுனைத் தாக்குதல்களை ஆளும் தி.மு.க. எதிர்கொண்டுள்ளது. இராஜீவ் கொலை வழக்கில் "தடா" சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பு, ஜெயின் கமிசன் அறிக்கை ஆகியவற்றை வைத்து தி.மு.க.வுக்கு எதிராக பாசிச சோனியா கும்பல் கட்டவிழ்த்துவிட்டுள்ள பழிவாங்கும் அவதூறுப் பிரச்சாரம்; கோவை தொடர் குண்டு வெடிப்புகளால் 60 பேர் சாகவும், அத்வானி மீதான கொலை முயற்சிக்கும் தி.மு.க. அரசுதான் காரணம் என்று இந்துத்துவ பாசிச பரிவாரங்கள் நடத்தும் அவதூறுப் பிரச்சாரம்.

வட்டம், மாவட்டம், மாநிலத் தலைமை வரை பல சிறிய பெரிய முதலாளிகள், பெரும் வியாபாரிகள், நிலவுடமையாள்களைக் கொண்டதுதான் தி.மு.க. கருணாநிதி குடும்பமே பல ஆயிரம் கோடி ரூபாய் தொழில்கள் - சொத்துக்களை வைத்துள்ள ஒரு தரகு முதலாளிக் குடும்பம்தான். அது மட்டுமல்ல, வாரிசு ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் அக்கறையுள்ள குடும்பம். ஆகவே, இன, மொழி உரிமை மட்டுமல்ல, ஓட்டுப் பொறுக்குவதற்கு வைத்துள்ள மாநில சுயாட்சிக் கோரிக்கைக்குக் கூட உரத்துக் குரல் கொடுக்கத் துணியாத இந்தக் கட்சி தேசிய நீரோட்டத்தில் இரண்டறக் கலந்து வெகு நாட்களாகி விட்டது. "தீவிரவாதத்தை ஒடுக்குவதில் பிற கட்சிகள் - அரசுகளுக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்ல" என்று சொல்லி போலீசை ஏவி விடுபவர்தான் கருணாநிதி.

இதை நன்கு அறிந்தும் காங்கிரசு - பாரதீய ஜனதா ஆகிய இரண்டும், பார்ப்பன - பாசிச ஜெயாவுடன் சேர்ந்து கொண்டு பாசிஸ்டுகளுக்கே உரிய கோயாபல்சுத் தன்மைகளோடும் நோக்கங்களோடும் அவதூறுப் பிரச்சாரம் செய்கின்றன.

இவர்கள் தி.மு.க.வைக் குறிவைத்துத் தாக்கி அரசியல் ஆதாயம் தேடிக் கொள்ளும் குறுகிய நோக்கத்தோடு நிற்பதில்லை. அதையும் தாண்டி தமிழினத்தையும், சிறுபான்மை மக்களையும், அவர்களுக்காகப் போராடும் இயக்கங்களையும் அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்கி ஒடுக்கும் நீண்ட கால நோக்கமும் உடையவையாகும்.

"பயங்கரவாத, பிரிவினைவாத, தீவிரவாதப் பீதியூட்டி அரசியல் ஆதாயம் அடைவதுதான் பார்ப்பன - பனியா பாசிச சக்திகளின் நீண்ட கால யுக்தியாக - சதியாக இருப்பதை" புதிய ஜனநாயகம் ஏடு தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்திருக்கிறது.

இதற்கு வசதியாக, இராஜீவ் கொலை மற்றும் கோவை தொடர் குண்டு வெடிப்புகளுக்குப் பின்னணியாக விளங்கும் பல உண்மைகளையும் பார்ப்பன - பனியா பாசிச சக்திகள் மூடி மறைக்கின்றனர்.

பார்ப்பன - பனியா பாசிச பிரதிநிதிகளான காங்கிரசு, பாரதீய ஜனதா இரண்டுமே இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை புரியக் கூடிய திட்டங்கள், இலட்சியங்கள் எதையும் வைத்திருக்கவில்லை. அதற்கு பதிலாக பயங்கரவாத, தீவிரவாத, பிரிவினைவாத பீதி கிளப்பி, அதைத் தடுக்கும் தலைவர்களாகவும் தியாகிகளாகவும் தங்களைக் காட்டிக் கொள்வதையே ஓட்டுப் பொறுக்கவும், ஆட்சியைப் பிடிக்கவுமான வழியாகக் கொண்டிருக்கிறார்கள். முன்பு ஆயுதக் கலாச்சாரம் பெருகிவிட்டதாகப் பீதி கிளப்பி ஓட்டுப் பொறுக்கினார்கள். இப்போது குண்டுக் கலாச்சாரம் பெருகி விட்டதாகப் பீதி கிளப்புகிறார்கள்.

ஆயுதக் கலாச்சாரம், குண்டுக் கலாச்சாரம், பயங்கரவாதம், தீவிரவாதம், பிரிவினைவாதம் எல்லாம் பல்கிப் பெருகுவதற்கு யார் காரணம்? என்ன காரணம்? பஞ்சாபில் பிந்தரன்வாலேயும், அசாமில் போடா தீவிரவாதிகளும், விடுதலைப் புலிகளும் யாரால் ஆயுத பாணியாக்கப்பட்டார்கள்? 1983 அசாம் தேர்தல் காலப் படுகொலைகளைத் தொடர்ந்து உல்ஃபாவும், 1989 தேர்தல் மோசடிகளைத் தொடர்ந்து காசுமீரிலும், ரதயாத்திரைகள் - செங்கற் பூசைகள் - பாபரி மசூதி இடிப்பு மதவெறிப் படுகொலைகளைத் தொடர்ந்து இசுலாமியத் தீவிரவாதமும் தோன்றின. ஆந்திராவில் அரசு பயங்கரவாதத்துக்கும், பீகாரில் நிலப்பிரபுப் படைகளின் படுகொலைகளுக்கும் பதிலடி கொடுப்பதற்காக வளர்ந்ததே "நக்சல்பாரி தீவிரவாதம்" இதற்கெல்லாம் காரணமாக இருக்கும் காங்கிரசு - பா.ஜ.க தலைவர்கள் தாங்கள் மட்டும் குண்டு துளைக்காத கோட்டு, சூட்டு, கார், கருப்புப் பூனை படை சகிதமாக வளம் வருகிறார்கள். இவற்றை வைத்துக் கொண்டு தாம் மட்டும் தப்பித்துக் கொண்டு, "அப்பாவி மக்களை"ப் பிளவுபடுத்தி மோதவிட்டு இரத்தம் குடிப்பதைத் தொடரலாம் என்று நம்புகிறார்கள். இலக்குத் தவறிய இயக்கங்கள் வேண்டுமானால் இந்தப் பார்ப்பன - பனியா பாசிச சதிகளுக்குப் பலியாகலாம். ஆனால் புரட்சிகர, ஜனநாயக சக்திகளிடமிருந்து அவர்கள் தப்ப முடியாது!



படிப்பகம்

www.padippakam.com

## ராஜீவ் கொலை வழக்கு:

# போர்க் குற்றவாளி தியாகியாம்! அரசியல் கொலைக்குத் தூக்காம்!

**ஈழம்: இராஜீவ் கும்பல் தலையீட்டின் நோக்கங்கள்**

✱ 1983 ஜூலை இனப்படுகொலையைத் தொடர்ந்து இந்தியாவில் - தமிழ்நாட்டில் புகலிடம் தேடி இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் ஓடி வந்தார்கள். அவர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு தழுவிய அளவில் அனைத்துத் தரப்பில் இருந்தும் தன்னியல்பான பேரெழுச்சி வெடித்து. ஈழத் தமிழினத்துக்கு ஆதரவாக இராணுவத் தலையீடு உட்பட அனைத்து வகையிலும் இந்திய அரசு உதவ வேண்டும் என்று கருணாநிதி, எம்.ஜி. ஆர்., நெடுமாறன், வீரமணி உட்பட எல்லாத் ''தமிழினத் தலைவர்''களும் கோரினர். ஈழ விடுதலையானது, தமிழ்நாட்டில் பிரிவினை வாதத்தைத் தூண்டிவிடும் என்றே காங்கிரசு, பாரதீய ஜனதா மற்றும் போலி கம்யூனிஸ்டு கட்சிகள் கருதின. எனவே அன்று தமிழ்நாட்டில் நிலவிய உணர்ச்சிக் கொந்தளிப்பை எதிர்த்திட முடியாத நிலையில் ஈழத்தமிழர் ஆதரவு முதலைக் கண்ணீர் வடித்தனர்.

✱ தெற்கு ஆசியாவில் இந்தியாவின் பிராந்திய ஆதிக்க, விரிவாக்க, ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கு ஈழப் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொள்ளும் சதியில் இந்திரா - இராஜீவ் கும்பல் இறங்கியது. இந்திய உளவுப் படையான ''ரா'' மூலம் ஈழத் தமிழர் போராளி அமைப்புகளுக்குள் ஊடுருவியது. போராளி அமைப்புகளுக்கு இராணுவப் பயிற்சி முகாம்களை நிறுவி ஆயுதப் பயிற்சி, கனரக ஆயுதங்கள், அதி நவீன செய்தித் தொடர்புக் கருவிகள், வாகனங்கள் மற்றும் ஏராளமான நிதி உதவி அளித்தது. ஆப்பத்தைப் பங்கு வைத்த குரங்கைப் போல, இராஜீவ் கும்பல் தன்னை ஒரு கட்டைப் பஞ்சாயத்துக்காரனாகத் தானே நியமித்துக் கொண்டு, சிங்கள - தமிழர் முரண்பாட்டைப் பயன்படுத்திக் கொள்ளத் துவங்கியது. சிங்கள இராணுவத்தை மட்டுமல்ல, சிங்கள சிவிலியன் இலக்குகளையும் மக்களையும் தாக்கி, பஞ்சாயத்தில் தனது நலன்களுக்கான நிபந்தனைகளை, அந்த அரசு ஏற்பதற்கான நிர்பந்தங்களை உருவாக்குவதில் ஈழப்போராளி அமைப்புகளைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டது.

✱ ஈழப்போராளி அமைப்புகளுள் புரட்சிகர, ஜனநாயக சக்திகளை ஒழித்துக் கட்டுவதில் குறியாக இருந்த இந்திய உளவுப்படை ''ரா'', பிற ஈழ அமைப்புகளில் எதுவும் சுபபலத்துடன் வளர்வதைத் தடுப்பது, அவற்றுக்குள் தீராத பகையை உருவாக்கி, மோத விட்டு இரத்தம் குடிப்பது, அவை எல்லாவற்றையுமே தனது கைப்பாவையாக வைத்துக் கொள்வது ஆகிய சதிச் செயல்களில் ஈடுபட்டது. ஈழப் போராளி அமைப்புகளுக்குள் நாய்ச்சண்டையை உருவாக்கி, தனது பிராந்திய ஆதிக்க - விரிவாக்க - ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கு விசுவாசமான கைப்பாவை அரசை ஈழத்தில் நிறுவும் வேலைகளில் இறங்கியது. இந்திய அரசின் பிராந்திய ஆதிக்க நலன்களுக்குச் சேவை செய்யத் தயாராக இருந்த விடுதலைப் புலிகள், அதே சமயம் அதன் கைப்பாவையாக இருக்க மறுத்ததோடு, தன்னையே ஈழத்தின் ஏகபோகப் பிரதிநிதியாக அங்கீகரிக்கும்படி நிர்பந்தித்தனர்.

✱ இராஜீவின் கட்டைப் பஞ்சாயத்து எத்தனிப்புகள் தோல்வியுற்று, சிங்கள இராணுவம் - விடுதலைப் புலிகள் போர் முற்றின போது, பிரச்சினையில் மீண்டும் தலையிடும் நோக்கத்தோடு ஈழத்தமிழருக்கு மனிதாபிமான உதவி என்கிற பெயரில் போர்க்கப்பல்கள் மூலம் ஊடுருவ முயன்றது; அதற்கு சிங்கள அரசு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கவே, விமானம் மூலம் உணவுப் பொட்டலங்கள் வீசியது. பிறகு இராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்த திட்டத்தை அதிரடியாகத் திணித்தது. ஒரு இலட்சம் சிப்பாய்கள், போர்க்கப்பல்கள், போர் விமானங்கள், ஏவுகணைகள், கவச வண்டி பீரங்கிகளுடன் அமைதிப்படை என்கிற பெயரில் ஈழத்தை ஆக்கிரமித்தது. இந்தியாவைப் போன்ற சில வரம்புக்குட்பட்ட மாநில அதிகார அமைப்பில் பங்கு, ஈழக் காவல்துறையில் புலிகளுக்கு வேலை வாய்ப்பு, 4000 கோடி ரூபாய் ஈட்டுத் தொகை ஆகியவற்றுக்கு இராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை ஏற்கும்படி, நயவஞ்சகமாக தில்லிக்கு அழைத்துச் சிறைப் பிடிக்கப்பட்ட புலிப்படைத் தளபதி பிரபாகரனை இராஜீவ் கும்பல் நிர்பந்தித்தது. 100 கோடி ரூபாய் முதல் தவணையைப் பெற்றுக் கொண்ட புலிகள் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திடம் சரணடைய மறுத்தபோது, ஒப்பந்தத்துக்கு மாறாக சில புலித் தளபதிகளைப் பிடித்து, சிங்கள இராணுவத்திடம் இந்தியப் படை ஒப்படைக்க முயன்று அவர்கள் தற்கொலை செய்து கொண்டபோது ஈழ ஆக்கிரமிப்பு போரும் தொடுத்தது.

✱ ஈழத்தில் போலியான தேர்தல்கள் நடத்தி வரதராஜப் பெருமாள் தலைமையில் தனது கைப்பாவை அரசை நிறுவியது. ஈழமக்கள் மட்டுமல்ல, பின்னர் சிங்கள மக்களும், அரசுமே எதிர்ப்புத் தெரிவித்தபோதும், ஈழ ஆக்கிரமிப்புப் போரைத் தொடர்ந்தது இராஜீவ் கும்பல். குண்டு வீச்சு, படுகொலைகள், கற்பழிப்புகள் ஆகிய அட்டூழியங்கள் - அக்கிரமங்கள் புரிந்ததோடு, நவீன ஆயுதங்களின் சோதனைக் களமாகவும் ஈழத்தைப் பயன்படுத்தியது. ஆனாலும் உலகிலேயே நான்காவது பெரிய இராணுவம் புலிகளை ஒடுக்கி, ஈழத்தை முற்றாகக் கைப்பற்றி, பிராந்திய ஆதிக்கத்தை நிறுவும் முயற்சியில் படுதோல்வி கண்டு திரும்பியது.

**போர்க்குற்றங்களுக்கான தண்டனையே இராஜீவ் கொலை**

✱ ஈழ ஆக்கிரமிப்பின்போது இந்திய இராணுவம் புரிந்த குற்றங்கள் பற்றிய பல புகார்கள் சர்வதேச அரங்கில், குறிப்பாக இந்

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் பிரபாகரன், ஆன்டன் பாலசிங்கத்துடன் பேரம் நடத்தும் ராஜீவ் காந்தி.



www.padippakam.com

தியப் பத்திரிகையாளர்கள், பார்வையாளர்களாலேயே சாட்டப்பட்டுள்ளன. அவை எதுவும் பகிரங்கமாக விசாரித்துத் தண்டிக்கப்படவில்லை. இரகசிய இராணுவ விசாரணையும் மூடிமறைப்புமே நடந்துள்ளன. ஆனால் இந்தக் குற்றங்களை ஈழ மக்களும் புலிகளும் மறந்து மன்னித்து விடத் தயாரில்லை. ஆகவே ஈழ ஆக்கிரமிப்பு - அக்கிரமங்களுக்கு முதன்மை பொறுப்பாளியாக கருதப்பட்ட இராஜீவ் காந்தி புலிகளின் தற்கொலைப் படையினரால் கொல்லப்பட்டார். அதிலும் குறிப்பாக, மனித குண்டாக மாறி இராஜீவைக் கொன்ற தாணுவின் கண்முன்னாலேயே அவளது தாயும், தங்கையும் நிர்வாணமாக்கி கற்பழிக்கப்பட்ட கொடூரத்தை அனுபவித்தவர். இவையெல்லாம் இராஜீவ் கொலைக்கான உள்நோக்கமாக சிறப்புப் புலனாய்வுக் குழுவால் "தடா" சிறப்பு வழக்கு மன்றத்தில் முன் வைக்கப்பட்டவைதாம். இவையெல்லாம் பகிரங்கமாக முன்வைத்து அலசுவதற்கு அஞ்சியே இராணுவ வழக்குமன்றம் போல இரகசிய விசாரணை நடத்தி, குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேருக்கும் மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.

✽ இராஜீவ் கொலைக்கு முன்னும் பின்னும் இயற்கையான, சட்டப்படியான நீதி முறைமைகள் எல்லாமே மறுக்கப்பட்டு, நிரபராதிகளை வேட்டையாடும் அரசு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. தி.மு.க. புலிகள் ஆதரவு அமைப்பு அல்லவென்று தெரிந்தும், இராஜீவின் ஈழ ஆக்கிரமிப்பு குற்ற நடவடிக்கைகளை ஆதரிக்க மறுத்ததற்காக அதன் ஆட்சி கலைக்கப்பட்டது. இராஜீவ் கொலைப் பழி தி.மு.க.வின் மீது சுமத்தப்பட்டு, அந்த அவதூறுப் பிரச்சாரத்தையே ஆதாரமாக வைத்து, பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் ஆட்சியைப் பிடித்தது. தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்த புலிகள், புலிகளின் ஆதரவாளர்கள் மட்டுமல்ல, ஈழ அகதிகள், ஈழ ஆதரவுத் தமிழர் இயக்கங்கள் அனைத்தின் மீதும் அரசு பயங்கரவாத அடக்குமுறை ஏவப்பட்டது. தி.மு.க. அமைச்சர் உட்பட பலர் மீது "தடா" வழக்குகள் தொடுக்கப்பட்டன. ஈழப்பிரச்சினை, இராஜீவ் கொலை பற்றிய நியாய அநியாயங்களை விவாதிக்கவும் முடியாமல் வாயடைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பார்ப்பன - பனியா பாசிச ஆளும் சக்திகளுக்கு மாறான கருத்துக்கள் எல்லாம் தேச விரோதமானவை என்று முத்திரை குத்தி ஒடுக்கப்பட்டன.

✽ பார்ப்பன - பாசிச ஜெயா அரசால் தொடுக்கப்பட்ட "தடா" வழக்குகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டன. பத்மநாபா கொலை வழக்கிலும் போலீசு "விசாரணை"யில் கைதியிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தை அவருக்கு எதிராகப் பயன்படுத்தும் "தடா" சட்ட வசதியைப் பயன்படுத்தி, கொலையாளிகளுடன் "தொடர்பு" என்கிற அற்பக் குற்றத்துக்காக நால்வருக்கு மட்டுமே சுமார் ஐந்தாண்டு தண்டனை விதிக்கப்பட்டது. இராஜீவ் கொலை வழக்கில் 41 பேர் மீது குற்றஞ்சாட்டி, அதில் சுமார் 12 பேரை கொலை அல்லது தற்கொலைக்குப் பலியாகும்படி செய்து, மீதி 26 பேருக்கும் மரணதண்டனை எனத் தீர்ப்பானது - இதுவும் பத்திரிகையாளர்கள் முதல் நீதித்துறையினர் வரை அனைத்துத் தரப்பினரும் அரசு பயங்கரவாத மிரட்டலின் கீழ் வைக்கப்பட்டுள்ள சூழ்நிலையோடு சேர்த்தே இந்த தீர்ப்பு வந்துள்ளது. ஆறு ஆண்டுகள் கோமாளித்தனமாகவும், கேளிக்கூத்தாகவும் நடத்தப்பட்ட ஜெயின் கமிசன் விசாரணைக்கு திடீரென்று முக்கியத்துவமளித்து, பழிவாங்கும் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தியது, பார்ப்பன - பனியா பாசிச காங்கிரசு.



இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் அன்றைய இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே மற்றும் ராஜீவ் காந்தி: இந்தியாவின் மேலாதிக்கக் கனவு சிதைந்து போனது.

இந்த உண்மை விவரங்களின் அடிப்படையிலும் இயற்கையான நியதிப்படியும் என்ன செய்ய வேண்டும்? யுகோஸ்லாவியா நாட்டில் சிறுபான்மை இசுலாமியரைக் கொன்று குவித்த செர்பிய இராணுவத் தளபதியைப் பிடித்து, போர்க் குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றம் விசாரிப்பதைப் போல, போர்க்குற்றங்களுக்காக நாஜி மற்றும் பாசிச இராணுவத்தினை நூரம்பர்க் நீதிமன்றத்தில் விசாரித்து தண்டித்ததைப் போல, இராஜீவ் கும்பலும் தண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். இதைச் செய்யத் தவறியதால், பழிவாங்கும் நோக்கத்துடன் இராஜீவ் கொல்லப்பட்டிருப்பதால், இது ஓர் அரசியல் குற்ற வழக்காகக் கருதி பகிரங்கமாக விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

### இராஜீவ் கொலை: "அரசியல் குற்றமே" கிரிமினல் தண்டனை கூடாது

"அரசியல் என்பது இரத்தம் சிந்தாத யுத்தம். யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல்" இந்த வகையில் இராஜீவ் கொலை ஓர் அரசியல் கொலை; அது மட்டுமல்ல, அதன் பின்னரும் அந்தக் கொலை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இயற்கை நீதிப்படியும், இந்தியத் தண்டனைச் சட்டப்படியும் கூட எந்த ஒரு குற்றத்துக்கும் அதற்கான காரணங்கள் — நோக்கங்கள் அடிப்படையிலேயே தண்டனை வழங்கப்பட வேண்டும். அப்படி இல்லாமல், குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்கு என்கிற தீர்ப்பிலேயே அரசியல் கரைபடிந்துள்ளது. இந்திய அரசியலில் இராஜீவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதே சமயம், இது மாதிரியான கொடூரமான குற்றம் மீண்டும் நடைபெறாமல் தடுப்பதற்காகவே கடுமையான தண்டனை வழங்குவதாகக் கூறி நியாயப்படுத்தப்படுகிறது.

குற்றத்துக்குரிய தண்டனையோடு நிறுத்திக் கொள்ளாமல் அதையும் தாண்டி, அதற்கு மேலாக போய் செய்யாத குற்றத்துக்காகவும், குற்றத்தின் தன்மைக்கு மீறியும் கடுமையாகத் தண்டிப்பது என்கிற உள்நோக்கமுடையதுதான் "தடா" சட்டம். குற்ற நடவடிக்கையுடன் சம்பந்தப்படாத நபர்களையும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் தற்செயலாகத் தொடர்பு கொண்டிருந்தவர்களையும்கூடத் தண்டிப்பதற்கான ஏற்பாடுதான் "தடா". இதன் மூலம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ("தடா") என்கிற பெயரில் அரசு பயங்கரவாதத்தை ஏவி விடுவதுதான் ஆளுவோரின் நோக்கமாக உள்ளது. அதாவது, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பாயும் என்கிற பயபீதியை நாட்டு மக்களிடையே பரப்பி, அவர்களை அடக்கி ஒடுக்கி வைப்பதுதான் "தடா". இராஜீவ் கொலை வழக்குத் தீர்ப்பிலே இது பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வகையில், ஜெயின் கமிசன் இடைக்கால அறிக்கை எவ்வாறு தமிழின மக்கள் அனைவருக்கும் எதிராகப் பழிதூற்றும் தீர்ப்பு வழங்கியதோ, அதே போன்ற நோக்கத்தை இராஜீவ் கொலை வழக்குத் தீர்ப்பும் கொண்டிருப்பதைக் காணலாம். ஆனால், தங்களுக்கு இத்தகைய பயங்கரவாத பயபீதியூட்ட வேண்டிய அவசியமேதும் இல்லை; பார்ப்பன - பனியா பாசிச கும்பலை உண்மையில் எதிர்த்திடும் துணிச்சல் தங்களுக்குத் துளியும் கிடையாது; தாங்கள் வெறும் சவடால் பேர்வழிகள் தாம் என்பதை தி.மு.க. முதல் நெடுமாறன், வீரமணி, மணியரசன், சுபவீ - தியாகுவரை "தமிழினத் தளபதிகள்" எல்லோருமே வெளிப்படையாகக் காட்டிக் கொண்டு அலறுகின்றனர்.

எனவேதான் இராஜீவ் கொலை சம்பந்தமான துணிச்சலான அரசியல் நிலையெடுத்து எதிர்த்தாக்குதல் தொடுப்பதற்கு பதில், கோழைத்தனமான சரணாகதிவாத நிலை

www.padippakam.com

எடுக்கின்றனர்; ஏதாவது துக்கடா வாதங்களை. இரண்டாவது, மூன்றாந்தர சாக்கு போக்குகளைக் கூறுகின்றனர். தான் புலிகள் ஆதரவாளர் அல்ல; தமிழ்நாட்டில் புலிகளை ஒடுக்குவதில் தானே அதிக அக்கறையுடையவர் என்று வாதிட்டு, ஈழ அகதிகளுக்கும் ஈழ ஆதரவாளர்களுக்கும் எதிரான நடவடிக்கைகள் எடுப்பதில் பார்ப்பன - பாசிச ஆளும் கும்பலிடம் நற்சான்றிதழ் வாங்குவதையே நோக்கமாகக் கொண்டு கருணாநிதி செயல்படுகிறார்.

இராஜீவ் கொலையைத் தொடர்ந்து வந்த அடக்குமுறையைக் கண்டஞ்சிய தமிழினத் தளபதிகள், புலிகள் அக்கொலையைச் செய்யவில்லை, சிவராசன் - தாணு - சுபா போன்றவர்கள் சி.ஐ.ஏ. அல்லது மொசாத் கைக்கூலிகளாக இருக்கலாம்; சுப்பிரமணிய சாமி - சந்திராசாமி அல்லது காங்கிரசு ஏவிவிட்டவர்களாக இருக்கலாம் என்று வாதிட்டனர். காங்கிரசுக்குள்ளிருக்கும் பிழைப்பு வாதிகளைப் புலிகள் பயன்படுத்திக் கொண்டதையும், காங்கிரசு கும்பல் சண்டை இராஜீவ் கொலைக்குச் சாதகமான வாய்ப்புகளை உருவாக்கித் தந்ததையும் மூடி மறைத்திட விசாரணையாளர்கள் முயலுகின்றனர். இதனால் கிடைக்கும் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொள்வதுதான் தமிழினத் தளபதிகளின் யுக்தியாக இருந்தது.

இப்போதும் சாதாரணக் கொலை வழக்குகளில் முரண்பாடுகளையும், ஓட்டைகளையும், கண்டுபிடித்து வாதங்கள் புரியும் கிரிமினல் வழக்குரைஞர்களைப் போலவே தமிழினத் தளபதிகளும் பேசுகின்றனர். சில நிரபராதிகள் மீது குற்றஞ்சுமத்தி இருப்பது, குற்றங்களின் தன்மைக்கேற்ப தண்டனை என்றில்லாமல் அனைவருக்கும் மரண தண்டனை வழங்கி இருப்பது, உலகில் எங்குமே இல்லாத அளவுக்கு குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேருக்கும் மரண தண்டனையா எனக் கேட்டு முதலாளித்துவ சட்ட வல்லுநர்களே அதிசயிப்பது - இவையே தமிழினத் தளபதிகள் முதன்மைப்படுத்தும் வாதங்கள்.

அதற்குமாறாக, கொலைக்கான முதன்மைக் காரணங்களைப் பரிசீலித்து, அரசியல் கொலையாகக் கருத வேண்டும்; அரசியல் பழிவாங்கும் தண்டனையை நிராகரித்து, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குக் காரணமான ஜெனரல் டய்ரை இலண்டனில் கொன்ற உத்தம் சிங், ஏகாதிபத்திய அதிகாரியை இலண்டனில் சுட்டுக் கொன்று பழிதீர்த்த குதிராம் போஸ் ஆகியோரின் செயல்கள் அரசியல் கொலைகள் என்கிற முறையிலேயே மதிப்பிடப்படுகின்றன.

இராஜீவ் கொலையும் அப்படியே கருதப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, இராஜீவ் கொலையைச் சாக்காக வைத்துப் பல வழிகளிலும் தமிழ் மக்களுக்கும், தமிழின இயக்கங்களுக்கும் எதிராக அரசு பயங்கரவாத மிரட்டல்கள், ஒடுக்குமுறைகளை ஏவிவிடுவதை நிறுத்த வேண்டும்; அரசியல் ஆதாயம் தேடுவதை முறியடிக்க வேண்டும் என்று போராடுவதே பார்ப்பன - பாசிச ஆளும் சக்திகளின் சதிகளை - பழிவாங்குதலை முறியடிக்கும் சரியான வழியாகும்.

## தொலை தொடர்பு ஊழியர்களின் ஒற்றுமையைக் குலைக்க சதி! துரோகத் தலைவரை எதிர்த்துத் தந்தி ஊழியர்கள் போர்க்கொடி!!

தொலை தொடர்புத் துறையின் ஒரு பகுதியாக தந்திப் பிரிவு இருந்து வருகிறது. இத்துறையைத் தனியாகப் பிரித்து, அஞ்சல் துறையுடன் சேர்ப்பதற்குத் திட்டமிட்டு வருகிறது மைய அரசு. தொலை தொடர்புத் துறை தனியார்மயமாக்கப் படுவதை எதிர்த்து விடாப்பிடியாகப் போராடி வரும் தொலை தொடர்பு ஊழியர்களின் ஒற்றுமையைக் குலைத்து, அதன் மூலம் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவது என்னும் ஆட்சியாளர்களின் இச்சதிக்கு உடந்தையாக இருந்து வருபவர் தந்தி ஊழியர்கள் சங்கத்தின் அகில இந்தியப் பொதுச் செயலர் ராமன் குட்டி. இந்தத் தொழிலாளர் வர்க்க விரோத ராமன் குட்டி, 'மார்க்சிஸ்ட்' கட்சியின் சார்பு தலைவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் சமீபத்தில் சென்னை மத்திய தந்தி அலுவலகத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசுவதற்காக தில்லியில் இருந்து வந்திருந்தார். ஆனால், இவரது துரோகத்தனத்தை அறிந்து குமுறிக் கொண்டிருந்த ஊழியர்கள், "பிளவுவாத ராமன்குட்டியே வெளியேறு" என முழக்கமிட்டு, ராமன் குட்டியை மத்திய தந்தி அலுவலகத்தினுள் நுழைய விடாதபடி தடுத்து நிறுத்தி விட்டனர். ராமன் குட்டியை வரவேற்று அவரது ஆதரவாளர்கள் வைத்திருந்த தட்டிகளையும், "பேனர்"களையும் அடித்து நொறுக்கிய தந்தி ஊழியர்கள், மத்திய தந்தி அலுவலகத்தின் பிரதான நுழைவாயில் கதவையும் இழுத்துப் பூட்டினர்.

துரோகி ராமன் குட்டி போலீசை வரவழைத்து, ஊழியர்களை அடித்து விரட்டி உள்ளே நுழைந்து விடலாம் எனத் திட்டம் தீட்டியதோடு, எப்படியாவது உள்ளே நுழைந்து விடுவதற்காக நிர்வாகத்தின் காலிலும் விழுந்தார். ராமன் குட்டி எண்ணியபடி போலீசைக் கண்டதும் ஊழியர்கள் அஞ்சி பின் வாங்கி விடவில்லை; மேலும் போர்க்குணத்தோடு அலுவலகத்தின் முன்னுள்ள தரையில் அமர்ந்து, போலீசையும், அதிகாரிகளையும் தடுத்து நிறுத்தினர். ஊழியர்களின் கோபக் கனலைக் கண்டு பின்வாங்கிய போலீசு, "தொழிலாளர்களை அனுசரித்துப் போகுமாறு" இராமன் குட்டியிடம் அறிவுரை சொல்லிவிட்டுச் சென்றது. இராமன் குட்டியை மூன்று மணி நேரம் கால் கடுக்க நிற்க வைத்து, அவமானப்படுத்தித் துரத்தி விட்டதன் மூலம், துரோகத் தலைவனுக்குச் சரியான பாடம் கற்பித்துள்ளனர் தந்தி ஊழியர்கள்.

தகவல்:
புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி,
சி.டி.ஒ. பிரிவு, சென்னை.

## என்ஃபீல்டு நிர்வாகத்தின் சட்டவிரோதக் கதவடைப்பு

சென்னை நகரில் நல்ல இலாபத்துடன் இயங்கி வரும் என்ஃபீல்டு தொழிற்சாலையை அதன் நிர்வாகம் எவ்விதக் காரணமோ, முன்னறிவிப்போ இன்றி 6.2.98 அன்று சட்டவிரோதமாக இழுத்து மூடி, ஆயிரம் தொழிலாளர்களின் வாழ்வினை ஒரே நொடியில், ஒரே உத்தரவில் நாசமாக்கி விட்டது. ஒரு தொழிற்சாலையில் கதவடைப்பு அறிவிப்பதற்கு நிர்வாகம் பின்பற்ற வேண்டிய சட்ட விதிகளைத் துச்சமாகக் காலில் போட்டு மிதித்து விட்டு, "தொழிலாளர்கள் சம்பள உயர்வு கேட்கிறார்கள்; போனசு கேட்கிறார்கள்" என்ற ஒரே காரணத்திற்காகவே ஆலையை இழுத்து மூடியுள்ளது நிர்வாகம்.

என்ஃபீல்டு ஆலையில் ஏற்கனவே போடப்பட்ட சம்பள சீரமைப்பு ஒப்பந்தம் காலாவதியாகி 13 மாதங்கள் முடிந்து விட்டன. சம்பள உயர்வு தராமல் இழுத்தடித்து வரும் நிர்வாகம், 96 - 97-ஆம் ஆண்டுக்கான போனசையும் உரிய தேதியில் தொழிலாளர்களுக்கு வழங்கவில்லை. போனசு பிரச்சினை தொடர்பாக அவ்வாலைத் தொழிற்சங்கம் நிர்வாகத்துடன் பலமுறை பேச்சு வார்த்தை நடத்தி, ஒப்பந்தமொன்றை உருவாக்கியது.

இத்தருணத்தில் கரடி போல் புகுந்த என்ஃபீல்டு தொழில் உறவு அதிகாரி முத்துக் குமாரசாமி, "சம்பள சீரமைப்பு ஒப்பந்தத்தையும் போனசுடன் இணைக்க வேண்டும்; விலைவாசி உயர்வுக்கு ஏற்றாற்போல் பஞ்சப்படியை உயர்த்தித் தர முடியாது; சம்பள உயர்வை உற்பத்தித் திறனுடன் இணைக்க வேண்டும்" என நிபந்தனைகளைப் புகுத்தி, போனசு வழங்குவதற்கு முட்டுக்கட்டை போட்டார்.

நிர்வாகத்தின் இந்த அடாவடித்தனமான நிபந்தனைகளை தொழிலாளர்கள் ஏற்க மறுத்துவிட்டதால், போனசு மற்றும் சம்பள உயர்வு பிரச்சினைகள் மீண்டும் இழுபறி நிலைக்குச் சென்று விட்டன. தொழிலாளர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக, தினந்தோறும் ஆலை நுழைவாயிலின் முன்பு முழக்கப் போராட்டம் நடத்தி வந்தனர்; தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திடவும் திட்டமிட்டனர்.

இந்த நிலையில்தான் என்ஃபீல்டு நிர்வாகம் கதவடைப்பை அறிவித்தது. சம்பள தேதிக்கு (07.02.98) முதல் நாள் 06.02.98 அன்று கதவடைப்பை அறிவித்து, தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய சனவரி மாத சம்பளத்தையும் முடக்கிவிட்டது. தொழிலாளர்களைப் பட்டினிக்குள் தள்ளி, தனது வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என மனப்பால் குடிக்கும் நிர்வாகத்தின் பழிவாங்கும் செயல்தான் இது.

தகவல்:
புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, சென்னை.

www.padippakam.com

# எது கொடூரம்! உயிருடன் எரிப்பதா? குண்டு வைப்புக் கொலையா?

### வெடிகுண்டுக் கலாச்சாரம் இந்துத்துவ பாசிஸ்டுகளின் அவதூறு

இசுலாமியத் தீவிரவாதிகள் ஆறு பேரும், இந்து வெறியர்கள் இரண்டு பேரும் உட்பட 60 பேரைக் காவு கொண்ட கோவை தொடர் குண்டு வெடிப்புகளும், அவற்றைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் பரவியுள்ள வெடிகுண்டுப் புரளியும் வதந்தியும் பயபீதியும், வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பு - தேடுதல் - கைதுகளும் தமிழ்நாட்டையே குலுக்கிக் கொண்டிருக்கின்றன.

தொடர் குண்டுவெடிப்புகளுக்குப் பின்னணி இசுலாமியத் தீவிரவாதிகளின் திட்டமிட்ட பயங்கரவாதச் செயல்தான். அதைப் போலவே வெடிகுண்டுப் புரளி - வதந்தியும், பயபீதியும் ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி - பி.ஜே.பி. ஆகிய இந்து மதவெறி பாசிச சக்திகளும், அ.தி.மு.க. கிரிமினல் கும்பல்களும் திட்டமிட்டுப் பரப்பும் சதிவேலைகள் தாம். இந்தச் சதிச் செயல்களில் வாராவாரம் ''துக்ளக்'', வாரமிருமுறை ''ஜூனியர் விகடன்,'' தினசரி ''தினமலர்'' ஆகிய பார்ப்பன ஏடுகள் இந்த அணிக்கு உறுதுணையாக செயல்படுகின்றன.

தமிழ்நாட்டை ''பயங்கரவாத மாநிலம்'' என்று பார்ப்பன பாசிச ஜெயலலிதா பிரகடனப்படுத்தியுள்ளார். கருணாநிதிதான் இதற்குப் பொறுப்பென்று ஆவேசமாகப் பிரச்சாரம் செய்கிறார். மூப்பனார் - ரஜினி சேர்க்கையை ஆதரித்து ஜெயலலிதாவுடன் தற்காலிக ஊடல் கொண்டுள்ள துக்ளக் ''சோ'', இந்துத்துவ பாசிச ஊதுகுழல் என்கிற முறையில் இன்னும் கடுமையாக கருணாநிதியைச் சாடுகிறார்.

''கோவை கொடூரத்திற்குக் காரணம் தமிழக அரசுதான். மதச்சார்பின்மை என்ற போர்வையில் ஒளிந்து கொண்டு, ஹிந்து மத விரோதத்தைத் தூண்டுகிற வகையில் தி.மு.க. அரசின் நடவடிக்கைகளும் முதல்வரின் பேச்சுகளும் தொடர்கின்றன. தி.மு.க. அரசின் ஓட்டுப் பிச்சை நடவடிக்கைகள், முஸ்லீம் தீவிரவாதிகளுக்குத் துணிவைக் கொடுத்து விட்டது. தீவிரவாதத்தை ஒடுக்கும் போலீசு அதிகாரியின் இடமாற்றம், முதல்வரின் பேச்சு ஆகியவை தீவிரவாதிகளிடம் நம்பிக்கையும், போலீசாரிடம் அவநம்பிக்கையையும் வளர்த்தன; இவற்றின் விளைவுதான் கடந்த ஆண்டு டிசம்பர் கோவை வன்முறைகளுக்குக் காரணம்'' என்று துக்ளக் ''சோ'' எழுதுகிறார்.

ஜெயலலிதா தலைமையில் பார்தீய ஜனதா கட்சியும் அதிமுகவும் கூட்டணி அமைத்திருப்பதால் கோபமடைந்த கருணாநிதி முஸ்லீம் தீவிரவாத இயக்கங்களுக்கு ஆதரவு தருவதாகக் குற்றஞ் சாட்டுகின்றனர். ''கோயம்புத்தூரில் வெடிகுண்டுகள் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன'' என்று பா.ஜ.க. எம்.பி. எச்சரித்தார்; ''பாகிஸ்தான் உளவு ஸ்தாபனம் தமிழகத்தில் நாச வேலைக்குத் திட்டமிட்டிருக்கிறது'' என்று இந்து முன்னணி இராம. கோபாலன் எச்சரித்தார்; ''பா.ஜ.க. தலைவர்களுக்குக் குறி வைக்கப்பட்டிருக்கிறது'' என்று தஞ்சை குண்டுவெடிப்பைத் தொடர்ந்து தமிழக பா.ஜ.க. தலைவர்கள் எச்சரித்தார்கள்; இவர்கள் முதல்வரைச் சந்தித்து, ''தமிழகத்தில் அமைதியைக் குலைக்கவும், மத விரோதத்தைத் தூண்டவும் நாச வேலையைச் செய்யவும் முஸ்லீம் தீவிரவாத இயக்கங்கள் முனைகின்றன'' என்று எச்சரித்தனர்; இவ்வளவுக்கும் பிறகு கருணாநிதி அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை, என்கிறார் துக்ளக் சோ.

''தொடரும் வெடிகுண்டு நிகழ்ச்சிகளில் எல்லாம் முஸ்லீம் தீவிரவாதக் கூட்டங்கள் மிரட்டல் விடும் பிரசுரங்கள் வீசப்படுகின்றன; வேறு யாரும் இதில் சம்பந்தப்பட்டதாக எந்த ஒரு தடயமும் கிடைப்பதில்லை; இருந்த போதும், ''இது இசுலாமியத் தீவிரவாத இயக்கங்கள் செய்த வேலையா? அல்லது அவர்களுக்குக் கெட்ட பெயர் வரவேண்டும் என்பதற்காக வேறு யாராவது செய்த வேலையா? என்பதை விசாரிக்கிறோம்'' என்று முதல்வர் கூறுகிறார். ஆகவே முஸ்லீம் தீவிரவாத இயக்கங்களுக்கு தமிழகத்தில் ஆதரவு தருவது முஸ்லீம்கள் அல்ல. தமிழக அரசுதான் என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சியே வேண்டாம்...'' என்று ஆர்.எஸ்.எஸ். இந்துவெறியர்கள் சார்பாக துக்ளக் சோ வாதிடுகிறார்.

''இத்தனை அட்டூழியத்திற்குப் பிறகும், பாரதீய ஜனதா தீவிரவாதிகளும், முஸ்லீம் தீவிரவாதிகளும் கோயம்புத்தூரில் இருப்பதாலும், பாபர் மசூதி இடிப்பின் விளைவாகவும் கோவை குண்டு வெடிப்புகள் நடப்பதாக தமிழக முதல்வர் கூறுகிறார். இது பொறுப்பற்ற, நாணயமற்ற பேச்சு. பா.ஜ.க. தீவிரவாதிகள் என்று ஒரு கூட்டம் இருப்பதாக முதல்வர் கண்டுபிடித்திருப்பது ஒரு விந்தை. பாபர் மசூதி இடிப்பின் காரணமாக குண்டு வெடிப்புகள் நடக்கின்றன என்பது முழு பிதற்றல். மசூதி இடிப்புதான் காரணமென்றால் - மற்ற மாநிலங்களில் ஏன் இந்த தொடர் குண்டு வெடிப்புகள் நிகழவில்லை? அதற்குக் காரணம், முதல்வரால் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் பா.ஜ.க. தீவிரவாதிகள்தான் என்றால் — அவர்கள் ஏன் நாட்டின் மற்றப் பகுதிகளில் காணப்படவில்லை? பாரதீய ஜனதா கட்சி தமிழகத்தில் காலடி வைத்த பிறகு இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்கிறார் முதல்வர். பாராளுமன்றத்தில் முதன்மையான கட்சி, பல மாநிலங்களில் ஆட்சி செய்து கொண்டிருக்கிற கட்சி, நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பங்கினரின் வாக்குகளைப் பெற்று வருகிற கட்சி, தமிழகத்தில் நுழைந்தால், குண்டு வெடிப்பும் உயிர்ச் சேதமும் நிகழத்தான் செய்யும் - என்று கூறுகிறாரா முதல்வர்? வன்முறையை மேலும் தூண்டிவிட முதல்வர் விரும்பினால் - இம்மாதிரி பேசுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் முதல்வராகச் செயல்பட விரும்பினால், இம்மாதிரி பேசுவதை அவர் நிறுத்த வேண்டும்'' எனப் பச்சையாகப் புளுக, இந்து மதவெறியர்களின் சார்பாக ஆத்திரத்தோடு எச்சரிக்கையும் விடுகிறார், 'துக்ளக்' சோ.

### பா.ஜ.க. வளர்ச்சிக்குத் தரப்பட்ட நரபலிகள்

பாபர் மசூதி இடிப்பு காரணமாக, மற்ற மாநிலங்களில் மதவெறிக் கலவரங்களும் தொடர்குண்டு வெடிப்புகளும் நிகழவில்லையா? கடந்த மாதம் கூட டில்லியிலும் ஐதராபாத்திலும் குண்டுவெடிப்புகள் நடந்தனவே!

''பாரதீய ஜனதா கட்சி தீவிரவாதிகள்'' என்று ஒரு கூட்டம் தமிழ்நாட்டிலும், வேறு எங்கேயும் கிடையாதா? அப்படியென்றால் பாபரி மசூதியை இடித்ததும், அதைத் தொடர்ந்து நாடு முழுவதும் மதவெறியைத் தூண்டி இரண்டாயிரம் இசுலாமியரைக் கொன்றதும், ஜிகாத் கமிட்டித் தலைவர் பழநி பாபாவைக் கொன்றதுமான செயல்களைச் செய்தவர்கள் யார்?

பாரதீய ஜனதா காலடி வைத்த பிற மாநிலங்களில் எல்லாம் இந்த மாதிரி நடந்ததில்லையா? அதற்கு மாறாக, அக்கட்சி ஒரு சக்தியாக வளர்ந்து ஆட்சியைப் பிடிப்பதற்கான வழியாக மதவெறி நரபலிகள் தருவதைத்தானே வழக்கமாகக் கொண்டுள்ளது!

பாகல்பூர் மதவெறி படுகொலைக்குப் பிறகுதான் பீகாரில் காலூன்றியது. மொரதாபாத், மீரட், லக்னோ, கான்பூர் மதக் கலவரங்களுக்குப் பிறகு உ.பி.யில் காலூன்றிய பாரதீய ஜனதா, அயோத்தி செங்கற் பூசைகள் - இரத யாத்திரைகள் மூலம் மதவெறிப் படுகொலைகள் புரிந்து தான் ஆட்சியைப் பிடித்தது. அகமதாபாத், பரோடா, சூரத் மதவெறிக் கலவரங்களுக்குப் பிறகுதான் குஜராத்திலும், ஜெய்ப்பூர் மதவெறிப் படுகொலைகளுக்குப் பிறகு இராஜஸ்தானிலும், பம்பாய் மற்றும் பிவாண்டியில் மதவெறிக் கலவரங்களுக்குப் பின் மராட்டியத்திலும், இந்தூர், போபால் மதவெறிப் படுகொலைகளுக்குப்பின் மத்தியப் பிரதேசத்திலும் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியைப் பிடித்தது.

பெங்களூரில் உருது ஒளிபரப்பை எதிர்த்தும், ஹூப்ளியில் இசுலாமியர் தொழுகை நடத்தும் இடத்தில் தேசியக் கொடியேற்றுவதாகவும், ஐதராபாத்தில் விநாயகர் சிலை ஊர்வலம் நடத்தியும் மதவெறிக் கலவரங்களைத் தூண்டி, முறையே கர்நாடகாவிலும், ஆந்திராவிலும் பாரதீய ஜனதாக் கட்சி காலூன்றியது. தமிழ்நாட்டிலேயே 1983 மண்டைகாடு கிறித்தவருக்கு எதிரான மதவெறிக் கலவரம், நெல்லை மீனாட்சிபுரம் மதமாற்றத்தைத் தொடர்ந்து சிவகிரி - புளியங்குடி மதவெறிப் படுகொலைகள் ஆகியவற்றுக்குப் பிறகுதான் இந்து முன்னணி, பா.ஜ.க. தமிழ்

படிப்பகம்

www.padippakam.com

நாடு சட்டமன்றத்தில் காலடி எடுத்து வைத்தன.

பலருடைய உயிரைக் குடித்த கோவை தொடர்குண்டு வெடிப்புகளால் தமிழக மக்கள் வேதனையும் பீதியும் அடைந்திருக்கும் அதே சமயம், அந்தக் கோரத்தைத் தனது குறுகிய மதவெறி நலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் பார்ப்பன - பனியா பாசிச சக்திகள் பிரச்சாரம் செய்தனர். நாட்டில் எங்கேயுமே இந்து மதவெறி தீவிரவாதிகள், இசுலாமிய சிறுபான்மையினரையும், உழைக்கும் மக்கள் உட்பட சாதாரண ''இந்துக்களை''யும் படுகொலைகள் செய்வதும், சிறுபான்மை மதத்துக்கு எதிராக இந்துமதவெறியையும், கலவரங்களையும் தூண்டுவதும் கிடையாது என்பதாக நாடகமாடுகின்றனர்.

### இந்துத்துவ பாசிஸ்டுகளின் சித்தாந்தமும் செயல்பாடும்

''இந்த நாட்டுக்கு விசுவாசமாக இல்லாத இசுலாமியத் தீவிரவாதிகள், பாகிஸ்தான் உளவுப் படையோடு சேர்ந்து நாசவேலைகள் செய்யும் நோக்கத்தோடு குண்டு வெடிப்பு சதிச் செயல்களில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கும் பிற பிரிவினைவாத, பயங்கரவாத, தீவிரவாத அமைப்புகளுக்கும் இரகசியக் கூட்டு இருக்கிறது. இவர்கள் அனைவரையும் அடக்கி ஒடுக்குவதுதான் தேசபக்தி. இந்தச் சக்திகளுக்கு எதிராகச் செயல்படும் இந்துத்துவ சக்திகளை மதவெறியர்களாகக் கருதவோ எதிர்க்கவோ கூடாது'' - இதுதான் அவர்களின் வாதம்.



கோவை கலவரத்தின் பொழுது குண்டடிபட்டு, சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த தனது சகோதரனைப் பார்க்க வந்த ஆரிப் என்ற அப்பாவி இளைஞன், இந்துமத வெறியர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டு, மருத்துவமனைக்கு அருகிலேயே உயிரோடு கொளுத்தப்பட்டார்.

இசுலாமியத் தீவிரவாதத்தைப் போலவே, இந்துத்துவ பாசிச தீவிரவாதமும் உள்ளது; இவை இரண்டுமே நாட்டுக்கும் மக்களுக்கும் எதிரானவை; ஆபத்தானவை. இந்துத்துவ பாசிச தீவிரவாதத்தின் எதிர்விளைவாய்த் தோன்றியதுதான் இசுலாமிய தீவிரவாதம் என்பதை மறுக்க முடியாது; ஆனால் அதற்காக இந்த நாட்டுக்கும் மக்களுக்கும், ஏன் இசுலாமிய சமூகத்துக்குமே கூட இசுலாமிய தீவிரவாதம் கொண்டுவரும் பாதிப்புகளைக் குறைத்து மதிப்பிட முடியாது. இது ஒருபுறம் இருந்தாலும், இந்துத்துவ பாசிசத்தினால் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படும் தீங்கு மிகக் கொடூரமானது; பல மடங்கு ஆபத்தானது.

இந்துத்துவம், அதன் அரசியல் உள்ளடக்கம் மற்றும் அதன் செயல்பாடுகள் என்னென்ன? ''மெக்கா - மெதினாவைக் குருபீடங்களாகக் கொண்ட இசுலாமியரும், வாடிகனையும், ஜெருசலேமையும் புனித இடங்களாகக் கொண்ட கிறித்தவர்களும், பயங்கரவாத - பிரிவினைவாத சக்திகளான சீக்கியரும் இந்த நாட்டுக்கு விசுவாசமானவர்கள் அல்ல. அவர்களை எல்லாம் இந்த நாட்டைவிட்டு விரட்ட வேண்டும் அல்லது ஒரே சட்டம், ஒரே பண்பாடு என்கிற முறையில் இந்துத்துவத்தை ஏற்குமாறு அடக்கி ஒடுக்கி வைக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட, பழங்குடி இன மக்களுக்கும், பெண்களுக்கும் சிறப்பு உரிமைகள் எதுவும் கூடாது. இனம், மொழி, பண்பாட்டு உரிமைக்கான எல்லா இயக்கங்களையும் அடக்கி ஒடுக்க வேண்டும்.''

— இப்படியாக பெரும்பான்மையாக உள்ள அனைத்துப் பிரிவினருக்கும் எதிராக பார்ப்பனீய சனாதன வருணாசிரம மதம், பண்பாடு, அரசியலை இந்த நாட்டின் பூர்வீகப் பாரம்பரியமாக உயிர்ப்பித்து, அதன் பாசிச ஆட்சியை நிறுவுவதுதான் இந்துத்துவ பாசிசவாதிகளின் இலட்சியம்.

இதற்காக ஆர்.எஸ்.எஸ். என்கிற தாய் அமைப்போடு விசுவ இந்து பரிசத், இந்து முன்னணி, பஜ்ரங் தள் உட்பட சந்நியாசிகள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், சாதுக்கள் அடங்கிய பல்வேறு மதவெறி அமைப்புகளைக் கட்டி இயக்குகின்றனர். இவற்றின் அரசியல் முன்னணிப் படைதான் பாரதீய ஜனதா கட்சி. இது போதாதென்று சிவசேனா, ஜெயாவின் அதிமுக போன்ற கூட்டாளிகளையும் வைத்திருக்கிறார்கள். சிவராத்திரி, விஜயதசமி, விநாயக சதுர்த்தி பூசைகள் நடத்துவதன் மூலம் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல மதவெறியூட்டப்படுகிறது.

அந்நியர்களால் அழிக்கப்பட்ட ஐயாயிரம் ஆண்டுகால இந்துப் பாரம்பரியத்தை மீட்பது; ஆங்கிலேயர்களாலும் இசுலாமியர்களாலும் துண்டாடப்பட்ட அகண்ட இந்தியாவை, இலங்கை, பாகிஸ்தான், ஆஃப்கான், நேபாளம், பூடான், வங்கதேசம் ஆகியவற்றை இணைத்து உருவாக்க வேண்டும் என்கிற பெயரில் தேசிய வெறியூட்டப்படுகிறது. இசுலாமியர்கள் நான்கு மனைவிகளை மணமுடித்து, ஏராளமான பிள்ளைகளைப் பெற்று மக்கள் தொகையில் பெரும்பான்மையாகி விடுவார்கள்; பசுமாட்டுக் கறி உண்பவர்கள், தலையை மழித்து தாடி வைத்துக் கொள்பவர்கள், துலுக்கனெல்லாம் பாகிஸ்தான் ஏஜெண்டுகள் என்று கீழ்த்தரமாகப் பிரச்சாரம் செய்து இந்துக்களிடம் வெறுப்பூட்டப்படுகிறது.

காசுமீருக்கு சிறப்பு உரிமை வழங்கும் அரசியல் சட்டப்பிரிவு 370 -ஐ அகற்றுவது, ஒரே சிவில் சட்டம் ஏற்படுத்துவது, சிறுபான்மையோருக்குள்ள உரிமைகளை ரத்து செய்வது ஆகிய அரசியல் முழக்கங்களை பா.ஜ.க. வைத்துள்ளது. நடைமுறையில் இந்துவெறியூட்டவும், கலவரங்களைத் தூண்டவும், ''நாடு முழுவதும் உள்ள 3000 மசூதிகள் - தர்க்காக்கள் இந்துக் கோவில்களை இடித்துக் கட்டப்பட்டவை; அரசுக்குச் சொந்தமான நிலங்கள், ஈத் தொழுகை மைதானங்களாக் கப்பட்டுள்ளன. ஆகவே அந்த அடிமை - அவமானச் சின்னங்களை இடித்துத் தரைமட்டமாக்கி, இந்துக்கள் கைப்பற்றி, கோவில்கள் கட்டவேண்டும் என்கிற திட்டத்தை ஆர்.எஸ்.எஸ். வைத்துள்ளது. கோவில் அறநிலையங்களுக்குச் சொந்தமான வணிக வளாகங்களில் உள்ள இசுலாமியர் கடைகளை அகற்றுவது; இசுலாமியர் கடைகளைப் புறக்கணிப்பது என்கிற பிரச்சாரத்தின் மூலம் வியாபாரிகளிடம் நிதியும் ஆதரவும் திரட்டப்படுகிறது. இந்துமத வழிபாடு என்கிற பெயரில் அறநிலைய மற்றும் அரசு பள்ளிகளில் ஆர்.எஸ்.எஸ்.க்கு ஆள் சேர்ப்பதும் போதனையும் பயிற்சியும் நடக்கிறது.

இத்தகைய இந்துத்துவ பாசிச இயக்கத்தின் ஒரு பகுதியாக முதற்கட்டமாக அயோத்தி, காசி மசூதிகளையும், மதுரா தர்காவையும் மீட்கும் போராட்டம் துவங்கியது. உத்திரப் பிரதேசம் அயோத்தியில் 400 ஆண்டுகளாக இருக்கும் பாபரி மசூதி, அங்கிருந்த இராமன் கோவிலை இடித்து விட்டுக் கட்டப்பட்டது; அது இராமன் பிறந்த இடம்; ஆகவே, மசூதியை இடித்து விட்டு இராமன் கோவில் கட்டுவோம் என்று கிளம்பினார்கள் இந்துத்துவ பாசிச பரிவாரங்கள்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு பாபரி மசூதிக்குள் திருட்டுத்தனமாக இராமன் சிலையை வைத்து உரிமை கொண்டாடி, பார்ப்பன அதிகாரிகள், நீதிபதிகள் உடந்தையோடு மசூதியே பூட்டப்பட்டது. 35 ஆண்டுகளுக்குப் பிறகு அங்கே இந்துக்கள் வழிபாடு நடத்த பாசிச இராஜீவ் திறந்து விட்டார். பிறகு இராமன் கோவில் கட்டுவதற்கான செங்கற்பூசைகள், இரத யாத்திரைகள், மசூதியை இடிக்கவும், மதவெறிப் படுகொலைகள் செய்யவும் முன்னாள் இராணுவத்தினரை வைத்துப் பயிற்சியும், ஏராளமாக நிதியும் ஆயுதங்களும் திரட்டப்பட்டன. காங்கிரசின் பார்ப்பன நரசிம்ம ராவின் ஆட்சியின் முழு ஆதரவோடு இந்துவெறியர்கள் திரண்டு மசூதியை இடித்ததோடு, நாடு முழுவதும் கலவரங்கள் நடத்தி இரண்டாயிரம் இசுலாமியரைக் கொன்றனர். சூரத் நகரில் இசுலாமிய ஆண்களைக் கொன்று சாக்கடையில் வீசியதோடு இசுலாமியப் பெண்களைக் கற்பழித்து, நிர்வாணமாக்கி தெருவில் அடித்து விரட்டி அதை வீடியோ படமும் பிடித்துக் குரூரமாக மகிழ்ந்தார்கள் இந்து வெறியர்கள்.

இதன் உச்சகட்டமாக, நீங்காத ஆழமான மதப் பகைமையை ஏற்படுத்தும் வகையில் 1992 - 93 இல் பம்பாய் மதக் கலவரமும் தொடர்குண்டு வெடிப்புகளும் நிகழ்ந்தன. மராட்டியத்தில் உள்ள இந்துத்துவ ஆட்சியினால் முடக்கி வைக்க முயன்ற ஸ்ரீ கிருஷ்ணா விசாரணைக் கமிசன் அறிக்கை வெளிவந்தால் பம்பாய் கலவரத்தின் பயங்கரம் வெளியாகும். அப்போது நடந்த பம்பாய் கலவரங்கள், தொடர் குண்டுவெடிப்புகளுக்கும் கோவையில் இப்போது நடக்கும் கோரங்க

www.padippakam.com

ளும் வியப்பூட்டும் வகையில் ஒத்திருக்கின்றன. ஆனால் அளவில் மட்டுமே கோவை சற்றுப் பின்தங்கி உள்ளது. பாபரி மசூதி இடிப்புக்குப் பின் சில ஆண்டுகள் தாமதமாக கலவரங்களும் குண்டு வெடிப்புகளும் நடந்துள்ளன.

### தமிழகத்தில் இந்து வெறியர்கள் வலுவடைந்த வரலாறு

பெரியாரின் பார்ப்பனீய சனாதன எதிர்ப்பு சுயமரியாதை இயக்கத்தின் விளைவாக, ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறி அமைப்பு நீண்ட காலத்துக்கு சக்தி வாய்ந்த இயக்கமாகத் தமிழ்நாட்டில் வளர முடியாமல் இருந்தது. திராவிட இயக்கத்தின் பெயரால் ஆட்சிக்கு வந்த பாசிச எம்.ஜி.ஆரின் ஆதரவில், தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெறும் நம்பிக்கை அதற்குத் துளிர் விட்டது. ஆர்.எஸ்.எஸ்., இந்துவெறி பிடித்த இராம. கோபாலன் தலைமையில் இந்து முன்னணி என்ற அமைப்பை 1980-இல் உருவாக்கியது. இவரது இஸ்லாமிய எதிர்ப்பு மதவெறி பிரச்சாரத்தால் வளர்ந்த இந்து முன்னணி, மண்டைக்காடு மீனவ கிறித்துவ எதிர்ப்பு மற்றும் சிவகிரி - புளியங்குடி ''தலித்'' - இசுலாமிய எதிர்ப்புக் கலவரங்களால் துணிச்சலடைந்தது.



கோவை அரசு மருத்துவ மனையில் வெடித்த குண்டால் இறந்து போன செவிலியர்

தமிழ்நாடு முழுவதும் இராம. கோபாலனும், கோவையில் திருக்கோயிலூர் சுந்தரம், முகாம்பிகை மணி, கூடங்குளம் செல்வராஜ், அர்ஜுன் சம்பத் ஆகியோர் இசுலாத்தையும் முகமது நபியையும் கேவலமாக ஏசி இந்து வெறியூட்டும் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இதனால் ஆத்திரமுற்ற கோவை பாட்சா என்பவர் தலைமையில் திருக்கோயிலூர் சுந்தரமும், இராம. கோபாலனும் வெட்டப்பட்டு, பிழைத்துக் கொண்டனர். அதன் பிறகு இசுலாமிய வெறுப்பும் இந்துவெறியும் தூண்டுவதற்கு என்றே கோவையில் இந்து முன்னணி மாநாடு, பூசை, பொதுக்கூட்டங்கள் பல நடந்தன. அதற்கு எதிரான இயக்கமாகவே அல் - உம்மா உருவானது. அதன் மேடைப் பேச்சாளர் அப்துல் லத்தீப் மற்றும் ஹக்கீம் ஆகிய இருவரையும் இந்துவெறியர்கள் வெட்டிக் கொன்றனர். வீர கணேசன், வீர சிவா ஆகிய இந்து முன்னணியரும், ஓர் இசுலாமிய போதகரும் கொல்லப்பட்டனர். அப்புறம் இந்த இரு பிரிவினரிடையே அடிக்கடி வெட்டுக் குத்து என்று மாறி மாறி நடந்தது.

இசுலாமியர் கடைகளைப் புறக்கணிக்கும்படி இந்து வியாபார முதலாளிகளின் துணையுடன் இந்து முன்னணி பிரச்சாரம் செய்தபோது, அதை எதிர்ப்பதற்காக அல் உம்மாவுக்கு இசுலாமிய வியாபார முதலாளிகளின் ஆதரவும் நிதியும் கிட்டியது. பார்ப்பன - பாசிச ஜெயாவின் ஆசிபெற்றவரும், ஆர்.எஸ்.எஸ் வெறியருமான (பின்னாளில் ஜெயா அரசின் உளவுத்துறை தலைவராக பதவி உயர்வு பெற்ற) ஜி. கணேசன் மற்றும் டி. இராதாகிருஷ்ண ராஜா ஆகியோர் முறையே கோவை போலீசு கமிசனராகவும் துணைக் கமிசனராகவும் இருந்தனர். ஜனநாயக இயக்கங்களின் அமைதியான ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகிய எதையும் ஆதரிக்காத இந்த அதிகாரிகள், அல்-உம்மாவினரை மட்டுமல்ல, சந்தேகப்படும் இசுலாமியர் அனைவரையும் அடக்கி ஒடுக்கிய அதே சமயம், ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணிக்கு பாதுகாப்புக் கொடுத்து, ஊக்கமூட்டி வளர்த்தனர். அத்வானி இரத யாத்திரை, செங்கற் பூசை, விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களுக்கு வசதி செய்து கொடுத்த இந்த அதிகாரிகள், அயோத்தி பாபரி மசூதி இடிப்பைக் கண்டிக்கும் அல்-உம்மா, ஜிகாத் கமிட்டியினரின் போராட்டங்களை இரும்புக் கரங்கொண்டு ஒடுக்கினர். மசூதி இடிப்பைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் மதக் கலவரம் மூண்ட ஒரே பகுதி கோவைதான்.

சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலகக் குண்டு வெடிப்பைச் சாக்கு வைத்து பாட்சா உட்பட 16 இசுலாமியரை ''தடா''வின் கீழ் சிறையிலடைத்து விட்டு, கோவையில் இசுலாமியர் மிகுதியாக வாழும் கோட்டைமேடு மீது போர் தொடுத்தது கமிசனர் ஜி. கணேசனின் போலீசு படை. ஆண்களும் பெண்களும் அடித்து நொறுக்கப்பட்டதோடு, வீடுகள் சூறையாடப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக கோட்டை மேடு உட்பட இசுலாமியர் வாழும் பகுதிகளில் ஐந்து சோதனைச் சாவடிகள், இரண்டு கிளை போலீசு நிலையங்களையும் நிறுவி, போவோர் வருவோரையெல்லாம் சோதனையிடுவதும், போலீசு அனுமதியுடனே உள்ளே, வெளியே விடுவதும், இளைஞர்களைத் திடீர் திடீரென்று இழுத்துக் கொண்டு போய் உதைப்பதுமாக இருந்தது. அதாவது கோவை இசுலாமியர்கள் தமது சொந்த நாட்டிலேயே அடிமைகளாகவும் அகதிகளாகவும் முகாமில் அடைக்கப்பட்ட கைதிகளாகவும், கிரிமினல்களாகவும் நடத்தப்பட்டனர்.

கோவை நகரில் உள்ள இசுலாமியரில் சில பெரு வியாபாரிகள் இருப்பினும், பெருமளவு நடைபாதைச் சிறு வியாபாரிகள் உள்ளனர். அவர்களிடம் இருந்து மாமூல் வசூல் வேட்டை ஆடுவது கோவைப் போலீசாரின் நிரந்தர உரிமையாக இருந்தது. அல்-உம்மா, தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகம் ஆகிய அமைப்புகள் உருவாகி வலுப்பெற்ற பிறகு மாமூல் தருவதைத் தடுத்துவிட்டன. இது இந்து சிறு வியாபாரிகளிடம் கூட வரவேற்பைப் பெற்றது. வியாபார ரீதியிலும், அமைப்பு ரீதியிலும் இசுலாமியர் உறுதிப்பட்டது பெரும் இந்து வியாபாரிகளிடம் பொறாமை, ஆத்திரத்தை வளர்த்தது. இதனால் அவர்களுக்கும், கோவை போலீசாருக்கும் இடையில் கூட்டு ஏற்பட்டது. போலீசின் தொந்தரவுகளுக்கு உள்ளாகும் இசுலாமியர்கள் அமைப்பு மூலமாக போலீசிடம் தலையிடுவது அவர்களுக்கு மேலும் எரிச்சலூட்டியது. பழிவாங்கும் நோக்கத்துக்காக போலீசு காத்திருந்தது.

### கடந்த ஆண்டு கலவரமும் இந்த ஆண்டு குண்டு வெடிப்புகளும்

கடந்த ஆண்டு நவம்பர் 28 அன்று மூன்று இசுலாமிய இளைஞர்கள் தகுந்த உரிமம் இல்லாமல் மோட்டார் சைக்கிளில் போய் போலீசிடம் சிக்கினர். அது வாய்த் தகராறாக முற்றி, அடிதடி ஏற்பட்டு ஒரு போலீசுக்காரரைக் கொன்று விட்டார்கள். ஒரு தகராறில் 1993 ஜனவரியில் மும்பைச் சந்தை ஒன்றில் இரண்டு தலைச் சுமை தொழிலாளர்கள் கொல்லப்பட்டபோது, அவ்விருவரும் இந்துக்கள் என்பதை சாக்கு வைத்து பம்பாய் கலவரத்தைத் துவங்கி ஆயிரத்துக்கு மேலான இசுலாமியரை சிவசேனா - பா.ஜ.க. ரௌடிகள் கொன்றனர். அதற்குப் போலீசு முழு ஒத்துழைப்புக் கொடுத்து, கலவரத்தில் தானும் பங்கேற்றது. சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஸ்ரீகிருஷ்ணா கமிசன் அறிக்கை இதை உறுதி செய்கிறது. அதே போன்று கோவையில் கொல்லப்பட்ட போலீசுக்காரர் ஒரு இந்து என்பதைக் காரணமாக வைத்து, தொடர்ந்து மூன்று நாட்கள் மதவெறிப் படுகொலைகளை நடத்தினர், போலீசு - பா.ஜ.க. ரௌடிகள்.

ஒரு போலீசு உயர் அதிகாரி தானே முன்னின்று தனது கைத்துப்பாக்கியினால் நேருக்கு நேர் அமைதியாக சாலை மறியலில் உட்கார்ந்திருந்த இசுலாமிய இளைஞர்களை சுட்டுக் கொல்வதில் வெறியாக அலைந்தான். இசுலாமிய அமைப்பின் நகரச் செயலாளர் அயூப்கான் முதல் 13 வயதுச் சிறுவன் அபு பக்கர் சித்திக் வரை பலரைச் சுட்டு வீழ்த்தினான். சீருடையில் இருந்த போலீசுக்காரர்கள் சுட்டும், சாதாரண உடையில் இருந்தவர்கள் வெட்டியும் மொத்தம் 19 பேரைக் கொன்றனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமுற்றனர். குண்டடியும் வெட்டும் பட்டு மருத்துவமனைக்கு வந்தவர்களை மறித்து வெட்டிக் கொன்றதோடு உயிரோடு தீயிட்டும் கொளுத்தினர். இந்த வெறிச் செயலில் காக்கியும், காவியும், கருப்பும் கலந்தன. ''ஜெய்காளி, ஓம்காளி'' என்று கூச்சலிட்டுக் கொண்டே இசுலாமியர் வீடுகளில் புகுந்து தாக்கிய

www.padippakam.com

ஐயப்ப சுவாமிகள், ''மாலை போட்டிருப்பதால் சும்மா விடுகிறோம்; இல்லையானால்...'' என்று இசுலாமியப் பெண்களைப் பார்த்து நாக்கூசும்படி ஏசினர்.

ஓர் இந்துப் போலீசுக்காரர் கொல்லப்பட்டது, இந்தக் கலவரத்துக்கு ஒரு துவக்கப் புள்ளியாகப் பயன்படுத்தப்பட்டதே தவிர அதுவே முழுக்காரணமல்ல. வேறு ஏதாவது காரணத்தை முன்வைத்துக் கலவரம் வெடிக்கும் கொதிநிலை ஏற்கனவே உருவாகி இருந்தது என்பதுதான் உண்மை. பாபரி மசூதி இடிக்கப்பட்ட டிசம்பர் ஆறாம் தேதி துக்க நாளாக அறிவித்து, ஒரு பெரும் பேரணியை நடத்த த.மு.மு.க. இசுலாமியரைத் திரட்டியது. இதை எதிர்த்து, ''இந்துக்களின் வெற்றி நாள், அடிமைச் சின்னம் அகற்றிய நாள். விரைவில் காசியிலும் மதுராவிலும் இது நடக்கும்'' என்று இந்து முன்னணி சுவரொட்டிகளை ஒட்டியது. ''டிசம்பர் 6 பாரதமாதா கற்பழிக்கப்பட்ட நாள் - இந்தியன்'' என்று ஒரு அனாமதேய சுவரொட்டி வந்த போது இந்து முன்னணி கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தது. ஆனால் ஏற்கனவே இசுலாமியர் மீது ஆத்திரமடைந்திருந்த போலீசு கலவரம் வெடிக்க வேண்டும் என்று விரும்பியதைப் போல நடவடிக்கை எதுவுமின்றி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. போலீசுக்காரர் கொலையைச் சாக்கு வைத்து கலவரத்தையும் தூண்டி நடத்தியது.



கோவை - கோட்டைமேடு பகுதியில் தேடுதல் வேட்டை என்ற பெயரில் அகப்படும் முஸ்லீம் இளைஞர்களை எல்லாம் அள்ளிச் செல்லும் போலீசு.

1993-ஆம் ஆண்டு மும்பையில் செய்ததைப் போலவே இசுலாமிய அமைப்புகள் இதற்கெல்லாம் பழிவாங்கும் இரகசிய நடவடிக்கைகளில் இறங்கின. நவம்பர் - டிசம்பர் கலவரங்களின் கோரத்தை ''வீடியோ'' படம் பிடித்து இசுலாமிய இளைஞர்களிடம் காட்டி இரகசியப் படை திரட்டின. மும்பையில் செய்ததைப் போல தொடர் குண்டு வெடிப்புகளைத் திட்டமிட்டு செய்தன. பா.ஜ.க தலைவர் அத்வானியின் தேர்தல் பிரச்சார நாளை இதற்காகத் தெரிந்தெடுத்து, முக்கியமான இடங்களில் குண்டுகள் வெடித்து 50-க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் இம்மாதிரிச் செய்வதற்கான தயாரிப்புடன் வெடி குண்டுகள் குவிக்கப்பட்டிருந்தன என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### இசுலாமிய வாலிபர்களின் பழிவாங்கும் உணர்வும் இந்து வெறியர்களின் நயவஞ்சகமும்

மதவெறிப் படுகொலைகள், மதவெறிக் கலவரங்களால் பீதியும் ஆத்திரமும் அடைந்துள்ள இசுலாமிய வாலிபர்களை, ''பழிவாங்குவதும் திருப்பித் தாக்குவதும்தான் பாதுகாப்பைத் தரும்; கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், உயிருக்கு உயிர்'' என்கிற மதவெறியூட்டி தீவிரவாதப் படையாக திரட்டுவது எளிது.

அண்டை மாநிலமான கேரளாவில் உள்ள அல்-உம்மா, சுன்னி புலிகள், ஜிகாத் கமிட்டி, இசுலாமியத் தற்காப்புப் படை; இசுலாமிக் சேவா சங்கம் ஆகிய அமைப்புகளின் கூட்டும், வெளிநாடுகளில் குடியேறிய இந்திய இசுலாமியரின் நிதி உதவியும் இதற்கு கிடைத்திருக்கின்றன. பாபரி மசூதி இடிப்பு, மதவெறிப் படுகொலைகள், இந்துத்துவ பரிவாரங்களின் முன்னேற்றம் ஆகியவற்றை ஏற்கனவே உள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைமை தடுக்கத் தவறியதும், மிதவாத பிழைப்பு வாதிகளாக சீரழிந்து பிளவுபட்டு நிற்பதும் இளைஞர்களிடையே தீவிரவாதிகள் செல்வாக்கு பெறக் காரணமாக உள்ளன. இசுலாமிய நாட்டு உளவு நிறுவனங்களும், மத அடிப்படைவாத அமைப்புகளும் இதைப் பயன்படுத்திக் கொள்வதையும் மறுக்க முடியாது.

இது, இந்தியா இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் நாடு என்பதால் மட்டுமல்ல; லிபியா, பாகிஸ்தான், ஆஃப்கானிஸ்தான், ஈரான் ஆகியவை எகிப்து, அல்ஜீரியா, லெபனான் போன்ற இசுலாமிய நாடுகளிலேயே மத அடிப்படைவாத - தீவிரவாத அமைப்புகளை நிறுவி உள்நாட்டுப் போர்களையும், நாசவேலைகள், படுகொலைகளையும் நடத்துவது உலகறிந்த உண்மை. இசுலாமியப் புனிதத்தையும், தூய்மையையும் காப்பதாகக் கூறி இசுலாமியருக்குச் சொந்தமான சினிமா கொட்டகைகள், ''ஓட்டல்''கள், வீடுகளையும் தாக்குகின்றனர். ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாகக் கூறி அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிலும் சில இலக்குகளைத் தாக்குகின்றனர்.

ஆர்.எஸ்.எஸ். இந்து வெறி பரிவாரங்களும், வெளிநாடுகளில் குடியேறியுள்ள பெரும் இந்து முதலாளிகள், வியாபாரிகளிடமிருந்து ஏராளமான நிதி உதவியும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய உளவு நிறுவனங்களிடமிருந்து ஆதரவும் பெறுகின்றன. ஆனால் இந்த நாட்டின் பெரும்பான்மையினர் இந்துக்களாக இருப்பதையும், அரசு எந்திரத்தையுமே பயன்படுத்திக் கொள்ள முடிவதால் இசுலாமியத் தீவிரவாதிகளிடம் இருந்து மாறுபட்ட நடைமுறையைக் கொண்டிருக்கின்றனர்.

இந்து - இந்தி - இந்தியா என்கிற பார்ப்பன - பனியா தேசிய இனவெறியுடன் மத வெறியை இரண்டறக் கலந்துள்ளனர். நெற்றியில் குங்குமம் - மஞ்சள் - சந்தனம் பூசிக் கொள்வது, அரசு அலுவலகங்களிலேயே இந்துக் கடவுள்களை வைத்து, இந்துப் பண்டிகைகளும், பூசைகளும், யாகங்களும் நடத்துவது, அரசு விழாக்களையே அப்படி நடத்துவது, இராணுவமே அந்த அடிப்படையில் கட்டப்பட்டிருப்பது, பொது இடங்களில் சிலைகளை வைத்துப் பூசைகள், வழிபாடுகள், ஊர்வலங்கள் நடத்துவது முதல் விநாயகர் சிலைகள் பால் குடிப்பதாகப் புரளி கிளப்புவது வரை எல்லாவகையிலும் இந்துத்துவப் பிரச்சாரம் நடக்கிறது; இவற்றை எதிர்ப்பதை மதச்சார்பை எதிர்ப்பாக அல்ல தேசிய எதிர்ப்பாக அவதூறு செய்கின்றனர். போலீசு, இராணுவம், துணை இராணுவம், நீதித்துறை, அரசு அதிகாரிகளில் 99 சதவீதத்துக்கும் மேலானவர்கள் இந்துக்கள் என்று அடையாளப்படுத்தி, மதவெறிப் படுகொலை, கலவரங்களில் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இதற்கு எதிராக, ''இந்துத்துவ பாசிச பரிவாரங்கள் இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் அனைவரின் பிரதிநிதிகள் அல்ல; ஒரு சிறு பிரிவினரான பார்ப்பன - பனியா மற்றும் பிற நிலப்பிரபுத்துவ மேல் சாதிகளின் பிரதிநிதிகள்தாம்; இங்கே இந்து மதவெறி பாசிசத்தை நிறுவ எத்தனிக்கும் மக்கள் விரோத, நாட்டு விரோத சக்திகள் தாம்'' என்பதை அம்பலப்படுத்தி போராடி வருகின்றன புரட்சிகர ஜனநாயக சக்திகள். இந்த சக்திகளுடன் தங்களை இணைத்துக் கொள்வதன் மூலம் தான் இசுலாமிய மக்கள் பாதுகாப்பாக வாழ முடியுமே தவிர, தீவிரவாத - மத அடிப்படைவாதிகளிடம் தஞ்சமடையக் கூடாது.

இசுலாமிய அடிப்படைவாத - தீவிரவாத இயக்கங்களின் பழிவாங்கும் நடவடிக்கைகள் இசுலாமிய - இந்து சமூகங்களுக்கிடையே தீராப்பகையையும், ஒருவரை ஒருவர் கொன்றொழிப்பதையும், சொந்த நாட்டிலேயே இசுலாமியர்கள் அடிமைகளாய் - அகதிகளாய் நடத்தப்படுவதற்குமே வழிவகுக்கும். உண்மையில் இந்து மதவெறியர்கள் என்ன சாதிக்க விரும்புகிறார்களோ, அதை விரைவாகவும் நிச்சயமாகவும் சாதித்துக் கொடுப்பதுதான் இசுலாமிய தீவிரவாதிகளுடைய செயல்களின் விளைவாகும்.

### இந்து வெறியர்களை வீழ்த்தும் சக்திகளும் வழிகளும்

இந்துத்துவ பாசிச பரிவாரங்களை முறியடிக்கும் சக்தியும் வழிவகையும் இசுலாமிய தீவிரவாதிகளிடமோ, அவற்றின் தேர்தல் அரசியல் எதிரிகளான காங்கிரசு மற்றும் ஐக்கிய முன்னணி - இடதுசாரிக் கூட்டணி போன்ற கட்சிகளிடமுமோ கிடையாது; இதை இந்துமத வெறியர்களும் நன்கு அறிவார்கள். இந்த நாட்டு உழைக்கும் மக்களைத் திரட்டுவதை அடிப்படையாகக் கொண்ட நக்சல்பாரிப் புரட்சியாளர்களும், பல்வேறு இன, மொழி, பண்பாட்டு உரிமைகளுக்காகப் போராடும் ஜனநாயகப் போராளிகளுமே இந்துத்துவ பாசிச பரிவாரங்களை எதிர்த்து முறியடிக்கக் கூடிய சக்திகள் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். எனவேதான் பயங்கர வாதம், தீவிர வாதம், பிரிவினை வாதத்தால் தேசத்துக்கும் அதன் ஒருமைப்பாட்டுக்கும் பேராபத்து விளைந்து வருவதாகப் பெருங் கூச்சல் போடுகிறார்கள்.

• மாதவன்

www.padippakam.com

# பாலியல் வன்முறை "தேசிய விளையாட்டா?"

கடந்த டிசம்பர், ஜனவரியில் ஒரிசா மாநிலத்தில் கேந்த்ரபாரா நகரிலும் அதை ஒட்டிய கிராமங்களிலும் உள்ள பள்ளி - கல்லூரி மாணவிகள், படித்த இளம் பெண்கள் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டனர்.

• கேந்த்ரபாரா நகருக்கு அருகிலுள்ள கரந்தியா கிராமத்திலிருந்து அன்னபூர்ணா மொகந்தி என்ற 23 வயது பெண் டிசம்பர் 20 வாக்கில் வாழ்த்து அட்டைகள் வாங்க நகருக்கு வந்தார். அங்கு கல்லூரியில் படித்த போது, கல்லூரி தேர்தலில் உதவிய சக மாணவர்களான ஹரி, நிரகர் என்பவர்கள் அன்னபூர்ணாவைச் சந்தித்து, நைச்சியமாகப் பேசி, ஏமாற்றி கடத்திச் சென்று, சுமார் 10 பேர் கும்பலாக பாலியல் பலாத்காரம் செய்தனர். மேலும் அன்னபூர்ணாவை நிர்வாணமாகப் புகைப்படமும் வீடியோவும் எடுத்து மிரட்டியுள்ளனர். சம்பவம் நடந்த 5-ம் நாள் அன்னபூர்ணா தற்கொலை செய்து கொண்டார். அவரது சகோதரர் காவல் நிலையத்தில் முறையிட்டார். முதலில் இது வெறும் தற்கொலை என முடிவு செய்த போலீசு, மக்கள் போராட்டத்திற்குப் பின் 2-வது முறை சவப் பரிசோதனை செய்து, பாலியல் வன்முறை எனப் பதிவு செய்தது. இதுவரை குற்றவாளிகளில் இருவர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

• அன்னபூர்ணா பிரச்சினை பத்திரிக்கைகளில் பரபரப்பு செய்தியான ஜனவரி மாதம், 20 வயது உயர்நிலைப் பள்ளி மாணவியான அகல்யா ராணி என்பவரும் தற்கொலை செய்து கொண்டார். இவரும் கேந்த்ரபாரா அருகிலுள்ள பாய்லோ கிராமத்தைச் சேர்ந்தவர். அகல்யா உடலை அவரது குடும்பத்தவர் அவசரமாக அடக்கம் செய்தனர். மக்களின் போராட்டம் காரணமாக வழக்கு பதிவாகி விசாரணையில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இக்குற்றவாளிக்கு மாநில அமைச்சர் பகவத் பிரசாத் மொகந்தி பாதுகாப்பு தந்ததால் 10 நாள் கழித்தே கைது செய்யப்பட்டான். மந்திரிக்கும் பாலியல் வன்முறைக்கும் தொடர்பு இருக்கலாம் என செய்திகள் கசிந்து வந்து எதிர்க் கட்சியினரும் போராட்டத்தில் குதித்தனர்.

• அன்னபூர்ணா, அகல்யா தவிர பல்லவி பிஸ்வால், பிரகியாசினிகர் (தற்கொலையின் போது கருவுற்றிருந்தார்), பௌலாமாலிக் (16 வயது), கல்லூரி மாணவி டிருஸ்னா ராணி சாகு என பாலியல் வன்முறைக்கு உயிரிந்த இளம் பெண்கள் பட்டியல் நீள்கிறது. எல்லோருமே கேந்த்ரபாரா நகர வாசிகள்.

• அமைச்சர் மட்டுமின்றி உயர் அதிகாரிகள் வரை பலரும் கும்பல் பாலியல் வன்முறைகளுக்கு உடந்தை எனத் தெரிகிறது. எனவே குற்றவாளிகளைப் பாதுகாப்பது என போலீசு செயல்படுகிறது.

அதனால்தான், இந்த கும்பல் பாலியல் வன்முறைகளை முதலில் அம்பலப்படுத்திய ஒரிய தினசரி 'பிரஜா பந்தா'வின் செய்தியாளர் லோக்மன் ஸ்டாலின் போலீசாரால் கைது செய்யப்பட்டார். வன்முறையைத் தூண்டும் விதமாக எழுதினார் என குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

★☆★

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 9-ம் தேதி கேரள முதல்வர் ஈ.கே. நாயனாரிடம் அன்வேஷ் என்ற பெண்கள் அமைப்பு புகார் ஒன்று தந்தது. அதன் அடிப்படையில் கோழிக்கோடு நகரிலுள்ள ஆர்.கே.எஸ். பழச்சாறு - பனிக் கூழ் கடை போலீசால் கண்காணிக்கப்பட்டு, அதன் உரிமையாளர் ஸ்ரீதேவி கைது செய்யப்பட்டார்.

படித்து, வேலை தேடும் இளம் பெண்களைக் குறி வைத்து வேலை தருவதாக ஈர்ப்பது; ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள், அரசியல் வாதிகளிடம் அப்பெண்களை அனுப்புவது; பேஜர், செல் போன் என நவீன சாதனங்களுடன் இப்படி விபச்சாரத்தை செய்து வந்தவள் ஸ்ரீதேவி. இணங்க மறுக்கும் பெண்களுக்கு பழச்சாறு - பனிக்கூழில் போதை மருந்து கலந்து கொடுத்து, நிர்வாணப் படமெடுத்து மிரட்டிப் பணிய வைத்துள்ளாள். வெளி மாநிலங்கள், நாடுகளுக்கு பெண்களை கடத்தி விற்பது வரை சமூக விரோதச் செயல்களைச் செய்து வந்துள்ளாள்.

ஐ.ஏ.எஸ் - ஐ.பி.எஸ். உயர் அதிகாரிகள், ஆளும் கட்சி - எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் என சகல தரப்பினரும் இந்த பாலியல் வன்முறைக் குற்றங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளதால் இப்போது இந்த வழக்கும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

★☆★

நாடு முழுவதும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் பெருகி வருகின்றன என்பதற்கு மேற்கண்டவை இரண்டு எடுத்துக் காட்டுகள்தாம். 1996-ம் ஆண்டு புள்ளி விவரப்படி கேரளத்தில் மட்டும் பெண்கள் மீதான வன்முறைக்காக 5000 வழக்குகள் பதிவானது. இதில் 1600 வழக்குகள் பாலியல் வன்முறை, கடத்தல், கும்பல் - தொடர் பாலியல் வன்முறை என பதிவானவைகள். 10 வயதிற்கும் கீழ்ப்பட்ட குழந்தைகள், 10 - 16 வயதிற்குட்பட்ட சிறுமிகள் ஆகியோர் மீதான பாலியல் வன்முறைகள் 250 சதவீதம் அதிகரித்துள்ளன.

இந்தியாவிலேயே அதிகம் கற்றவர்கள் உள்ள கேரளத்திலேயே இப்படி நடக்கிறது. இது பற்றி அம்மாநில பெண்கள் கமிஷன் தலைவர் சுனந்தகுமாரி கூறும் போது, "...பெண்கள் மீதான மனிதாபிமானமற்ற கொடுமைகளை மிக புத்திசாலித்தனமாக நடத்துவதற்குதான் கல்வியறிவு பயன்படுகிறது. பெண்கள், குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை, வரதட்சனைக் கொலைகள் என பலவும் பெருகி வருகின்றன" என்கிறார்.

இன்னும் கல்வியறிவே இல்லாத மக்கள் அதிக அளவு வாழும் பீகார், உ.பி., இராஜஸ்தான் என பல மாநிலங்களில் பெண்கள், குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைகள் மிக அதிகம். பல வழக்குகள் நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தினால் பதிவு செய்யப்படுவதேயில்லை என்பதுதான் உண்மை. போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்க மாநிலத்திலும், மதவெறி பாசிஸ்டுகள் ஆளும் டில்லியிலும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் நாளும் அதிகரித்த வண்ணமுள்ளன.

போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் கேரளாவின் ஈ.கே. நாயனார் கோழிக்கோடு சம்பவம் பற்றிக் கூறும் போது "பெண்கள் இருக்கின்ற வரை பாலியல் குற்றங்களும் இருக்கத்தான் செய்யும்" என ஆணாதிக்கத் திமிருடன் பேசினார். இதற்கு முன்பு "அமெரிக்காவில் கற்பழிப்பு என்பது ஒரு கப் காபி குடிப்பதைப் போல" என பாலியல் வன்முறையை நியாயப்படுத்தியவர்தான் இவர்.

நீதி மன்றமோ ஒருபடி மேலே போய் குற்றவாளியை குற்றமற்றவன் என விடுவிக்கிறது. பா.ஜ.க. ஆளும் இராஜஸ்தான் மாநில மாவட்ட நீதிபதி, பன்வாரி தேவி என்ற சமூக நல ஊழியரை கும்பலாக பாலியல் வன்முறை செய்தவர்களை குற்றமற்றவர்கள் என விடுதலை செய்தது, நாடு முழுதும் அதிர்ச்சியளித்த ஒரு தீர்ப்பு. இத்தீர்ப்பு மேல் சாதி ஆதிக்க வெறியையும் வெளிப்படுத்திய ஒன்று.

ஓட்டுப் பொறுக்கிகள் பாலியல் வன்முறையை ஒரு குற்றமாகப் பார்ப்பதில்லை. காவல் நிலையங்கள், பாலியல் வன்முறைக் கூடங்களாயுள்ளன. நீதிமன்றங்களோ பாலியல் வன்முறைக் குற்றவாளிகளை தண்டிப்பதில்லை.

தேர்தலின் போது எதிர் முகாமிலுள்ளவர்கள் ஓட்டுப் பொறுக்க இதையும் ஒரு பிரச்சினை எனக் கிளப்புவதைத் தவிர மற்ற நேரங்களில் மூடி மறைக்க ஒன்றுபடுகின்றனர் என்பதுதான் உண்மை. • ராசு

குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரி ஒரிஸ்ஸாவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்



www.padippakam.com



## பாரம்பரிய பாசுமதி அரிசியும் பறி போனது

இந்தியாவின் பாரம்பரியமிக்க மணமும் சுவையும் மிகுந்த உயர்தரமான பாசுமதி அரிசிக்கு அண்மையில் ஓர் அமெரிக்க நிறுவனம் காப்புரிமை பெற்றுள்ளது. பாசுமதி இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மட்டுமே விளையும் உயர்ரக அரிசியாகும். ஆண்டுக்கு ஏறத்தாழ 5 லட்சம் டன் பாசுமதி அரிசியை அரபு நாடுகளுக்கும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தியா ஏற்றுமதி செய்கிறது. இதன் மூலம் ஆண்டுக்கு 200 கோடி ரூபாய்க்கும் மேலாக வருவாய் கிட்டுகிறது. அமெரிக்கக் காப்புரிமையால் இந்தியா, பாகிஸ்தானின் பாசுமதி அரிசி உற்பத்தியும் ஏற்றுமதியும் கடுமையாகப் பாதிக்கப்படும்.

ஏனெனில், ஒரு நாடு ஏதாவது ஒரு பொருளுக்குக் காப்புரிமை பெற்று விட்டால், உலக வர்த்தக நிறுவனச் சட்டப்படி, அப்பொருளை ஏதாவது ஒரு வகையில் பயன்படுத்தும் எந்தவொரு நாடும் காப்புரிமை பெற்ற நாட்டுக்கு வரி கட்டவேண்டும். உலக வர்த்தக நிறுவனத்தில் உறுப்பினர் நாடுகளாக உள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் இனி பாசுமதி அரிசியை உற்பத்தி செய்தால், விற்பனை செய்தால் அமெரிக்காவுக்கு கப்பம் கட்ட வேண்டும். இதை மீறினால் உ.வ.நி. சட்டப்படி, இந்நாடுகள் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும்.




பாரீசு நகரத் தெருக்களில் வேலையற்ற இளைஞர்களின் போர்க் கோலம்

உலகின் பல்வேறு பாரம்பரியப் பொருட்களுக்கும் உரிமை கொண்டாடுவதன் மூலம் அமெரிக்கா, உலக நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இந்தியாவின் பாரம்பரிய மஞ்சளைக் கூட ஒரு அமெரிக்க நிறுவனம் சொந்தம் கொண்டாடியது. நீண்ட போராட்டத்திற்குப் பிறகு, 6 மாதங்களுக்கு முன்புதான் அதன் காப்புரிமைப் பிடியிலிருந்து மஞ்சள் விடுவிக்கப்பட்டது. இந்தியாவைப் போலவே உலகின் பல ஏழை நாடுகள் அறிவுசார் சொத்துரிமை தொடர்பான சட்டங்களை இயற்றுவதில் பின்தங்கியுள்ளன. இதை வல்லரசு நாடுகள் சாதகமாக்கிக் கொண்டு பாரம்பரியப் பொருட்களுக்கும் உரிமை கோருகின்றன.

பாசுமதி அரிசிக்கு காப்புரிமை பெற்றுள்ள ''ரைஸ்டெக்'' எனும் அமெரிக்க நிறுவனம், தாங்கள் கடந்த 20 ஆண்டுகளாக பாசுமதி அரிசியை உற்பத்தி செய்து விற்பதாகக் கூசாமல் புளுகுகிறது. பாசுமதி என்பது ஒரு அரிசி ரகத்தின் பெயர்தானே தவிர, அதுவே விற்பனைப் பெயர் அல்ல; எனவே எமது அரிசியின் காப்புரிமையை ரத்து செய்ய முடியாது என்று ''ரைஸ்டெக்'' நிறுவனத்தின் தலைவரான ராபின் ஆண்ட்ரூஸ் கொக்கரிக்கிறார்.

''ஏதாவது ஒரு கட்டிடத்தை உலகின் எங்கோ ஒரு மூலையில் கட்டி வைத்துக் கொண்டு இதுதான் தாஜ்மஹால் என்று அழைக்க முடியாது. உலகில் ஒரு தாஜ்மஹால்தான் உண்டு; அது இந்தியாவிற்கே சொந்தமானது. அதுபோல பாசுமதி என்ற பெயரில் உள்ள உயர்ரக அரிசி இந்தியா - பாகிஸ்தானுக்கே பாரம்பரியமானது'' என்ற நியாயவாதங்களுடன் இந்திய பாசுமதி அரிசி உற்பத்தியாளர்களும், இந்திய ஏற்றுமதியாளர்கள் சங்கக் கூட்டமைப்பும் அமெரிக்காவுக்கு எதிராகக் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன. அதைத் தொடர்ந்து, இப்போது இந்திய ஆட்சியாளர்கள் விழித்துக் கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறுகின்றனர்.

## பிரான்சை உலுக்கிய வேலையற்றோர் போராட்டம்

உலகின் நான்காவது பணக்கார நாடாகச் சித்தரிக்கப்படும் பிரான்சில், அண்மையில் வேலையில்லாதோர் நடத்திய போராட்டங்களைக் கண்டு, ஏகாதிபத்திய உலகமே அரண்டு போயுள்ளது. கடந்த ஜனவரி இரண்டாவது வாரத்தில் கோடிக்கால் பூதமாகக் கிளம்பிய வேலையற்றோர் பட்டாளம், பங்குச் சந்தை அலுவலகத்தையும் அரசு அலுவலகங்களையும் தாக்கினர். நாடெங்குமுள்ள 13 வேலைவாய்ப்பகங்களைக் கைப்பற்றிக் கொண்டு கோப்புகளைக் கொளுத்தி வீசியெறிந்தனர். தலைநகர் பாரீஸ் உள்ளிட்டு பெருநகரங்களில் வேலையற்றோர் நடத்திய ரயில் மறியல் போராட்டத்தால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது. ''கடந்த ஆண்டிலிருந்து வேலையின்றி இருப்போருக்கு ஆண்டு போனசாக 500 டாலர்கள் கொடு! நீண்டகால வேலையற்றோருக்கு கூடுதலாக நிவாரணத் தொகை கொடு!'' என்று முழங்கியபடியே நாடெங்கும் ஆர்ப்பாட்டங்களை அவர்கள் தொடர்ந்தனர்.

பிரான்சில் வேலையற்றோரின் எண்ணிக்கை 45 இலட்சமாக உள்ளது. கடந்த ஆண்டு நவம்பரிலேயே வேலையற்றோர், அரசு அலுவலகங்களைக் கைப்பற்றிக் கொண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். ஆனாலும் ஆளும் போலி சோசலிசக் கூட்டணி அரசு வேலையின்மையை ஒழிக்க உருப்படியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1997-ல் ஆட்சிக்கு வந்த போலி சோசலிசப் பிரதமர் ஜோஸ்பின், ஆண்டுக்கு 7,50,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப் போவதாக சவடால் அடித்தார். வாரத்திற்கு 39 மணி வேலை நேரத்தை 35 மணி நேரமாகக் குறைத்து வேலை வாய்ப்பைப் பெருக்கப் போவதாக முழங்கினார். விமானத்துறை, தொலைத் தொடர்புத் துறைகளைக் கூட தனியார்மயமாக்கியும், பட்ஜெட் பற்றாக்குறையை 3% ஆகக் குறைக்க நல்வாழ்வுத் திட்டங்களுக்கான மானியங்களை வெட்டியும் அவர் மேற்கொண்ட 'சீர்திருத்தங்களுக்குப் பிறகும் கூட நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2% மேல் உயரவில்லை. வேலையற்றோர் எண்ணிக்கையோ, மொத்த மக்கட் தொகையில் 12.4% ஆக உயர்ந்து ஆட்சியாளர்களை அச்சுறுத்துகிறது.

பிரான்சைப் போலவே அதன் அண்டையிலுள்ள ஏகாதிபத்திய நாடுகளான ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் வேலையின்மை தீவிரமாகி வருகிறது. பிரான்சைப் போலவே இந்நாடுகளிலும் சமூக கொந்தளிப்புகள் தொடரும் அபாயம் உள்ளதாக ஏகாதிபத்திய பொருளாதாரவாதிகளே பீதியுடன் எச்சரிக்கின்றனர். என்ன செய்வது? நாயு

படிப்பகம்

www.padippakam.com



டன் படுத்தால் உண்ணியுடன்தானே எழுந்திருக்க முடியும்!

## சிறு தொழில்கள் நசிவு; தமிழர் வாழ்வு பறிப்பு

தமிழகத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் அந்நிய முதலீடுகள் பல்லாயிரம் கோடிகளாகப் பெருகியுள்ளதென சாதனைப் பட்டியல் போடும் தி.மு.க. ஆட்சியில், பல்லாயிரக்கணக்கான சிறு தொழில் நிறுவனங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு மூடுவிழாவை எதிர்நோக்கியுள்ளன. சிலவகைப் பொருட்களை, தமிழ்நாட்டில் பதிவு பெற்று இயங்கும் சிறு தொழில் நிறுவனங்களிடமிருந்து மட்டுமே அரசுத் துறைகள் வாங்க வேண்டும் என்று இருந்த உத்திரவை தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்ததும் திரும்பப் பெற்றுவிட்டது. இதனால் 4 இலட்சம் சிறு தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பிற மாநில நிறுவனங்கள் குறிப்பிடும் விலையைவிட 15% அளவுக்குக் கூடுதலாக தமிழகச் சிறுதொழில் நிறுவனங்கள் விலை குறிப்பிட்டிருந்தாலும், சிறுதொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு ஒப்பந்த ஆணைகளை வழங்கும் சலுகையும் தற்போது ரத்து செய்யப்பட்டு விட்டது.

குறிப்பாக, தமிழக மின்சார வாரியத்தின் ஒப்பந்த ஆணைகளையே பெரும்பாலான சிறுதொழில் நிறுவனங்கள் நம்பியுள்ளன. கடந்த காலத்தில் 75% ஒப்பந்த ஆணைகள் தமிழக நிறுவனங்களுக்கும், 25% ஒப்பந்த ஆணைகள் பிற மாநில நிறுவனங்களுக்கும் கிடைத்து வந்தன. ஆனால் இப்போது நிலைமை முற்றாக மாறிவிட்டது. ஒப்பந்தப் பணிகளை குறைந்த செலவில் முடித்துத் தர முன்வந்தாலும், தமிழகச் சிறு தொழில் நிறுவனங்கள் புறக்கணிக்கப்பட்டு, வடமாநில நிறுவனங்களுக்கே பெரும்பாலான ஒப்பந்த ஆணைகள் தரப்படுகின்றன. இதனால் பல நூற்றுக்கணக்கான சிறு தொழில் நிறுவனங்கள் நலிவடைந்து முடங்கியுள்ளன.



1996-97-ஆம் ஆண்டில் சிறு தொழில்களுக்கு 250 கோடி ரூபாய் கடனுதவி அளிக்க, இந்திய அரசு வங்கி இலக்கு தீர்மானித்திருந்தது. ஆனால் இத்தொகையில் பெரும்பகுதி செலவிடப்படவில்லை. காரணம், ஆயிரக்கணக்கான சிறு தொழில் நிறுவனங்களின் உற்பத்தி முடங்கியிருப்பதால், அவை கடன் வாங்க முன்வரவில்லை. குறிப்பாக, சென்னை - கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள இந்திய அரசு வங்கி, 14 கோடி ரூபாய் கடனுதவி வழங்க முன்வந்த போதிலும், கடந்த ஆண்டில் அத்தொகையைப் பெற யாருமே முன்வரவில்லை.

சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனமான ''சிட்கோ'', தொழிற்கூடங்களை அமைக்கக் கட்டியுள்ள இடங்களை வாங்க, சிறு தொழில் முனைவோர் யாரும் முன்வராததால் அவற்றை வர்த்தகர்களுக்கும், பொது மக்களுக்கும் விற்க அண்மையில் அரசு அறிவிப்பு செய்துள்ளது. ஏற்கனவே திருப்பூர் - முதலிபாளையத்தில் பின்னலாடை தொழிற்பேட்டை இன்னும் திறக்கப்படாமலேயே கட்டிடங்கள் பாழடைந்து வருகின்றன. சென்னையிலுள்ள கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் வழக்கமான உற்பத்தி இல்லாததால், தேவைக்கு அதிகமாக உள்ள மின்சக்தி வேண்டாம் என்று பல சிறுதொழில் நிறுவனங்கள் உயர் அழுத்த மும்முனை மின் இணைப்பைத் துண்டிக்கக் கோரியுள்ளன.

அந்நியத் தொழில் நிறுவனங்கள் மூலம் சில ஆயிரம் பேருக்குத்தான் வேலை கிடைக்க வாய்ப்புள்ளது. ஆனால் சிறுதொழில் மற்றும் அதன் கிளையாக உள்ள குடிசைத் தொழில் மூலம் பல இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டுகிறது. சிறு தொழில் நிறுவனங்களை நலிவடையச் செய்வதன் மூலம் தமிழர்களின் வாழ்வைப் பறிக்கக் கிளம்பிவிட்டது. மு.க. அரசு.

## அசாம் மாநிலத்தில் தொடரும் அரசு பயங்கரவாத அட்டூழியம்

வடக்கே காஷ்மீரைப் போலவே, வடகிழக்கே அசாமில் இந்திய இராணுவம் நடத்திவரும் அரசு பயங்கரவாத அட்டூழியங்களால் அம்மாநிலமே நிலைகுலைந்து போயுள்ளது. காஷ்மீரில் நீண்ட போராட்டத்திற்குப் பிறகு மனித உரிமை அமைப்புகளாவது பெயரளவுக்குச் செயல்பட வாய்ப்புள்ளது. ஆனால் அசாமில் மனித உரிமை அமைப்புகளையே தடை செய்து, முன்னணியாளர்களைச் சிறையிலடைத்துச் சித்திரவதை செய்யும் கொடூரம் கேள்விமுறையின்றித் தொடர்கிறது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 14-ம் நாளன்று, மாஸ் (MASS) எனப்படும் ''மனப் அதிகார் சங்கரம் சமிதி'' எனும் மனித உரிமை அமைப்பின் முன்னணியாளர்கள் போலிச் சுதந்திரத்தை அம்பலப்படுத்தியும் அசாமின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் பிரசுரம் விநியோகித்த 'குற்றத்திற்காக'க் கைது செய்யப்பட்டுச் சிறையிடப்பட்டுள்ளனர். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச மனித உரிமைக் கமிஷன் அடிப்படை உரிமையாக அங்கீகரித்துள்ளது. அசாம் கண பரிஷத் கட்சி தனது தேர்தல் அறிக்கையில் இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது. ஆனால் இன்று பதவியைப் பிடித்ததும், பிளவுவாத - பிரிவினைவாத சதி என்றும், இந்திய ஒன்றியத்துக்கு எதிரான யுத்தம் என்றும் ஆளும் அசாம் கணபரிஷத் கட்சியே குற்றம் சாட்டுகிறது. இராணுவத்தின் அடக்குமுறையை நியாயப்படுத்துகிறது.

அசாமில் தடை செய்யப்பட்டுள்ள உல்ஃபா இயக்கத்திடமிருந்து எப்போதோ கைப்பற்றப்பட்ட கடிதத்தை ''மாஸ்'' குழுவினர் எழுதியதுதான் என்று பொய்க் குற்றம் சாட்டி, மனித உரிமை அமைப்பின் முன்னணியாளர்கள் மீது கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டு சிறையிடப்பட்டுள்ளனர். அஷிஷ் குப்தா என்ற செய்தியாளரும், வடகிழக்கு மாநில மனித உரிமை அமைப்புக்களின் ஒருங்கிணைப்புக் குழு செயலாளரும் ''உல்ஃபா கடிதம்'' வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்டுள்ளார். சஞ்சய் கோஷ் என்ற 'சமூக சேவக'ரைக் கொன்றது உல்ஃபா இயக்கத்தினர் தான் என்று அசாம் அரசு குற்றம் சாட்டும் அதே சமயம், அஜித் பூயன் என்ற ''மாஸ்'' முன்னணியாளர்தான் சஞ்சய் கோஷைக் கொன்றார் என்று இராணுவம் அவரைக் கைது செய்துள்ளது.

''மாஸ்''-ன் பொதுச் செயலாளரான லசித் பர்தோலோய், ஐ.நா. மனித உரிமைக் கமிசன் கூட்டத்தில் அசாமில் தொடரும் அரசு பயங்கரவாத அடக்குமுறைகளை அம்பலப்படுத்தியுள்ளார். அவரது பயணக் கடவுச் சீட்டை சரிபார்க்காமல் வெளிநாடு செல்ல அனுமதித்ததாகக் குற்றம் சாட்டி காம்ரூப் மாவட்ட போலீசு துணைக் கமிசனரையே இராணுவம் கைது செய்துள்ளது. செனிராம் நாத் என்ற ''மாஸ்'' செயல் வீரர் கடந்த மே மாதம் 30-ந் தேதி இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, கொட்டடியிலேயே கொல்லப்பட்டார். ஆனாலும் மாநில அரசு எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை. இதேபோல பத்மாபோரா என்ற செயல்வீரர் மத்திய ரிசர்வ் போலீசுப் படையினரால் கைது செய்யப்பட்டு, கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டதில் அவரது கணுக்கால் எலும்புகள் நொறுங்கிப் போயின. அவர் நீதிமன்றத்தில் முறையிட்ட போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்

www.padippakam.com



படவில்லை. நாகோன் மாவட்ட "மாஸ்" தலைவரான பிரேந்திர குமாரின் வீடு இராணுவத்தால் பலமுறை சூறையாடப்பட்டுள்ளது. அவரது உறவினர்களை இராணுவம் சித்திரவதை செய்து, அவர் தங்கியுள்ள இடத்தைக் கேட்டு தொடர்ந்து வதைக்கிறது.

அசாமில் மனித உரிமை அமைப்பினருக்கே இந்த கதி என்றால், அப்பாவி மக்களின் நிலை பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அசாமில் தொடரும் பயங்கரவாத அடக்குமுறைகளை, பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மனித உரிமை அமைப்புகளின் உண்மை கண்டறியும் குழுவினர் அண்மையில் அம்பலப்படுத்தியுள்ளனர். இந்திய இராணுவத்தின் கோர முகம் மட்டுமல்ல; நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்திய இராணுவத்தை வெளியேற்றுவோம் என்று சவடால் அடித்து, பயங்கரவாத இராணுவ்த்தின் பங்காளிகளாக மாறிவிட்ட கணபரிஷத் ஆட்சியாளர்களின் பச்சோந்தித்தனத்தையும் இது அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது.

## மோசடி ஜனநாயக சாக்கடையில் மூழ்கி முத்தெடுக்கும் காங்கிரசு

இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் கேலிக் கூத்தானது. வடகிழக்கேயுள்ள நாகலாந்து மாநிலத்தில் ஒரு வாக்குகூடப் பெறாமல் மூன்றில் இரு பங்கு இடங்களில் காங்கிரசுக் கட்சியும் அதன் பினாமியாக நிறுத்தப்பட்ட சுயேட்சைகளும் எதிர்ப்பேயின்றி வெற்றி பெற்றுள்ளனர். அம்மாநிலத்தில் பிப்ரவரி 23-ந் தேதியன்று சட்டப் பேரவைத் தேர்தல் நடப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பாகவே, மொத்தமுள்ள 60 தொகுதிகளில் 43 இடங்களில் எதிர்த்துப் போட்டியிட யாருமில்லாததால், அத்தொகுதிகளில் நின்ற அனைத்து காங்கிரசு வேட்பாளர்களும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. காங்கிரசு முதல்வர் ஜாமீர் மீண்டும் முதல்வர் பதவி ஏற்க நாள் குறித்துக் கொண்டிருக்கிறார்.



மோசடித் தேர்தலைப் புறக்கணித்து ஆயுதப் போராட்டப் பாதையில் நாகா போராளிகள்

நாகலாந்தில் சுய நிர்ணய உரிமை கோரி ஆயுதமேந்திப் போராடி வரும் பல்வேறு போராளி அமைப்புகள் தேர்தலைப் புறக்கணிக்குமாறு அறைகூவல் விடுத்திருந்தன. எந்தக் கட்சியோ, தனிநபரோ தேர்தல் பிரச்சாரம் செய்யக் கூடாது என்றும் எச்சரிக்கை விடுத்தன. இதனால் பீதியடைந்த அனைத்து ஓட்டுக் கட்சிகளும் தேர்தலில் போட்டியிடாமல் பின்வாங்கிய நிலையில், கடைசி நேரத்தில் காங்கிரசுக் கயவாளிகள் மட்டும் வேட்பு மனு தாக்கல் செய்து, எதிர்த்துப் போட்டியிட யாரும் இல்லாததால் ஒரு வாக்கு கூடப் பெறாமல் வெற்றி பெற்றுள்ளனர்.

நாகலாந்தின் போராளி அமைப்பான நாகா சோசலிஸ்டு தேசிய கவுன்சில் (ஐசக் - முய்வா பிரிவு) மத்திய அரசுடன் கடந்த சில மாதங்களாக பேச்சுவார்த்தை நடத்தி வந்தது. இப்பேச்சுவார்த்தையின் காரணமாக இவ்வமைப்பினர் தற்காலிகமாக போரை நிறுத்தியிருந்தனர். பேச்சு வார்த்தை முடிவுறாத நிலையில் ஐ.மு. அரசு தேர்தலைத் திணித்தது. தேர்தலைத் தள்ளி வைக்குமாறு நாகா போராளிகள் கோரியதையும் அது ஏற்கவில்லை. எனவேதான் போராளிகள் தேர்தலைப் புறக்கணிக்குமாறு அறை கூவல் விடுத்தனர். அதைச் சாதகமாக்கிக் கொண்டு நயவஞ்சக மோசடி செய்து, காங்கிரசு கயவாளிகள் தேர்தலில் வெற்றி பெற்றதாக வெட்கமின்றி அறிவிக்கின்றனர். இதை ஏற்க மறுத்து, நாகலாந்தில் மறு தேர்தல் நடத்துமாறு எல்லா ஓட்டுக் கட்சிகளும் புலம்புகின்றன.

இதேபோல அசாமில் உல்ஃபா போராளிகள் தேர்தலைப் புறக்கணிக்குமாறு அறைகூவல் விடுத்துள்ளதோடு, தேர்தலில் போட்டியிடும் சில வேட்பாளர்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர். இதே நிலைமை மணிப்பூர், மேகாலயா, திரிபுரா மாநிலங்களிலும் நீடிக்கிறது. இம்மாநிலங்களில் பெருமளவு இராணுவமும், துணை இராணுவப் படைகளும் குவிக்கப்பட்டு கைது வேட்டைகள் தொடர்கின்றன. போலி கம்யூனிஸ்டுகளோ இதர ஓட்டுக் கட்சிகளுடன் சேர்ந்து, பயப்படாமல் வாக்களிக்க வருமாறு மக்களிடம் கெஞ்சி, கேடு கெட்ட ஜனநாயகத்தைக் காப்பாற்றக் கிளம்பியுள்ளனர்.

## "காட்"டாட்சியின் கோரம்: இரப்பர் விலை சரிவு கேரள மக்கள் பரிதவிப்பு

கேரளாவின் முக்கிய பணப்பயிராக விளங்கும் இரப்பரின் விலைகள் அண்மையில் பெரும் சரிவை எட்டியுள்ளதைத் தொடர்ந்து, இரப்பர் உற்பத்தி - பதனிடும் தொழிலைச் சார்ந்துள்ள 6 இலட்சம் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. ஈராண்டுகளுக்கு முன்பு கிலோ ரூ. 68 ஆக இருந்த இரப்பர் விலை கடந்த ஜனவரியில் கிலோ ரூ. 24 ஆகச் சரிந்துவிட்டது.

இரப்பர் என்பது கச்சாப் பொருள். தொழிற்துறை வளர்ந்தால் தான் இரப்பரின் தேவையும் உயரும். 1994-95-ம் ஆண்டில் டயர் உற்பத்தி 25% உயர்ந்ததால், இரப்பர் விலையும் உயர்ந்திருந்தது. ஆனால் கடந்த ஆண்டில் டயர் உற்பத்தி மந்த நிலையை அடைந்ததால், இரப்பரின் தேவை குறைந்து விலைகள் வீழ்ச்சியடைகின்றன.

டயர் உற்பத்தி மந்த நிலையை அடைந்ததற்கு "காட்" ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டு, உலக வர்த்தக நிறுவனத்தில் சேர்ந்ததே முக்கிய காரணமாகும். உலக வர்த்தக நிறுவனக் கட்டளைப்படி, 1996-97-ல் இந்தியா ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையில் பெரும் மாற்றங்களைச் செய்தது. அந்நியப் பொருட்களுக்கான இறக்குமதி தீர்வைகள் பெருமளவு குறைக்கப்பட்டு, டயர்கள் சுதந்திர இறக்குமதிப் பட்டியலில் சேர்க்கப்பட்டன. இதனால் அந்நிய டயர் இறக்குமதி அதிகரித்து, உள்நாட்டு டயர் உற்பத்தி மந்த நிலையை அடைந்தது. அதன் விளைவாக இரப்பர் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இரப்பருக்குப் பதிலாக "பாலியூரிதேன்" எனும் செயற்கை நுரைபொருள் தற்போது வாகனங்களிலும் படுக்கை விரிப்புகளிலும் பயன்படுத்தப் படுகிறது. இது இரப்பரைவிட எடை குறைவானது, விலை மலிவானது என்பதால் பல அந்நியக் கூட்டு நிறுவனங்களால் பெருமளவு இறக்குமதி செய்யப்படுகிறது. இதோடு, உள்நாட்டு இரப்பர் தொழிலை நசுக்க, வேண்டுமென்றே பன்னாட்டு நிறுவனங்கள் டயர் - இரப்பர் விலைகளைக் குறைக்கின்றன. உலக வர்த்தக நிறுவன விதிகளின்படி, சர்வதேச விலைக்கு ஏற்ப உள்நாட்டு இரப்பர் விலையையும் குறைக்க வேண்டிய நிர்பந்தத்தில் இந்தியா தள்ளப்பட்டுள்ளது.

கேரளாவில் ஏற்கனவே தேங்காய் மற்றும் மிளகு, ஏலக்காய் முதலான காரவகைப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளது போதாதென்று, தற்போது இரப்பர் விலையும் சரிந்துள்ள நிலையில் கோட்டயம், மலப்புரம் மாவட்ட விவசாயிகளும் இரப்பர் உற்பத்தியாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது திடீர் தேர்

www.padippakam.com



தல் வந்துவிட்டதால் அரசியல் ஆதாயம் தேடி ஓட்டுக்களைக் கைப்பற்ற, எல்லா ஓட்டுப் பொறுக்கிகளும் இரப்பர் விலை வீழ்ச்சியைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றன. இரப்பர் விலைச் சரிவுக்குக் காரணமான "காட்" ஒப்பந்தத்தை எதிர்த்து எந்த ஓட்டுக் கட்சியும் போராட முன் வராததிலிருந்தே அவற்றின் யோக்கியதை அம்பலப்பட்டுப் போயுள்ளது.

## கடத்தலில் ஈடுபட்ட கத்தோலிக்க தலைமைப்பீடம்

இரண்டாம் உலகப் போரின் போது, நாஜிகள் கொள்ளையடித்த தங்கம் சுவிஸ் வங்கியில் இரகசியமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது பற்றிய செய்திகள் வெளிவந்து நாறும் நிலையில், கத்தோலிக்க மதத் தலைமைப் பீடமான வாடிகனுக்கும் நாஜிகளுக்குமிடையே நிலவிய கள்ள உறவு இப்போது மெதுவாகக் கசியத் தொடங்கியுள்ளது.

இத்தாலியின் தலைநகரான ரோமிலுள்ள புனித பீட்டர் ஆலயத்துக்குச் செல்லும் சாலையிலுள்ளது கத்தோலிக்க மதகுருமார்களின் சபை. இரண்டாம் உலகப் போருக்கு முன்பும், போரின் போதும் கத்தோலிக்க மதத் தலைமைப் பீடமான வாடிகனுக்கும், இத்தாலிய பாசிச சர்வாதிகாரி முசோலினிக்கும் இருந்த இரகசிய உறவை நினைவுகூர்ந்து அண்மையில் இச்சபை கொண்டாடியுள்ளது. இதையடுத்து, பிரிட்டனிலுள்ள உலகப் போர் படுகொலைகளால் பாதிக்கப்பட்டோரின் கல்வி அறக்கட்டளையின் தலைவரான லார்டு ஜென்னர், வாடிகனுக்கும் பாசிஸ்டுகளுக்குமிடையிலான கள்ள உறவை அம்பலப்படுத்த வேண்டும் என்றும், நாஜிப் படையினரால் கொள்ளையிடப்பட்ட தங்கம் மற்றும் பிற பொருட்களைக் கடத்திச் செல்ல வாடிகன் துணையாக நின்றதை வெளிக் கொணர வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த டிசம்பரில் இலண்டனில் நடந்த போர்க் குற்றவியல் கருத்தரங்கில் பல நாடுகளைச் சேர்ந்த குழுக்கள், போர்க்கால ஆவணங்களைப் பகிரங்கமாக வெளியிட வேண்டுமென வலியுறுத்தின. அதைத் தொடர்ந்து சில அமெரிக்க, பிரிட்டிஷ் ஆவணங்கள் மெதுவாகக் கசியத் தொடங்கியுள்ளன.

1940-களில் நாஜிப் படைகள் குரேஷியாவைக் கைப்பற்றி அங்கே "உஸ்டாஷி" எனும் பொம்மையாட்சியை நிறுவின. யூதர்கள், செர்பியர்கள், நாடோடிகளிடமிருந்து கொள்ளையடித்த தங்கம் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை வாடிகனுக்கு இந்த ஆட்சியாளர்கள் கடத்தினர். அக்டோபர் 1945-ல் ஓர் உத்திரவு அறிக்கையின் மூலம் இக்கடத்தல் நடந்தது என்று அமெரிக்கக் கருவூல நிதி ஆராய்ச்சி அதிகாரிகள் உறுதியளிக்கின்றனர்.

மதச் சேவைக்காக உருவாக்கப்பட்ட வாடிகன் வங்கி, அன்றைய பாசிச ஜெர்மனியின் ரைஷ் வங்கியுடனும், இரகசிய கணக்கு முறை கொண்ட சுவிஸ் வங்கியுடனும் கள்ள உறவு வைத்திருந்ததாகப் போர்க் காலத்தில் நேச நாடுகள் குற்றம் சாட்டி எச்சரித்துள்ளன. வாடிகனின் மதகுருமார்கள் நாஜிகளால் சூறையாடப்பட்ட தங்கத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். கொள்ளையிடப்பட்ட தங்கம் ஸ்பெயினுக்கும் அர்ஜெண்டினாவுக்கும் வாடிகன் மூலமாக கடத்திச் செல்லப்பட்டது. குரேஷியாவிலிருந்த உஸ்டாஷி அரசு கத்தோலிக்க மத நிறுவனங்களுக்கு மிக நெருக்கமாக இருந்தது. அப்போது அந்த அரசின் அதிபராக இருந்த அன்டீ பாவெலிக், போரில் நாஜிகள் தோல்வியடைந்ததும் வாடிகன் உதவியுடன் அர்ஜெண்டினாவுக்குத் தப்பிச் சென்று தலைமறைவானார். இத்தகவல்களை அமெரிக்காவின் அன்றைய போர்தந்திர சேவை நிறுவனமும் (சி.ஐ.ஏ.வுக்கு முன்னோடியாக இருந்த அமைப்பு) தனது பழைய ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது.

உலகப் போரின் போது நாஜிகளின் வெற்றிக்காக கத்தோலிக்க மதகுருமார்கள் பிரார்த்தனை மட்டும் நடத்தவில்லை. பாசிஸ்டுகளின் கூட்டாளிகளாகி, கொள்ளையடித்த தங்கத்தைக் கடத்தவும் செய்த இப்'புனிதர்'களுக்கு உலக சமாதானம், கருணை பற்றி உபதேசிக்க என்ன அருகதை இருக்கிறது?

## தாழ்த்தப்பட்ட பெண்கள் மீது பாலியல் வன்முறை தாக்குதல்

### பிரன்மலைக் கள்ளர்களின் சாதி வெறியாட்டத்தை வேடிக்கை பார்க்கும் தமிழக போலீசு

தேனி மாவட்டம் - பாளையம் வட்டத்தில் உள்ள சுருளிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ரதி என்ற பெண், அக்கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புப் பகுதியில் கடை வைத்து நடத்தி வருகிறார். பிரன்மலைக் கள்ளர் சாதியைச் சேர்ந்த இவருக்குத் திருமணமாகி இரண்டு குழந்தைகளும் உண்டு. ரதிக்கும், தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பில் வசித்து வரும் சக்கிலிய சாதியைச் சேர்ந்த குமரேசன் என்ற இளைஞருக்கும் கள்ள உறவு இருந்து வந்துள்ளது. இந்த உறவு அம்பலமானவுடன், பிரன்மலைக் கள்ளர்கள் "இத்தவறுக்கு குமரேசன்தான் காரணம்" என ஒருதரப்பாக பழி சுமத்தி, "குமரேசனை ஊரை விட்டுத் துரத்துங்கடா" என தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் புகுந்து மிரட்டினர்.

குமரேசன் தானாகவே ஊரைவிட்டு வெளியேறிய பின்பு, 27.11.97 அன்று சாதிவெறி பிடித்த சின்னன் என்பவன் தலைமையில் பிரன்மலைக் கள்ளர் சாதியைச் சேர்ந்த 10 பேர் கும்பலாகத் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புக்குள் புகுந்து, "சக்கிலிய நாய் எதுவும் இனி ஊருக்குள் இருக்கக் கூடாது; மீறி இருந்தால் உங்க வீட்டுப் பொம்பளைகளைக் கற்பழிப்போம்" என மிரட்டிச் சென்றனர். இதனால் உயிருக்கும், மானத்துக்கும் அஞ்சி பல தாழ்த்தப்பட்ட ஆண்கள் ஊரைவிட்டு வெளியேறி விட்டனர்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சின்னன், அவன் தம்பி மாயாண்டி உட்பட 10 பேர் கொண்ட கும்பல் 28.11.97 இரவு 9 மணி போல் குடியிருப்புக்குள் புகுந்து, அங்கிருந்த முதியவர்களை மிருகத்தனமாகத் தாக்கியது. மேலும், வீரம்மாள் என்பவரின் வீட்டினுள் புகுந்து, அவரை நிர்வாணமாக்கியது. கூச்சலிட்டு ஊரைக் கூப்பிட முயன்ற அத்தாயின் 14 வயது மகனைக் கத்தியைக் காட்டி மிரட்டிவிட்டு, வீரம்மாளை நிர்வாணமாகப் படுக்க வைத்து, அவரது தலையை ஒருவன் பிடித்துக் கொள்ள, கைகளில் இரண்டு மிருகங்கள் ஏறி நின்று கொள்ள, கால்களை இருவர் பிடித்துக் கொள்ள, அவரை 5 மணி நேரமாக மாறி மாறி கற்பழித்தது அச்சாதிவெறி பிடித்த கும்பல். வீரம்மாள் தவிர, 10-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட பெண்களின் மீதும் பாலியல் வன்முறை ஏவிவிடப்பட்டது.

இத்தாக்குதல் பற்றி கவுண்டர் சாதியைச் சேர்ந்த ஒருவர் போலீசுக்குத் தகவல் கொடுத்தார். அதிகார மிடுக்கோடு குடியிருப்புக்குள் வந்த மாவட்ட துணைக் கண்காணிப்பாளர் கருப்பண்ணன் குற்றுயிராகக் கிடந்த வீரம்மாளிடம், "எத்தனை பேருடி உன்னிடம் வந்தான்?" எனக் கேட்டு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினார். இந்த அதிகாரத் திமிரை தாழ்த்தப்பட்டோர் எதிர்த்த பின்புதான், அவரின் திமிர்த்தனம் குறைந்தது. வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட போலீசு அதிகாரி எனப் பல உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுத்த பின்பும், "சின்னன் - மாயாண்டியைத் தேடி வருவதாக"ப் புளுகி வருகிறது போலீசு.

இதைச் சாதகமாக்கிக் கொண்டு பிரன்மலைக் கள்ளர்கள், வீரம்மாள் கற்பழிக்கப்பட்டதை நேரில் பார்த்துத் தகவல் சொன்னவரைக் கொலை செய்யப் போவதாக மிரட்டி வருகின்றனர். ரதியின் தாயோ, "இனி எவனாவது இதைப் பத்தி பேசினா, எந்தச் சக்கிலியப் பயலும் ஊருக்குள் இருக்க முடியாது" என எச்சரிக்கிறார். இதை மௌனமாகப் பார்த்துக் கொண்டு நிற்கும் போலீசு, "தப்பு உங்க (சக்கிலியர்) பக்கம் தான்" என மேல்சாதியினருக்கு ஆதரவாகத் தீர்ப்புச் சொல்கிறது.

தகவல்:
வி.வி.மு., கம்பம்.

படிப்பகம்

www.padippakam.com

# உலக ரௌடி ஈராக்கில் கலாட்டா

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் கடந்த சனவரி மாதம் 19-ஆம் தேதியன்று, ஒரே நாளில் 70 குழந்தைகள் இறந்து போயின. பட்டினியும், நோயும்தான் இக்குழந்தைகளின் மரணத்திற்குக் காரணம். சத்தான உணவின்மையாலும், வயிற்றுப் போக்காலும் ஐந்து வயதிற் குட்பட்ட ஐந்து இலட்சத்துக்கும் மேலான ஈராக்கிய குழந்தைகள் ஏற்கனவே இறந்து போய்விட்டன. அமெரிக்காவால் திணிக்கப் பட்ட பொருளாதாரத் தடையுத்தரவால், அந் நாட்டு மக்களுக்குச் சுத்தமான குடிநீர் கிடைப்பது கூட இன்று குதிரைக் கொம்பாகிப் போய் விட்டது. ஈராக்கின் நாணயமான தினார் மட்டும் மதிப்பிழந்து கிடக்கவில்லை; பிச்சையெடுப்பதும், விபச்சாரமும் இன்று அந்நாட்டில் பிழைப்புக்கான வழிகளாக மாறிவிட்டன.

இப்படிச் சின்னாபின்னமாகிக் கிடக்கும் ஈராக் மீது மீண்டுமொருமுறை இராணுவத் தாக்குதலை நடத்த, கடந்த நான்கு மாதங்களாக வெறிபிடித்த தெரு நாயைப் போல அலைந்து திரிகிறது, அமெரிக்க ஏகாதிபத்தியம். விமானம் தாங்கி போர்க் கப்பல்களைக் கொண்டு ஈராக்கை முற்றுகையிட்டு, வான்வழியாகவும், முந்தைய போரில் பயன்படுத்தியதைவிட அதிநவீன ஆயுதங்களாலும் தாக்கப் போவதாக அச்சுறுத்தி வருகிறது.

"மனித குலத்துக்கு பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடிய இரசாயன, உயிரியல் ஆயுதங்கள் ஈராக் வசம் இன்னும் உள்ளன; ஈராக்கில் இரகசியமாக வைக்கப்பட்டுள்ள இந்த ஆயுதங்களைக் கண்டுபிடித்து அழிப்பதற்கு சதாம் உசேன் அரசு ஐ.நா. சிறப்புக் கமிசனோடு ஒத்துழைக்க மறுக்கிறது. எனவே, சதாம் உசேனைப் பணிய வைக்க ஈராக் மீது தாக்குதல் நடத்தியாக வேண்டும்" எனக் கூறி வருகிறது அமெரிக்கா.

அமெரிக்காவின் இந்த இராணுவத் தாக்குதல் தயாரிப்புகளுக்கு இங்கிலாந்தும், இஸ்ரேலும்தான் முழுமையான ஆதரவு தெரிவித்துள்ளன. ஏகாதிபத்திய நாடுகளான ரசியா, பிரான்சு, ஜப்பானும், ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடான சீனாவும், மற்றும் துருக்கி, ஜோர்டான் போன்ற அரபு நாடுகளும் அமெரிக்காவின் இராணுவத் தாக்குதலுக்கு எவ்வித ஒத்துழைப்பும் தர மறுத்துவிட்டன. இந்தியா உள்ளிட்டு பல்வேறு ஏழை நாடுகளும் அமெரிக்காவின் இராணுவ முஸ்தீபுகளைக் கண்டித்துள்ளன. இப்படி தனிமைப்பட்டுப் போன பின்னும் கூட, ஈராக்கிற்கு எதிரான அமெரிக்காவின் உறுமலும், அச்சுறுத்தலும் குறையவில்லை.

★☆★

வளைகுடாப் போர் முடிந்த பின்பு, ஈராக் வசமிருந்த பெரும் அழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களைக் கண்டுபிடித்து அழிப்பதற்காக, ஐ.நா.வின் பெயரால் ஒரு சிறப்பு கமிசனை அமைத்தது அமெரிக்கா. கடந்த ஏழு ஆண்டுகளாக இக்கமிசனின் பரிசோதனைகளுக்குத் தடையின்றி ஒத்துழைப்புக் கொடுத்துவந்த சதாம் உசேன், சென்ற ஆண்டு அக்டோபர் மாத இறுதியில், "இச்சிறப்பு கமிசனில் அமெரிக்க அதிகாரிகள் பங்கு பெறக் கூடாது" எனக் கூறியதோடு, அமெரிக்காவைச் சேர்ந்த மூன்று பரிசோதனை அதிகாரிகள் ஈராக்கினுள் நுழையத் தடையும் விதித்தார். மேலும், ஈராக்கை வான்வழியாகக் கண்காணிப்பதற்காக ஐ.நா.வினால் பயன்படுத்தப்பட்ட அமெரிக்காவிற்குச் சொந்தமான "யு2" என்ற உளவு விமானம் ஈராக்கின் மேல் பறப்பதற்கும் தடை விதித்தார்.

அமெரிக்கப் பரிசோதனை அதிகாரிகளும், அமெரிக்க உளவு விமானமும் ஈராக் வசம் உயிரியல் / இரசாயன ஆயுதங்கள் இருக்கின்றனவா எனக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, உளவு - சதி வேலைகளில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சுமத்திய ஈராக் அரசு, "ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் ஆயுதப் பரிசோதனைகளை முடித்துக் கொண்டு, ஈராக் மீதான பொருளாதாரத் தடையுத்தரவுகளை ஐ.நா. நீக்க வேண்டும்" என்ற கோரிக்கையையும் முன் வைத்தது.

ஐ.நா. சிறப்பு கமிசன் மூன்று அமெரிக்கப் பரிசோதனை அதிகாரிகளுக்கு ஈராக் விதித்த தடையுத்தரவைச் சாக்காக வைத்து, பிற பரிசோதனை அதிகாரிகள் தொடர்ந்து ஈராக்கில் பரிசோதனை செய்வதைத் தடுத்து விட்டது. அதே சமயம் அக் கமிசன், "ஈராக் வசம் வீ. எக்ஸ். எனப்படும் ஒருவகை கொடிய விசவாயு இருப்பதாகவும், அவ்வாயு இரகசியமாகச் சேமித்து வைக்கப்பட்டுள்ள இடத்தைக் கண்டுபிடிப்பதற்கு சதாம் உசேன் தடையாக உள்ளார்" என்ற செய்தியை மேற்குலக பத்திரிகைகளின் வாயிலாகப் பரப்பியது. ஈராக்கிய கைதிகளிடத்தில் இவ்விஷவாயு பரிசோதிக்கப்படுவதுபோல இக்கமிசன் வெளியிட்ட ஒளிப்பேழையை ஐ.நா. மன்றமே ஏற்றுக் கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பாக்தாத்தில் வயிற்றுப் போக்கால் மரித்துப் போன குழந்தைகளின் சவ ஊர்வலம்: பொருளாதாரத் தடையுத்தரவு கொலைக் கருவியானது.



அமெரிக்காவோ ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலைக் கூட்டி, "ஈராக் மீதான பொருளாதாரத் தடையுத்தரவுகளை இன்னும் இறுக்க வேண்டும்" எனக் கூப்பாடு போட்டது. அமெரிக்கா கொண்டு வந்த இத்தீர்மானம் வாக்கெடுப்பதற்கு வந்த பொழுது, பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான ரசியா, பிரான்சு, சீனாவும், தற்காலிக உறுப்பு நாடுகளான எகிப்து, கென்யாவும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ள மறுத்து விட்டன. எனினும், அமெரிக்கா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, ஈராக்கைச் சேர்ந்த சில அதிகாரிகள் வெளி நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வதை ஐ.நா. மூலம் தடை செய்ததோடு, தன்னிச்சையாக ஈராக்கிற்கு எதிராக இராணுவத் தயாரிப்புகளையும் செய்யத் தொடங்கியது.

அமெரிக்காவின் இராணுவ முஸ்தீபுகளை எதிர்த்த ரசியா, ஈராக்குடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி சமரச திட்டமொன்றை முன் வைத்தது. இதன்படி ஈராக், எவ்வித மாற்றமும் இல்லாமல் ஐ.நா. சிறப்பு கமிசன் தனது நாட்டினுள் ஆயுதப் பரிசோதனைகளை நடத்த அனுமதித்தது. ஆயினும் அமெரிக்கா, ஈராக்கைச் சுற்றி நிறுத்தியிருந்த தனது கப்பல் - விமானப் படைகளை விலக்கிக் கொள்ளாததோடு, ஈராக்கின் கொஞ்சநெஞ்ச இறையாண்மையையும் பறித்துவிடும் தனது மேலாதிக்க நோக்கத்தை வெளிப்படையாக அறிவித்தது.

ஈராக் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்க வேண்டுமானால், "ஈராக்கைத் தொடர்ந்து கண்காணித்து வருவதற்கு அந்நாடு ஒத்துக் கொள்ள வேண்டும்; மேற்காசியாவில் அமெரிக்காவின் நலன்களுக்கு எதிராக ஈராக் செயல்படக் கூடாது; இஸ்ரேலை எதிர்ப்பதைக் கைவிட்டு, அந்நாட்டோடு அமைதியாக அனுசரித்துப் போக வேண்டும்; ஈராக்கின் எண்ணெய் வயல்களில் - சுத்திகரிப்புத் தொழில்களில் அமெரிக்க மூலதனம் நுழைவதற்கு எவ்விதத் தடையும் இருக்கக் கூடாது" என நிபந்தனைகளை விதித்துள்ளது அமெரிக்கா.

அமெரிக்கா விதித்துள்ள இந்த நிபந்தனைகள், வளைகுடாப் போர் முடிந்த பின்பு ஈராக் தொடர்பாக ஐ.நா. மன்றத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களுக்கு முற்றிலும் எதிரானவை. ஈராக் வசமுள்ள பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை அழித்த பின்பு, அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடையுத்தரவுகளை நீக்கிவிடலாம் என்பதுதான் ஐ.நா.வின் தீர்மானம். ஆனால்

www.padippakam.com



வயிற்றுப் போக்கு, சத்தான உணவின்மையால் எலும்பும் தோலுமாகி சாகக் கிடக்கும் ஏழு மாத கைக்குழந்தை சாஹ்ரா. பொருளாதாரத் தடையுத்தரவால் ஒவ்வொரு மாதமும் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்து விடுகின்றன.

இதற்கான சான்றிதழை வழங்க வேண்டிய ஐ.நா. சிறப்பு கமிசனோ கடந்த ஏழு ஆண்டுகளாக ஈராக் நாட்டையே தலைகீழாகப் புரட்டிப் பல பரிசோதனைகளை நடத்திய பின்னும், "ஈராக் வசம் இன்னும் ஆயுதங்கள் உள்ளதென்றும், சதாம் உசேன் ஒத்துழைக்க மறுக்கிறார்" என்றும்தான் திரும்ப திரும்பக் கூறிவருகிறது.

"ஈராக் வசம் பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்கள் இருக்கிறதா? இல்லையா? அப்படி இருந்தால் அவற்றை விரைந்து கண்டுபிடித்து அழிப்பதா வேண்டாமா?" என்பதையெல்லாம் விட, "இன்னும் தனக்கு அடங்கிப் போகாமல் முரண்டு பிடிக்கும் சதாம் உசேனை எந்த வழியிலாவது பதவியில் இருந்து தூக்கியெறிந்து விட்டு, அந்நாட்டில் தனக்குச் சார்பான ஒரு பொம்மையாட்சியை நிறுவிவிட வேண்டும்" என்பதுதான் அமெரிக்காவின் நோக்கமாக இருந்து வருகிறது. தனது இந்த நோக்கத்தை நிறைவேற்றும் கருவிகளாகத் தான் பொருளாதாரத் தடையுத்தரவையும், ஐ.நா. சிறப்புக் கமிசனையும் பயன்படுத்தி வருகிறது, அமெரிக்க வல்லரசு.

அமெரிக்காவின் கைப்பாவையாகவே ஐ.நா. சிறப்பு கமிசன் செயல்பட வேண்டும் என்பதால் தான், அக்கமிசன் ஐ.நா. பொது மன்றத்துக்குக் கட்டுப்பட்டதாக அமைக்கப்படவில்லை; அக்கமிசன் பாதுகாப்பு கவுன்சிலுக்குத் தான் பதில் கூறக் கடமைப்பட்டது. இக்கமிசனில் செயல்பட்டு வரும் 40 ஆய்வாளர்களில், பெரும்பாலோர் அமெரிக்காவையும், இங்கிலாந்தையும் சேர்ந்தவர்கள்; இராணுவம் மற்றும் உளவுத்துறைகளில் பணியாற்றிய பின்னணி கொண்டவர்கள்.

உதாரணமாக, இக்கமிசனில் பரிசோதனையாளராகப் பணியாற்றி வரும் ஸ்காட் ரிட்டர், வளைகுடாப் போரின் பொழுது அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியவர்; "ஈராக் மீதான அமெரிக்காவின் இராணுவத் தாக்குதல்கள் கடுமையானதாக இல்லை" என விமர்சித்து அமெரிக்க இராணுவத்தில் இருந்து வெளியேறியவர். "பள்ளிக் கூடமானாலும், அதிபர் மாளிகையானாலும் ஐ.நா. சிறப்பு கமிசன் நுழைய ஈராக் அரசு தடை போடக் கூடாது" என இப்பொழுது ஈராக்கை மிரட்டிக் கொண்டிருக்கிறார், சாதாரண பரிசோதனையாளரான ஸ்காட் ரிட்டர். இப்படிப் பட்ட பின்னணி கொண்ட ஐ.நா. சிறப்புக் கமிசன் நடுநிலையாக நடந்து கொள்ளும் என எதிர்பார்க்க முடியுமா?

சதாம் உசேன் அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்கு அடிபணிந்து, ஈராக்கை அமெரிக்காவின் மறுகாலனியாக்க வேண்டும்; இல்லையேல், பொருளாதாரத் தடையுத்தரவை மேலும், மேலும் இறுக்குவதன் மூலம், ஈராக் மக்கள் மத்தியில் சதாமுக்குள்ள செல்வாக்கைப் பலவீனப்படுத்தி, அவரை அதிகாரத்தில் இருந்து தூக்கியெறிவது என நப்பாசை கொண்டு திரிகிறது, அமெரிக்க ஏகாதிபத்தியம். இந்நிலையில் தான், வளைகுடாப் போரின் ஏழாமாண்டு நிறைவு தினத்தன்று ஈராக் அதிபர் சதாம் உசேன், "மே 20-ஆம் தேதிக்குள் பொருளாதாரத் தடையுத்தரவை நீக்க வேண்டும்" என அறிவித்துள்ளதோடு, அமெரிக்க இராணுவத்தை எதிர் கொள்ள தொண்டர் படையொன்றைக் கட்டவும் முயன்று வருகிறார்.

ஈராக்கின் இந்த அறிவிப்பைக் காட்டி, அந்நாட்டின் மீது தாக்குதல் தொடுக்கும் முனைப்போடு பெரும் படை பலத்தை ஈராக்கைச் சுற்றி மீண்டும் குவித்து வருகிறது அமெரிக்கா; மேலும் தனது அரசியல் - இராணுவ பலத்தின் காரணமாக, ரசியாவின் எச்சரிக்கை, பிரான்சு, சீனா போன்ற பல்வேறு நாடுகளின் கண்டனங்கள் எதையும் ஒரு பொருட்டாக மதிக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தயாராக இல்லை. ஐ.நா. சிறப்புக் கமிசன் கோரியபடி, ஈராக் அதிபர் மாளிகையில் எட்டு இடங்களை அக்கமிசன் சோதனையிட ஈராக் ஒப்புக் கொண்ட பின்னும் கூட, அமெரிக்காவின் போர்வெறி தணிந்துவிடவில்லை. ஐ.நா. சபையோ அமெரிக்காவை நேரடியாகக் கண்டிக்கக் கூடத் திராணியற்றுக் கிடக்கிறது.

அமெரிக்காவின் இந்த அச்சுறுத்தல் நடவடிக்கைகளும், இராணுவத் தயாரிப்புகளும், பொருளாதாரத் தடையுத்தரவுகளும் ஈராக்கிற்கு எதிரானது மட்டுமன்று; இன்றும் தன்னை எதிர்த்துவரும் லிபியா, கியூபா, ஈரான் போன்ற நாடுகளுக்கும், நாளை எந்தவொரு நாடும் தன்னை எதிர்க்கத் துணிந்தால் அதற்கும் ஈராக்கின் கதிதான் நேரும் என மறைமுகமாக அமெரிக்கா விடுத்துள்ள எச்சரிக்கையுமாகும். சுருக்கமாகச் சொன்னால், ஈராக்கைத் தாக்குவதன் மூலம் உலகெங்கும் தனது ஒற்றைத் துருவ மேலாண்மையை எதிர்ப்பின்றி இறுக்கிக் கொள்ளவே அது எத்தணிக்கிறது.

• ரஹீம்

## தொழிலாளர்களின் வேதனையும் ஏ.ஐ.டி.யு.சி.-ன் 'சாதனை'யும்

கோவைக்கு அருகில் உள்ள காரமடையில் இயங்கி வரும் "ஸ்ரீ லட்சுமி காயத்ரி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்" எனும் நிறுவனம் த.மா.கா.வைச் சேர்ந்த கோவை மேயர் வி. கோபாலகிருஷ்ணனுக்குச் சொந்தமானது. கிட்டத்தட்ட 400 தொழிலாளர்கள் இந்நிறுவனத்தில் வேலை பார்த்து வருகின்றனர். இந்நிறுவனத்தின் மூலம் பல கோடி ரூபாய்களை இலாபமாக அள்ளிச் சென்ற வி. கோபாலகிருஷ்ணன், அந்த இலாபத்தை மீண்டும் இந்த நிறுவனத்தில் மறுமுதலீடு செய்யாமல், புதிய தொழில்களையும், சொத்துக்களையும் வாங்கிக் குவிப்பதற்குப் பயன்படுத்திக் கொண்டார். இப்பொழுது, பால் கொடுத்த தாயின் மார்பையே அறுப்பதைப் போல, இந்நிறுவனத்தை மூடிவிடத் தந்திரமாக முயன்று வருகிறார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகவே இந்நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு முறையாகவும், தொடர்ச்சியாகவும் வேலை தராமல், அத்தொழிலாளர் குடும்பங்களை அரைப்பட்டினி நிலைக்குத் தள்ளி, தொழிலாளர்கள் தாங்களாகவே வேலையை விட்டு நின்று விடும் நிர்பந்தத்தை உருவாக்கி வருகிறது, நிர்வாகம். இது ஒருபுறமிருக்க, கடந்த ஏழு ஆண்டுகளாக இங்கு பணியாற்றி வந்த 150 பதிலித் தொழிலாளர்களை கறிவேப்பிலையைப் போலத் தூக்கியெறிந்துவிட்ட நிர்வாகம், 150 நிரந்தரத் தொழிலாளர்களையும் வீட்டிற்கு அனுப்பி விடத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது.

நிர்வாகம் வேலை இல்லை எனக் கூறும் பொழுது, சட்டப்படி தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய பாதிச் சம்பளத்தைக் கூட முறையாகத் தருவதில்லை. இதில் பணிபுரியும் நிர்வாக ஊழியர்களுக்கு கடந்த ஏழு மாதங்களாகச் சம்பளம் தரப்படவில்லை. இதோடு, தொழிலாளர்களுக்கு கடந்த மூன்று ஆண்டுகளாகத் தரப்பட வேண்டிய போனசைத் தராமல் இழுத்தடிக்கும் நிர்வாகம், தொழிலாளர்களின் சேமநல நிதி (P.F.), இ.எஸ்.ஐ. போன்ற சலுகைகளையும் தராது மோசடி செய்துள்ளது. தொழிலாளர்களை அணி திரட்டியுள்ள ஏ.ஐ.டி.யு.சி. சங்கமோ, நிர்வாகத்தின் மோசடிகளுக்கு ஒத்துப்பாடி, "முதலாளி கொடுப்பதை வாங்கிக் கொள்ளுங்கள்" என வேதாந்தம் பேசித் திரிகிறது.

கோவையில் செயல்பட்டு வரும் தொழிலாளர் பிரச்சாரக் குழு, நிர்வாகத்தின் மோசடிகளையும், ஏ.ஐ.டி.யு.சி.இன் துரோகத்தையும் அம்பலப்படுத்தி துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளதோடு, அத்தொழிலாளர்களைத் தனது தலைமையில் அணி திரட்டிப் போராட முயன்று வருகிறது.

தகவல்: தொழிலாளர் பிரச்சாரக் குழு, கோவை.


படிப்பகம்

www.padippakam.com

# தேர்தல் புறக்கணிப்பு இயக்கச் செய்திகள்

பதினொருமுறை நாடாளுமன்றத்துக்கான தேர்தல்கள் நடந்து முடிந்து, காங்கிரசு, ஜனதா, தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய முன்னணியின் தலைமையில் அமைந்த பல்வேறு அரசாங்கங்களையும் மக்கள் கண்டு விட்டார்கள். ஆனாலும், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக் கூட, இது நாள் வரை நாட்டை ஆண்டு வந்திருக்கும் இந்த ஓட்டுக் கட்சிகளால் தீர்த்து வைக்க முடியவில்லை.

நேரு பாணி போலி சோசலிசப் பொருளாதாரக் கொள்கைகள் தோல்வி கண்டபின் கொண்டு வரப்பட்ட தாராளமயம், நாட்டின் பொருளாதாரத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில் வந்த 12-ஆவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் "நிலையான ஆட்சி" என்ற முழக்கத்தை முன் வைத்து, ஓட்டுக் கட்சிகள் பிரச்சாரத்தில் குதித்தன.

ஆனால், இந்த "நிலையான ஆட்சி" மக்களுக்குத் தரப்போவதெல்லாம் மேலும் கடுமையான சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் தான் என அம்பலப்படுத்தி, மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி - இம்மூன்று அமைப்புகளும் ஒன்றிணைந்து, தமிழ்நாடெங்கும் தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் நடத்தின. "முதலாளித்துவ நாடாளுமன்ற அரசியல் அமைப்பு முறையைப் புறக்கணிப்போம்; புரட்சிகர மக்கள் ஜனநாயகத்தை நிறுவிடப் போராடுவோம்" என்ற புரட்சிகர முழக்கத்தை முன் வைத்து, சுவரெழுத்து, துண்டுப் பிரசுரம், பொதுக்கூட்டம், தெருமுனைக் கூட்டம் என இத்தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் நடத்தப்பட்டது.

• பென்னாகரத்தில் 10.02.98 அன்று விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பாக, பென்னாகரம் பேருந்து நிலையம் அருகே தேர்தல் புறக்கணிப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்திற்கு பென்னாகரம் வட்ட வி.வி.மு. அமைப்பாளர் தோழர் அருள் தலைமை தாங்க, பு.மா.இ.மு. தோழர் ஜெயகாந்த் சிங் சிறப்புரையாற்றினார். மேலும், வி.வி.மு. மாவட்ட அமைப்பாளர் ஆம்பள்ளி முனிராஜ், மற்றும் தோழர்கள் ஆனஸ்ட், சாமிக்கண்ணு ஆகியோரும் உரையாற்றினர். 1200-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரண்டுவந்து, வி.வி.மு.வின் இத்தேர்தல் புறக்கணிப்புப் பொதுக்கூட்டத்திற்கு ஆதரவு தந்தனர்.

இவ்வியக்கத்தையொட்டி, பென்னாகரம் பகுதியெங்கும் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி வி.வி.மு.வினரால் எழுதப்பட்டிருந்த சுவரெழுத்துகளை அழித்துவிடும்படி வேண்டுகோள் விடுத்து மாவட்ட ஆட்சித் தலைவரும், வட்டாட்சியரும் வி.வி.மு. அமைப்பாளருக்குக் கடிதம் எழுதியிருந்தனர். இக்கடிதத்தை வி.வி.மு. தோழர்கள் ஒரு பொருட்டாக மதிக்காமல் போகவே, அதிகாரிகளே ஆட்களைக் கூட்டி வந்து சுவரெழுத்துக்களை அழித்து, இந்திய ஜனநாயகத்தின் மானத்தைக் காத்துக் கொண்டனர்.

தேர்தல் தினத்தன்று கள்ளிபுரம் கிராமத்தில் பு.மா.இ.மு. தோழர்கள் ஓட்டுச் சாவடிக்குச் செல்லும் வழியில் கழுதையைக் கொண்டு வந்து நிறுத்தி, "இந்தச் சின்னத்திற்கு ஓட்டுப் போடுங்கள்" என ஓட்டுப் பொறுக்கிகளைக் கிண்டல் செய்து, பிரச்சாரம் செய்தனர். ஓட்டுப் போட அவ்வழியே சென்ற கிராம மக்கள் இப்பிரச்சாரத்தைக் கண்டு, மனம் மாறி ஓட்டுப் போடாமலேயே திரும்பிச் சென்று விட்டனர். இதனால், அக்கிராமத்தில் 200-க்கும் குறைவான வாக்குகளே பதிவாகின.

• சென்னை நகரில் இயங்கிவரும் மக்கள் கலை இலக்கியக் கழகம், பிப்ரவரி 10, 11 தேதிகளில் சேத்துப்பட்டு, சாஸ்திரி நகர் பகுதிகளில் தேர்தல் புறக்கணிப்பு பொதுக் கூட்டங்கள் நடத்த போலீசிடம் அனுமதி கோரியிருந்தனர். ஆனால் போலீசோ, "இதனால் சட்டம் - ஒழுங்கு சீர்குலையலாம்" எனப் பொய்க் காரணத்தைக் கற்பித்து, இரு பொதுக் கூட்டங்களுக்கும் அனுமதி வழங்க மறுத்து விட்டதோடு, "இது அரசு உத்தரவு" எனக் கூறி தி.மு.க. அரசின் ஜனநாயக விரோதப் போக்கையும் போட்டு உடைத்தது.

ஆனாலும், ம.க.இ.க. தோழர்கள் அதே தேதிகளில் இவ்விரு பகுதிகளிலும் ஐந்து இடங்களில் தெருமுனைப் பிரச்சாரம் செய்ய முடிவெடுத்து, நடைமுறைப்படுத்தினர். மூன்றாவது இடத்தில் தோழர்கள் தெருமுனைப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தபொழுது 5 அதிகாரிகள் தலைமையில் மூன்று ஜீப்களில் போலீசு பட்டாளமொன்று வந்திறங்கியது. பிரச்சாரம் செய்து கொண்டிருந்த 25 பேரையும் கைது செய்ய முயன்ற போலீசின் அடாவடித் தனத்துக்கு தோழர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவே, 10 தோழர்களை மட்டும் போலீசு நிலையத்திற்கு அள்ளிச் சென்று, பின்னர் விடுவித்தது. தேர்தல் புறக்கணிப்பு சுவரொட்டிகள் பகுதியிலும், மின்சார இரயில்களிலும் ஒட்டப்பட்டன.

• கோவையில், தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டத்திற்கு போலீசு அனுமதி மறுத்துவிட்டது. எனினும், தேர்தல் புறக்கணிப்பு சுவரொட்டிகளைப் பகுதியெங்கும் ஒட்டிப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. தேர்தல் புறக்கணிப்பு சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த இரு தோழர்கள் கைது செய்யப்பட்டனர். "வாக்கு எண்ணிக்கை முடியும் வரை இவ்விருவரையும் பிணையில் விடக் கூடாது" என நீதிமன்றத்தில் வாதாடியது கோவை போலீசு. நீதிபதியும் போலீசுக்கு ஒத்து ஊதி, தோழர்களைச் சிறைக்கு அனுப்பி, கருத்துரிமைக்குச் சமாதி கட்டினார்.

• உசிலம்பட்டிக்கு அருகேயுள்ள பேரையூரில், புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம் தேர்தல் புறக்கணிப்பு சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்தது. இதனால் பீதியடைந்து போன போலீசு, தேர்தலுக்கு முதல் நாள் (15.02.98) அரசுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்கிறீர்கள் எனக் குற்றஞ்சுமத்தி, இரு தோழர்களை முன்னெச்சரிக்கை கைது செய்து, மதுரை மத்திய சிறையில் அடைத்தது. நீதி மன்றமும் தேர்தல் நடப்பதைக் காட்டி பிணை தர மறுத்து விட்டது. தேர்தல்கள் முடிந்த பின்புதான் அவ்விரு தோழர்களுக்கும் 23.02.98 அன்று பிணை கிடைத்தது.

• மதுரையில் 14.02.98 அன்ற தேர்தல் புறக்கணிப்பு பொதுக் கூட்டம் நடைபெற்றது. ம.க.இ.க. மாநில துணைச் செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினர். இப்பொதுக் கூட்டத்தின்பொழுது 1000-க்கும் மேற்பட்டு திரண்டிருந்த பொது மக்கள், கூட்டத்தின் இறுதிவரை இருந்து தேர்தல் புறக்கணிப்பு கருத்துக்களுக்கு ஆதரவு தந்தனர்.

• கம்பத்தில், தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டம் 16.02.98 அன்று கோம்பையில் நடைபெற்றது. இப்பொதுக் கூட்டத்தை ஒளிப்பேழையில் பதிவு செய்ய போலீசு முயன்றதை தோழர்கள் தடுத்து நிறுத்தி விட்டனர். இதனால் ஆத்திரமடைந்த போலீசு, பொதுக்கூட்டம் முடிந்தவுடனேயே எட்டு தோழர்களைக் கைது செய்ததோடு, அவர்களை மிருகத்தனமாகத் தாக்கியுள்ளது.

• திருச்சியில் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி எழுதப்பட்டிருந்த சுவரெழுத்துக்களை, மாநகராட்சியே தேடி தேடி அழித்து விட்டது. 17.02.98 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், ம.க.இ.க. மாநில இணைச் செயலர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். 1000-க்கும் மேற்பட்டு திரண்டிருந்த பொது மக்கள், "அனுமதிக்கப்பட்ட நேரத்தையும் மீறிப் பேசும்படி கோரி" துணிச்சலாகக் குரல் எழுப்பி, தேர்தல் புறக்கணிப்பு அரசியலுக்கு ஆதரவு தந்தனர்.

• தஞ்சையில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு தோழர் காளியப்பன் தலைமை தாங்க, பு.மா.இ.மு. தோழர் ஜெயகாந்த் சிங் சிறப்புரையாற்றினார். 2,000-க்கும் மேற்பட்ட பொது மக்கள் திரண்டு வந்து பொதுக் கூட்டத்திற்கு ஆதரவு தந்தனர். தேர்தல் புறக்கணிப்பு முழக்கங்களை மிகப் பெரிய அளவில் எழுதிக் கட்டப்பட்டிருந்த தட்டி, தஞ்சை நகரெங்கும் நல்ல வரவேற்பைப் பெற்றது.

• கரூரில் தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தின் முதற்கட்டமாக, சனவரி முதல் வாரத்திலேயே நகரெங்கும் பரந்த அளவில் சுவரெழுத்துப் பிரச்சாரம் மிக வீச்சாக எடுத்துச் செல்லப்பட்டது. இது மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற, ஓட்டுக் கட்சிகள் அடிவயிற்றிலோ புளியைக் கரைத்தது. ஓட்டுக் கட்சித் தலைவர்கள் ஒட்டு மொத்தமாகத் திரண்டு, தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் பற்றி மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்தனர். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவின் பேரில், கரூர் பகுதி பு.மா.இ.மு.


படிப்பகம்

www.padippakam.com

தரவின் பேரில், கரூர் பகுதி பு.மா.இ.மு. தோழர் தவமணி கைது செய்யப்பட்டார்; சுவரெழுத்துக்கள் அழிக்கப்பட்டன. 16.01.98 அன்று கைதான தோழர் தவமணி, 20.01.98 அன்று பிணையில் வெளியே வந்தார்.

''இந்த அரசுக்கு எதிரான கருத்துக்களைப் பேசுகின்றீர்கள்'' என மொட்டையாக ஒரு காரணத்தைக் கூறி, தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டத்திற்கும், தெரு முனைப் பிரச்சாரத்திற்கும் அனுமதி மறுத்து விட்டது போலீசு. 20.02.98 அன்று தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

ஏதாவது ஒரு வழியில் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சார இயக்கம் தொடர்வதைக் கண்டு எரிச்சல் அடைந்த போலீசு கும்பல், 21.02.98 அன்று மாலையில், தோழர்கள் தவமணி, பழனிச்சாமி வீடுகளில் அத்துமீறி நுழைந்து, தங்கள் ரவுடித்தனத்தைக் காட்டினர். தோழர்கள் இருவருமே வீட்டில் இல்லாததால், வீட்டுப் பெண்களைத் தரக்குறைவாகப் பேசி மிரட்டியதோடு, சுவரொட்டிகள் தயாரிக்கப் பயன்படுத்திவரும் வலை அச்சுப் பலகையைத் திருடிச் சென்றுவிட்டது போலீசு கும்பல்.

• வேலூரில் பொதுக் கூட்டம் - தெருமுனைக் கூட்டம் இரண்டிற்கும் போலீசு அனுமதி மறுத்து விட்டதால், தேர்தல் புறக்கணிப்பு சுவரொட்டி இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வூர்கள் தவிர, பள்ளிப்பாளையம், நெய்வேலி, ஜெயங்கொண்டம், சீர்காழி, சிவகங்கை, ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி பகுதிகளில், தேர்தல் புறக்கணிப்பு பிரசுரங்களைப் பொது மக்கள் மத்தியில் விநியோகித்து, போலி சனநாயகத் தேர்தலைப் புறக்கணிக்க கோரி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. பொதுக் கூட்டம் நடந்த அனைத்து இடங்களிலும் ம.க.இ.க.வின் புரட்சிகர நிகழ்ச்சி நடைபெற்றது.

தகவல்: ம.க.இ.க – பு.மா.இ.மு.
வி.வி.மு., தமிழ்நாடு.


''புதிய ஜனநாயகம்'' பற்றிய அறிக்கை
(4-வது பாரம், 8-ஆம் பிரிவுப்படி)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | சென்னை |
| 2. வெளியிடும் காலம் | : | மாதமிருமுறை |
| 3. அச்சிடுபவர் | : | இரா. சண்முகராசு |
| தேசிய இனம் | : | தமிழர் |
| முகவரி | : | எழில் பிரிண்டர்ஸ், 110, இரண்டாம் தளம், 63, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை-600 024. |
| 4. வெளியிடுபவர் | : | இரா. சண்முகராசு |
| தேசிய இனம் | : | தமிழர் |
| முகவரி | : | 25, அருணாசலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை-600 083. |
| 5. ஆசிரியர் | : | இரா. சண்முகராசு |
| தேசிய இனம் | : | தமிழர் |
| முகவரி | : | 25, அருணாசலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை-600 083. |
| 6. உரிமையாளர் | : | இரா. சண்முகராசு |
| தேசிய இனம் | : | தமிழர் |
| முகவரி | : | 25, அருணாசலம் தெரு, ஜோதிராமலிங்கநகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை-600 083. |

இரா.சண்முகராசுவாகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

1.3.1998

(ஒப்பம்)
இரா. சண்முகராசு
வெளியிடுபவர்


# கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் 150–ஆவது ஆண்டு நிறைவு: புரட்சிப் பயணத்தில் ஒன்றரை நூற்றாண்டு!

அனைத்துலகப் பாட்டாளி வர்க்க ஆசான்களான கார்ல் மார்க்சும், பிரடெரிக் எங்கெல்சும் கூட்டாகத் தயாரித்து, 1848 மார்ச் துவக்கத்தில் வெளியிடப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை, இன்று அதன் 151–ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை எனும் இச்சிறு நூலைப் போல, உலகில் வேறு எந்த நூலும் உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் மீது இவ்வளவு ஆழமான செல்வாக்கைச் செலுத்தியது இல்லை; மனித சமுதாயத்துக்கு ஒரு புதிய சகாப்தத்தைத் திறந்து வைத்ததுமில்லை.

கம்யூனிஸ்ட் அறிக்கையைப் போன்று உலகில் வேறு எந்தப் புத்தகமும் உலகின் எல்லா மொழிகளிலும் இவ்வளவு அதிக பதிப்புகளைக் கண்டதில்லை; இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான பிரதிகளும் விற்பனையானதில்லை.

அறிக்கை வெளிவந்து 42 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில், 1890–ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் அறிக்கையின் ஜெர்மன் பதிப்புக்கு எழுதிய முகவுரையில், "'அறிக்கை'யானது அதற்குரிய ஒரு வரலாற்றை உடையதாகும். அது வெளிவந்த காலத்தில், எண்ணிக்கையில் அதிகம் இல்லாத விஞ்ஞான சோசலிச முன்னணிப் படையினர் அதை ஆர்வத்தோடு வரவேற்றனர்... தற்போது சோசலிச இலக்கியம் அனைத்திலும், அறிக்கைதான் மிகவும் அதிகமாய் பல்கிப் பரவி, மிகப் பெரும் அளவுக்கு சர்வதேசியத் தன்மை கொண்ட படைப்பாகும். சைபீரியாவிலிருந்து கலிபோர்னியா வரை எல்லா நாடுகளிலும் கோடானுகோடி தொழிலாளர்களின் பொது வேலைத் திட்டமாகும் என்பதில் ஐயமில்லை" என்று எங்கெல்ஸ் எழுதினார்.

"நவீன கால முதலாளித்துவ சொத்துடைமையின் தகர்வு தவிர்க்க முடியாதபடி நெருங்கி வருவதைப் பிரகடனம் செய்வதே கம்யூனிஸ்டு அறிக்கையின் குறிக்கோள்". கடந்த ஒன்றரை நூற்றாண்டில் "உலக நிலைமைகள் எவ்வளவுதான் மாறியிருப்பினும், இந்த அறிக்கையில் குறிக்கப்படும் பொதுக் கோட்பாடுகள் ஒட்டு மொத்தத்தில் என்றும் போல் இன்றும் சரியானவையே.

"இந்த நூல் மேதாவிலாசத்தின் தெளிவோடும் ஒளியுடனும் ஒரு புதிய உலகக் கண்ணோட்டத்தை விவரிக்கிறது. சமுதாய வாழ்வுத் துறையை அனைத்து நிற்கும்படியான, முரணற்ற பொருள்முதல்வாதம், வளர்ச்சியைப் பற்றியும், மிகவும் முழுமையான, ஆழ்ந்த போதனையான இயக்கவியல், வர்க்கப் போராட்டம் பற்றியும், புதிய கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் படைப்பாளி என்ற வகையில் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, புரட்சிகரமான பாத்திரத்தைப் பற்றியும் ஒரு தத்துவம் — ஆகியவை இந்த உலகக் கண்ணோட்டத்தில் அடங்கியவை" என்று லெனின் கம்யூனிஸ்ட் அறிக்கையை சுருக்கமாகச் சித்தரித்தார்.

கம்யூனிஸ்ட் அறிக்கை வெறும் வறட்டுச் சூத்திரமாக இல்லாமல் செயலுக்கான வழிகாட்டியாக இருந்ததால், உலகெங்குமுள்ள பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் கம்யூனிசத்தைக் கண்டு அஞ்சி நடுங்கின. கம்யூனிஸ்டுகளை வேட்டையாடின. ஆனாலும் அம்மகத்தான வெல்லற்கரிய தத்துவத்தை அழித்திட முடியவில்லை. எனவே வெளியிலிருந்து தாக்குவதை விட உள்ளிருந்தே எதிரிகள் – துரோகிகளை உருவாக்கி கம்யூனிசத்தை அழித்துவிடச் சதி செய்தன. நவீன திருத்தல்வாதிகள் கம்யூனிசக் கோட்பாடுகளைப் புறக்கணித்து, கம்யூனிசத்தின் பெயரால் முதலாளித்துவத்துடன் கூடிக் குலாவினர். கம்யூனிஸ்ட் அறிக்கையின் வீரியமிக்க வாசகங்களைத் திருத்தி நீர்த்துப் போகச் செய்ய முயற்சித்தனர். ஏகாதிபத்தியவாதிகளோடு சேர்ந்து சதி செய்து துரோகமிழைத்தனர். "கம்யூனிசம் தோற்றுவிட்டது" என்று ஏகாதிபத்திய உலகம் எக்காளமிட்டது. ஆனால் வெகு விரைவிலேயே ஏகாதிபத்தியங்களின் ஜனநாயக முகத்திரை கிழிந்து கந்தலாகிப் போனது. போலி கம்யூனிசத் துரோகிகளின் சிவப்புச் சாயம் வெளுத்தது.

மீள முடியாத நெருக்கடியில் சிக்கி, மரணப் படுக்கையில் வீழ்ந்து கிடக்கும் ஏகாதிபத்தியவாதிகள், மேலாதிக்கம், மறுகாலனியாதிக்கம் எனும் ஆயுதங்களுடன் இறுதித் தாக்குதலில் இறங்கியுள்ள நிலையில், வெல்லற்கரிய கம்யூனிசத்தின் மேன்மையை நிரூபித்து, கம்யூனிஸ்ட் அறிக்கை தனது 151–வது ஆண்டில் புரட்சிப் பயணத்தைத் தொடர்கிறது. அதன் வழிகாட்டுதலில் போலிக் கம்யூனிசத் துரோகிகளை முறியடித்து மார்க்சிய – லெனினியத்தைப் பற்றிப் பாதுகாப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சியில் வெல்வோம்!

படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/85
Reg. No. TN/MS(S) 622 / 98

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா





சென்னையில் நடந்த சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கம் தான் இந்தப் படம். இந்திய முதலாளிகள் கூட்டமைப்பும், இங்கிலாந்தின் வர்த்தகத் துறை அமைச்சகமும் இணைந்து நடத்திய இக்கருத்தரங்கில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் கலந்து கொண்டது. ஒலி வாங்கியின் முன் நின்று பேசுபவர் அவ்வாரியத்தின் தலைவர் திரு. தேவராஜ்.

''தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்கும், கசடுகளை அகற்றுவதற்கும் மாசு கட்டுப்பாடு வாரியமே கடன் வழங்கத் திட்டம் தீட்டி வருகிறது'' என இக்கருத்தரங்கில் அறிவித்தார் அவர். ''ஆஹா! தனியார் முதலாளிகள் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்திவிடாமல் தடுத்திட தமிழக அரசு எப்படியெல்லாம் முயலுகிறது'' என நாம் அகமகிழ்ந்து விட முடியுமா? ஒருபுறம் சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு விளைவிக்கும் டூபாண்ட், ஸ்டெர்லைட் போன்ற தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுத்துக் கொண்டு, மறுபுறம் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க இப்படித் திட்டங்களை அறிவிப்பது மோசடியானது. தனியார் தொழிற்சாலைகளில் மட்டுமல்லாமல், தமிழக அரசு நடத்தும் தொழிற்சாலைகளிலும் சுற்றுப்புறச் சூழல் விதிகள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதும் சந்தேகத்துக்குரியதே.

இதோ இந்தப் படத்தில் காண்பது ஏதோவொரு கண்மாயின் கரையோ அல்லது மணற்குன்றோ அல்ல. மாறாக, சென்னைக்கு அருகே இயங்கி வரும் தமிழக அரசுக்குச் சொந்தமான வட சென்னை அனல் மின் நிலையம், தனது தொழிற்சாலையில் நிலக்கரி எரிக்கப்படுவதால் கிடைக்கும் சாம்பலை, சப்பாக்கம் எனும் கிராமத்தில் இப்படி மலை போல் குவித்து வருகிறது. சாம்பலைக் கொட்டி வைப்பதற்காகவே, அக்கிராமத்து மக்களுக்குச் சொந்தமான விளை நிலங்களையெல்லாம் அற்ப விலை கொடுத்து சட்டபூர்வமாக அபகரித்துக் கொண்டது, தமிழக அரசு.

விளைநிலம் பறிபோனதால் வந்த வறுமை ஒருபுறம் என்றால், இங்கு கொட்டப்படும் சாம்பல் அம்மக்களுக்கு பலவித தோல் வியாதிகளை வாரி வழங்கி வருகிறது. காற்றோடு சேர்ந்து பறந்து வரும் சாம்பலையும் சேர்த்துதான் அவர்கள் சுவாசிக்க வேண்டியிருக்கிறது. உடம்பெங்கும் ஒட்டிக் கொள்ளும் சாம்பலால், அரிப்பு ஏற்பட்டு, தோல் பாளம் பாளமாக வெடித்து இரத்தம் கசிவதும், சிரங்கும், வேனற் புண்களும் உடம்பெங்கும் வெடித்துச் சீழ் வடிவதும் - இப்படி குழந்தைகளும், பெரியவர்களும் அனுபவித்து வரும் துன்பத்தைச் சொல்லி மாள முடியாது. மின் நிலையத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீரால் நிலத்தடி நீர் மாசுபட்டுப் போனதால், அதிகாரிகள் மனது வைத்தால்தான் அம்மக்களுக்குக் குடிநீர்கூட கிடைக்கும். ''எங்களை வேறு எங்காவது குடியமர்த்துங்கள்'' என்ற அம்மக்களின் அழுகுரலை, தேர்தல் சமயத்திலும் கூட எந்தவொரு ஓட்டுக் கட்சியும் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

ஐந்து நட்சத்திர விடுதியின் குளிர்பதன அறையில் அமர்ந்து கொண்டு, ''சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம்'' என அதிகார வர்க்கம் எழுப்பும் வெற்றுக் கூச்சல் ஒருபுறம்; சுற்றுப்புறச் சூழல் மாசுபட்டு வாழ்விழந்தவர்கள் எழுப்பும் அபயக் குரலைக் கண்டு கொள்ளாமல் ஒதுக்கித் தள்ளும் அதிகார வர்க்க அலட்சிய மனோபாவம் மறுபுறம். இதற்கு நாம் முற்றுப்புள்ளி வைப்பது எப்போது?



படிப்பகம்